

கல்கி
KALKI
15-6-1958
30
நயா
பைசா

# தனது சட்டையே வெண்மையென நினைத்தவன் ரின்ஸோவினுல் வெளுக்கப்பட்ட ராமுவின் சட்டையைப் பார்த்ததும் பிரமித்தான்



ரின்ஸோவினுல் வெளுக்கப்பட்ட துணிகள் கண்ணைப்பறிக்கும் வெண்மை யுடையவை—பார்த்த மாத்திரத்தில் பளிச்சிடும் உன்னதமான வெண்மை! உங்கள் குடும்பத்தின் சகல சலவைகளுக்கும் ரின்ஸோ உபயோகித்துப் பாருங்கள்! அதன் விறுவிறுப்பான நுரை எவ்வளவு இலகுவாகவும் விரைவாகவும் அழுக்கை அறவே அகற்றிவிடுகிறது. துணிகளுக்கு எவ்வளவு அற்புதமான சுத்தம் அளிக்கிறது என்பதைக் கண்டு திருப்தி அடைவீர்கள். ஞாபகமிருக்கட்டும், அடித்துத் துவைக்கவோ, அழுத்தித் தேய்க்கவோ தேவை யில்லை!

வெள்ளைத்துணிகள் அதிவெண்மையாவதற்கும், வர்ணத் துணிகள் அதிகப் பிரகாசமடைவதற்கும் ரின்ஸோ சலவைப் பவுடர் உபயோகியுங்கள்!

பெரிய சைஸ் உபயோகியுங்கள்—அதனுல் சிக்கனம் அதிகம்.




## அதி வெண்மையாக வெளுப்பது ரின்ஸோ

உங்கள் வேலையை இலகுவாக்கும் அற்புத சோப் பவுடர்!

R. 17-50 TM

பம்பாயிலுள்ள ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட்டின் தயாரிப்பு

# கல்கி

## பொருளடக்கம்


**அரசியல்**

| | | | | |
|---|---|---|---|---|
| பலாத்காரமும் ஒற்றுமையும் | (தலையங்கம்) | ராஜாஜி | ... | 3 |
| தீர்த்தி அகம்பாவம் | | ... | ... | 4 |
| முட்டை வெடித்தது ! | (கார்ட்டூன்) | விஜி | ... | 5 |
| என்ன சேதி ? | | ... | ... | 6 |


**கதைகள்**

| | | | |
|---|---|---|---|
| பாவை விளக்கு | அகிலன் | ... | 27 |
| கடைசிக் குருத்து | மாயாவி | ... | 51 |
| குமரி முத்து (பாப்பா மலர்) | சேத்தூர் கூத்தன் | ... | 58 |
| பொங்கிவரும் பெருநிலவு | கி. ராஜேந்திரன் | ... | 62 |
| அன்பின் வழி | ஜ. சாமிநாதன் | ... | 75 |
| கஞ்சனூர்க் காளை | லால்குடி கிருஷ்ணமூர்த்தி | ... | 83 |
| சிவப்பு விளக்கு | ஸ்ரீமதி டி. எஸ். கோதண்டராமன் | ... | 89 |

**கட்டுரைகள்**

| | | | |
|---|---|---|---|
| வள்ளுவர் வாசகம் | ராஜாஜி | ... | 11 |
| சர்வதேசப் பள்ளிக்கூடம் | பி. ஜி. கிருஷ்ணய்யா, நியூயார்க் | ... | 14 |
| நாட்டு வைத்தியம் | ஸ்ரீஹரி | ... | 17 |
| கோகலே கழகம் | எஸ். வி. எஸ். | ... | 21 |
| செல்வமும் சுதந்திரமும் | க. சந்தானம் | ... | 43 |


"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; சம்பவங்களும் கற்பனையே.


ஐஸ் டீ
அற்புதமானது!
ஏனெனில் எலுமிச்சை
ரசத்துடன் கலந்த
தேநீர்
களைப்பைப் போக்கி
குளிர்ச்சி
யளிக்கிறது




மலர் 17 | இதழ் 46

தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

விளம்பி௵ ஆனி௴ 1௳


# பலாத்காரமும் ஒற்றுமையும்

## ராஜாஜி

இலங்கை மந்திரிகளும் இந்திய மந்திரிகளும் பாகிஸ்தான் மந்திரிகளும் உலக சரித்திரத்தை இன்னும் அதிகமாக ஊன்றிக் கவனித்துப் படிக்க வேண்டும். சரித்திர புருஷர்களுடைய வெற்றிகளையும் தோல்விகளையும் படிக்க வேண்டும். ஆசிய நாட்டுப் பிரச்னைகள் வேறு; ஐரோப்பிய நாட்டுப் பிரச்னைகள் வேறு. 'ஐக்கியம்' 'ஒற்றுமை' என்கிற வெற்று மந்திரங்களைச் சொல்லிக்கொண்டு, ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் அழிக்கும் யோசனைகளை வற்புறுத்தி மோசம் போவதில் பயனில்லை.

ஒன்றுபடாத மனங்களை அவசரச் சட்டத்தின் பலத்தினாலும் ராணுவப் பலத்தினாலும் ஒன்று கூட்டித் துயரம் உண்டாக்கும் திட்டங்களை விட்டுவிட்டுப் பல்வேறு சமூகங்களின் உணர்ச்சி வேகங்களை உணர்ந்து அவர்களின் இதயங்களுக்குத் திருப்தி உண்டாக்கினாலேதான் மெய்யான ஒற்றுமை ஏற்படும்.

அப்படிச் செய்வதை விட்டு, ஒரு பாஷை, ஒரு திட்டம் என்றெல்லாம் பிடிவாதம் செய்வது மடமை. பெட்டிக்குள் அடங்காத பண்டத்திரளை அமுக்கியும் அழுத்தியும் பெட்டியின் மூடியை மூடிப் பூட்டப் பார்த்தால் பெட்டியின் கீல்கள் உடைந்து போய்ப் பண்டம் சிதறிப் போகுமே யொழிய ''ஒற்றுமை'' ஏற்படாது.

வெளி தேசத்து அதிகாரம் செய்த அட்டகாசத்தையெல்லாம், உள்நாட்டு சுதந்திர ஜனநாயகம் செய்ய இயலாது. ஆங்கில அதிகாரத்தின் கீழ் பல்வேறு சமூகங்கள் அடங்கி ஒற்றுமையாக வாழ்ந்தன. ஆனால் சுதந்திர இலங்கையில் பல்வேறு சமூகங்கள் ஒற்றுமையுடன் வாழ்வதற்கு வேறு முறைகளைப் பிரயோகிக்க வேண்டும்.

அடக்குமுறையினால் வெற்றி பெற முடியாது. வெற்றியும் கிடைக்காது. ஒற்றுமையும் தோன்றாது. இலங்கைத் தமிழர் இலங்கைப் பழங்குடிகள். இலங்கையின் முன்னேற்றத்தில் பெரும் பங்கு எடுத்து வந்தவர்கள். படிப்பு, பண்பாடு, தேசபக்தி எதிலும் முன்னணியில் நின்றவர்கள். அவர்களைச் சமாதானப்படுத்த முயலாமல் அடக்குமுறைப் பிரயோகத்தினால் என்ன பயன் பெற முடியும்? சுதந்திர நாடகம் வெட்கத்தில் முடியும். ஆங்கிலேயரும், அமெரிக்கரும் சிரிப்பார்கள். வெண்ணெயை நாங்கள் பங்கிட்டுக் கொடுக்கிறோம் என்று சொல்ல வருவார்கள்.

''மெஜாரிட்டி'', ''ஒற்றுமை'', என்கிற ஏமாற்றும் மந்திரங்களைப் பிடித்துக் கொண்டு தொங்காமல் மெய்யான ஒற்றுமையை நாடவேண்டும். தமிழருக்குப் பிரதேச சுதந்திரம் தந்துவிட்டுச் சமாதானம் செய்து கொண்டு இலங்கையின் பாதுகாப்புக்கும் வியாபாரத்துக்கும் மட்டும் சமஷ்டி ஆட்சி நடத்த வேண்டும். இலங்கைத் தீவு சிங்களவரது என்கிற மாயமானைத் தொடர்ந்து சென்றால், சீதை அரக்கன் வசமாவாள். இது இந்தியத் தமிழரின் எச்சரிக்கை, நட்பு மனப்பான்மையுடன் செய்யும் எச்சரிக்கை, கவனிக்கத் தகுந்த எச்சரிக்கை.

# ஹிந்தி அகம்பாவம்

“கோஹாட்டியின் தீர்மானமே இந்திய சர்க்காரின் முடிவு. ஹிந்தியைப் பற்றி அதுவே சர்க்காரின் கொள்கையும் திட்டமும். இதை அவசியமானால் சட்டபூர்வமாக இப்போதே அமுல் செய்வோம்” என்று பண்டித நேரு அவர்கள் மிக கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். மக்கள் சபையின் மொழிக் கமிட்டிக்கு இனி ஒரு வேலையும் இல்லை!

கோஹாட்டி தீர்மானத்தில் என்ன இருக்கிறது, என்னத்தை எல்லா ராஜ்ய சர்க்கார்களுக்கும் உத்தரவு மூலமாக அனுப்ப முடியும் என்பது நமக்கு விளங்கவேயில்லை.

ஹிந்தியே பாரத சர்க்கார் பாஷை. அந்தத் திட்டத்தை மாற்ற முடியாது என்பதை வற்புறுத்துவாரா? அல்லது கால வரம்பு இல்லை என்பதை வற்புறுத்துவாரா? ஏதும் நமக்கு விளங்கவில்லை. கோஹாட்டி தீர்மானத்தில் திட்டவட்டமான சரக்கு ஒன்றுமில்லை. அது ஒரு வழவழா தீர்மானம் என்பது நம்முடைய அபிப்பிராயம். அதுவே தமிழ் நாட்டில் எல்லாருடைய அபிப்பிராயமும், சென்னை சர்க்கார் மந்திரிகளைத் தவிர்த்து.

எருது பால் கறக்காது என்று ஊரார் சொல்லும்போது, “கட்டாயம் கறந்து தான் தீருவேன்!” என்று சொல்லுகிற மாதிரி இருக்கிறது நேருஜியின் பேச்சு.

அடக்குமுறைப் பிரயோகத்தைக் கொண்டு பாஷையைப் புகுத்தல் முடியாத காரியம். தமிழ்நாடு ஹிந்தியை ஒப்புக் கொள்ளாது. தமிழர்களுக்கு உறுதி மனப்பான்மை இல்லை; படிப்பதில் மிகப் பிரியம்; ஆனபடியால் ஹிந்தியைப் படித்து விடுவார்கள் என்று தில்லி சர்க்கார் நினைக்கலாகாது.

இந்த உன்மத்த மொழித் திட்டத்தை ஒழித்து, இருக்கிறபடி நடக்கட்டும் என்று விட்டு விடுவது நலம். அதுவே ஒற்றுமைக்கு வழி, முன்னேற்றத்துக்கு வழி. சென்னையிலிருந்து தில்லிக்குப் போய்த் திரும்பி வரும் சில உத்தியோகஸ்தர்கள் “தில்லியில் ஆபீசுகளில் எல்லாரும் நம்மோடு ஆங்கிலத்தில் முன்போல் பேசுகிறதில்லை. ஹிந்தியில் பேசுகிறார்கள். இதற்கு என்ன செய்கிறது?” என்று தீனசுரத்தில் புகார் செய்கிறார்கள்.

அகம்பாவத்திலிருந்து உதித்த இந்தத் திட்டம் வீண் என்பதை வற்புறுத்துகிறோம். ஹிந்தியைத் தாய்மொழியாகப் பெற்றவர்களுடைய மோகத்துக்கும் சுயநலத் திட்டத்துக்கும் மற்றவர்கள் இணங்க மாட்டார்கள்.

தமிழர்கள் அடங்கி ஒடுங்கிப் போவார்கள் என்று யாரும் நம்ப வேண்டாம். ஒரு மொழியினர் மற்றொரு மொழியினரைத் தங்களுக்குப் பணிந்து நடந்துகொள்ள வேண்டிய அடிமைச் சமூகத்தினராகப் பாவித்தால் விபரீத விளைவுகள் தோன்றும். ஒரு காலத்தில் ஆங்கிலேயர் தங்களுடைய அகம்பாவத்தைக் கொண்டு சாதித்தனர் என்று எண்ணுவது மடமை. அவர்கள் மகா சாமர்த்திய சாலிகள். ஆட்சி முறை சாஸ்திரத்தில் நிபுணர்கள். தற்போது ஹிந்திமொழியாளர்கள் செய்து வரும் சேஷ்டைகள் ராஜ நீதிக்கு விரோதம். தோல்வியில் முடியும்.

தமிழர்களும் உறுதியுடன் நடந்துகொள்ள வேண்டும். ஒருவரையொருவர் ஏமாற்றப் பார்க்கலாகாது. பயந்து சாகலாகாது. உண்மைக்கும் நியாயத்துக்கும் வெற்றி உண்டு என்று உறுதி செய்து கொண்டு தைரியமாக நடந்து கொள்ள வேண்டும். சத்தியமேவ ஜயதே. அகம்பாவம் ஜயிக்காது என்று பாரத சர்க்காரின் மந்திரத்தை வைத்தே நாமும் நடந்துகொள்ள வேண்டும்.

# நல்லயோசனை


உதவி ரயில்வே மந்திரி திரு எஸ். வி. ராமசாமி சமீபத்தில் சென்னைக்கு வந்து ஒரு கலக்குக் கலக்கி விட்டுப் போய் விட்டார். ஸ்ரீ எஸ். வி. ராமசாமி சுறுசுறுப்பான இயல்பும், முற்போக்கான பல கருத்துக்களும் கொண்டவர். அவர் விழுப்புரம் வரை மின்சார ரயில் போடுவதற்குப் பதில் செங்கல்பட்டு வரை போட்டு விட்டு, அதில் மிச்சப்படும் தொகையைச் சென்னை சென்டிரல் ஸ்டேஷனிலிருந்து அரக்கோணம் வரை மின்சார ரயில் போடுவதற்குச் செலவு செய்யலாம் என்றார். இந்த யோசனை வரவேற்கக் கூடியதே. அரக்கோணம் பகுதியிலிருந்து சென்னைக்கு வரும் மக்கள் துரித கால ரயில் வசதியின்மையால் பல தொல்லைகளுக்கு உள்ளாகி வருகின்றனர். மேலும் சென்னை நகரம் தாம்பரம் பகுதியில் விரிவடைவது போல், அரக்கோணம் பகுதியில் விரிவடைவதில்லை. காரணம் போதிய போக்குவரவு சாதனம் இல்லாததுதான். மின்சார ரயில் வசதி ஏற்பட்டு விட்டால் புதுப்புது நகரங்கள் அப்பகுதியில் வரிசையாக எழும்! ஆகவே, பலவிதத்திலும் இது சிறந்த யோசனைதான். இதை அவர் விரைவில் செயற்படுத்துவார் என்று நம்புகிறோம்!




திரு எஸ். வி. ராமசாமி

இன்னொரு நல்ல யோசனையும் தெரிவித்தார். சென்னை சென்டிரல் ஸ்டேஷனையும், எழும்பூர் ஸ்டேஷனையும் பாதாள ரயில் மூலம் இணைக்க வேண்டும் என்றார். இம்முறை, லண்டன், நியூயார்க், டோக்கியோ போன்ற நகரங்களில் உள்ளது. இதே போல் நம் நாட்டிலும் ஏன் செய்யக் கூடாது என்கிறார். இந்த யோசனை இந்த இரண்டாவது திட்டகாலத்தில் நிறைவேறாவிடினும் அடுத்த திட்டங்களிலாவது நிறைவேறக் கூடாதா? என்கிறார். ஐம்பது வருஷங்கள் கழித்து நிறைவேறினாலும், முதன்முதலில் இந்தக் கருத்தை வெளியிட்டவர் திரு எஸ். வி. ராமசாமி என்ற பெயர் அவருக்கு உண்டு.

## முட்டை வெடித்தது!




## "விஷமம் பண்ணுதே!"




பாரதத்தின் எல்லையில் பாகிஸ்தான் அடிக்கடி கலவரம் நிகழ்த்தி வருவதைப் பாரதம் கண்டித்திருக்கிறது!

# என்ன சேதி?

## வருணனின் கருணை

சென்ற ஒரு வாரமாக சூரியதேவன் ரொம்பவும் கொடுமையாக ஆட்சி நடத்தி வந்தான். பாரத நாட்டின் வட பகுதியில் வெய்யில் தாங்கமாட்டாமல் நூற்றுக்கணக்கானபேர் இறந்து வருகிறார்கள் என்ற செய்தி பத்திரிகைகளில் வெளி வந்தபோது அவை பெரிதும் உள்ளத்தைச் சுட்டன.

சென்னையிலும் 106, 107 டிகிரி என்று வெய்யில் காய்ந்து, அனல் காற்று வீசி, மக்கள் பெருந்தொல்லைகளுக்கு உள்ளாகி வந்தனர்.

நேப்பாள நாட்டில் வருண பகவானின் கருணையை வேண்டி ஜபங்களும் பிரார்த்தனைகளும் நடத்தியிருக்கிறார்கள். அதன் பயனாக நேப்பாளத்தில் மழை வந்ததாகச் செய்தி வெளியாகியிருக்கிறது.

நேப்பாளத்தில் நடைபெற்ற வருண ஜபத்தின் பயனாகத்தானோ என்னவோ, சென்னையிலும் காற்றடித்து மழையும் பெய்து பூமியைக் குளிரச் செய்திருக்கிறது. "நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை!" என்ற அவ்வைப் பாட்டியின் வாக்கு பொய்த்துப் போகுமா, என்ன?

## சோக சம்பவம்

வெய்யில் காலத்தை ஒட்டினாற் போலவே, பரீட்சை முடிவுகள் வெளி விடும் காலமும் வருகிறது.

சிதம்பரத்தில் ஒரு மாணவன், பரீட்சையில் தேறவில்லை என்று தற்கொலை செய்து கொண்டதாகச் செய்தி வந்திருக்கிறது. இதைப் படித்துப் பரிதாபப் படாதவர் இருக்க முடியாது.

பரீட்சை என்னும் பாதகம் இப்படி ஆண்டுதோறும் உயிர் பலி வாங்கிவருவதற்கு ஏதாகிலும் சர்க்கார் பரிகாரம் தேடியே ஆகவேண்டும். "பரீட்சையில் தேறவில்லையானால் வாழ்க்கை முடிந்து விட்டது" என்பது போன்ற உணர்ச்சியைப் பள்ளிக்கூட ஆசிரியர்களும் பெற்றோர்களும் வளர்த்து விடுவதாலேயே இத்தகைய கொடுமைகள் நேரக் காண்கிறோம். வாழ்வு பெரிது. பள்ளிக்கூடப் பரீட்சையில் தேறவில்லை என்றால்வாழ்வு முடிந்து விடாது. வேறு எத்தனையோ வழிகள் திறந்திருக்கின்றன என்ற உணர்ச்சியை ஏற்படுத்த வேண்டியது பள்ளிக்கூட ஆசிரியர்களின் கடமை. இந்த உணர்ச்சியை வளர்க்கச் சர்க்கார் பள்ளிக்கூட நிர்வாகிகளுக்கு ஒரு அவசர உத்தரவு போட்டால்கூடத் தேவலை என்று நினைக்கிறோம்.

பரீட்சையின் முக்கியம் குறைந்தால் கேள்வித் தாள்கள் களவு போவது, பரீட்சைத் தேதிக்கு முன்னால் கேள்வித் தாள்கள் வெளியாவது போன்ற ஊழல்களும் மற்ற வகையான லஞ்ச ஊழல்களும் குறையும்; உண்மைக் கல்வி வளரும்.

## இடம் தேடும் படலம்

இனி கல்லூரிகளில் இடம் தேடும் படலம் ஆரம்பமாகி விடும். மாணவர்களும் பெற்றோர்களும் ஒவ்வொரு கல்லூரியாக ஏறி இறங்குவார்கள்.

சென்ற வருஷம் மூன்று வருஷப் பட்டப் படிப்பு வகுப்புகளுக்கு அப்படியொன்றும் நெருக்கடி ஏற்படவில்லை. அதற்கு மாறாக வேண்டிய இடம் காலியிருந்தது. கல்லூரி திறந்து வெகு நாட்களுக்குப் பிறகும் கல்லூரி முதல்வர்கள் மாணவர்களை வருந்தி வருந்தி அழைத்துக் கொண்டிருந்தார்கள். ஏறத்தாழ அதே நிலைமைதான் இந்த ஆண்டும் நீடிக்கலாம்.

தொழிற் கல்வி பயிற்றுவிக்கும் கல்லூரிகளில்தான் நிலைமை வேறுவிதமாக இருக்கும்; அதாவது இடத்துக்குக் கடும் போட்டியிருக்கும்!

கல்லூரி விஷயமிருக்கட்டும்! 'அ'னா 'ஆ'வன்னா கற்றுக் கொடுக்கும் முதல் வகுப்பு இரண்டாம் வகுப்புக்களில் இடத்துக்கு எவ்வளவு கிராக்கி என்கிறீர்கள். இடம் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது. எத்தனையோ சிபாரிசுகள் வேண்டியிருக்கின்றன. அப்படிக் கொண்டு வந்தும் கூசாமல் "இடமில்லை" என்று சொல்லி விடுகின்றனர்.

இதைப் பார்க்கும் போது கேரள சர்க்காரைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. பள்ளிக்கூடத்தில் சேர வரும் மாணவர்கள் எத்தனை பேராயினும் சேர்த்துக் கொள்ளும்படி உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். ஏற்கனவே, கேரள ராஜ்யம் நூற்றுக்குத் தொண்ணூறுபேர்கள் படித்தவர்கள் உள்ள ராஜ்யம். இனி கேட்க வேண்டாம். கம்யூனிஸ்ட் ஆட்சியில் நூற்றுக்கு நூறு பேர்கள் படித்தவர்களாகி விடுவார்கள்!

## மற்றொரு பணி

கேரள சர்க்கார் மற்றொரு நல்ல பணியும் செய்திருக்கிறார்கள். மற்ற ராஜ்யங்களிலிருந்து வந்து வாசிக்கும்

மாணவர்களின் வசதிக்காக மூன்று பள்ளிக்கூடங்களில் ஆங்கிலம் மூலம் பாடங்கள் கற்றுத்தர ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மற்ற ராஜ்யங்களிலிருந்து வருபவர்களின் சௌகரிய அசௌகரியங்களைக் கவனித்துக் கேரள சர்க்கார் இந்த ஏற்பாட்டைச் செய்ததற்குப் பாராட்ட வேண்டும்.

## நல்ல தொண்டு


புஷ்பங்களில் சிறந்தது எது? நகரங்களில் சிறந்தது எது? புத்தகங்களில் சிறந்தது எது—இப்படிப் போன்ற கேள்விகள் பலர் அடிக்கடி கேட்பார்கள். இந்தக் கேள்வி வரிசையில் தண்டனைகளில் கொடுமையான தண்டனை எது என்று ஒரு கேள்வி கேட்டுவிட்டால், பதில் சொல்லத் தெரியாமல் தவித்துப் போய் விடுவீர்கள்.

தண்டனைகளில் எல்லாம் கொடுமையான தண்டனை "**காத்துக் கிடப்பது**" என்பதுதான்.

பஸ்ஸுக்காகக் காத்துக் கிடப்பது, ரயிலுக்காகக் காத்துக் கிடப்பது போன்ற கொடுமையான தண்டனை வேறு என்ன இருக்க முடியும்?

சென்ற வாரம், சிங்கப்பூரிலிருந்து இந்தியா மார்க்கமாக ஐரோப்பா செல்லும் ஒரு ஆகாய விமானம் பழுதுபட்டுச் சென்னை விமான நிலையத்தில் நின்று விட்டதாம். அதைப் பழுது பார்த்து, மீண்டும் பறக்கவிட ஏழு மணி நேரம் தேவைப்பட்டது. இந்த விமானத்தில் மேல் நாட்டுக்குப் பிரயாணம் செய்யவந்திருந்த பிரயாணிகள் சென்னை விமான நிலையத்தில் காத்துக் கிடக்க வேண்டி நேரிட்டது. ஆனால் சென்னை விமான நிலையத்திலுள்ள "ஏர் இந்தியா இண்டர் நேஷனலை"ச் சேர்ந்தவர்கள் சென்னையில் காத்துக் கிடக்க நேர்ந்த வெளி நாட்டுப் பிரயாணிகளுக்கு அலுப்புத் தட்ட விடாமல் சென்னை நகரத்தைச் சுற்றிக் காண்பித்தார்கள்; சினிமாப்படம் போட்டுக் காண்பித்திருக்கிறார்கள். காத்துக் கிடக்க நேர்ந்த நேரத்தை இன்பமாகக் கழிக்க ஏற்பாடு செய்த நமது ஆகாய விமான நிர்வாகிகளை ஒரு பிரயாணி ரொம்பவும் பாராட்டிப் பேசிவிட்டுச் சென்றிருக்கிறார்.

இவர்கள் காட்டிய வழியை ரயில்வே நிலையத்தாரும் பின்பற்றினால் மக்களுக்கு எவ்வளவு சௌகர்யமாக இருக்கும்!




பஞ்சாப் பிரதமர் கெய்ரோனுக்கு எதிராகப் பலத்த எதிர்ப்பிருந்தும், பெரும்பான்மையான வோட்டைப் பெற்று, அவர் பிரதம மந்திரி பதவியைக் காப்பாற்றிக் கொண்டார். என்றாலும் அவர் நிலைமை இன்னும் கவலைக்கிடமாகத்தான் இருக்கிறது.

# அருள்வாக்கு

வாழ்க்கை முறை, வாழ்க்கைத்தரம் என்பதாக இப்போது தமிழில் புதிதாகச் சில வார்த்தைகள் அடிபடுகின்றன. இது ஆங்கில பாஷை விவகாரத்திலிருந்து ஏற்பட்டது. காலையில் எழுந்தது முதல் இரவில் படுக்கப் போகும் வரையில் நாம் என்ன செய்ய வேண்டும், என்ன நினைக்க வேண்டும், என்ன பேச வேண்டும் என்பதெல்லாம் தர்ம சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கிறது. இதை ஆசார அனுஷ்டானம் என்கிறோம்.

இந்த நித்திய ஆசாரங்கள் தேசத்தின் பல்வேறு பாகங்களில் ஓரளவு வேறுபட்டிருக்கின்றன. பொதுவாகப் பார்க்குமிடத்து ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு அம்சம் அதிக முக்கியமெனக் கருதப்படுகிறது. உதாரணமாக, கேரளத்தை எடுத்துக் கொண்டால், அனேகமாக ஒவ்வொருவரும் குளம் அல்லது ஆற்றில்தான் ஸ்நானம் செய்கின்றனர். ஈர வஸ்திரத்துடன்தான் கோவில்களுக்குச் செல்கின்றனர். வங்காளத்தில் எல்லா வகுப்பு விதவைகளும் தலை மயிரை எடுத்து விடுகின்றனர். கண்டிப்பாக ஏகாதசி யன்று உபவாசம் இருக்கின்றனர். அன்று ஜலம் கூட அருந்துவதில்லை. தங்கள் ஆகாரத்தைத் தாங்களே சமைத்துக் கொள்கின்றனர். சாதாரணமாக வங்காளிகள் மீன் சாப்பிடுவதானாலும் அன்று அவர்கள் மீன் சாப்பிடுவதில்லை. சில இடங்களில் சாப்பிடும்போது மடி அல்லது சுத்த வஸ்திரம் கட்டிக் கொள்கிறார்கள். உத்தரப் பிரதேசத்தில் ஜனங்கள் சாதாரணமாக மற்றவர் பாத்திரத்தில் தண்ணீர் குடிப்பதில்லை. ஒவ்வொருவரும் தனக்கெனத் தனியே தண்ணீர்ப் பாத்திரம் வைத்திருக்கிறார்கள். இப்படித் தேசத்தின் பல பாகங்களில் பல ஆசாரங்கள் அனுஷ்டானங்கள் உண்டு. 'யானையும் குருடர்களும்' என்ற கதையைப் போல் ஒவ்வொரு பாகத்தினரும் ஒவ்வொரு அம்சத்தை மாத்திரம் கொண்டு தாங்கள் அனுஷ்டிப்பதுதான் ஆசாரம், அதற்கு மாறுபட்டதெல்லாம் அனாசாரம் என்று நினைக்கிறார்கள்.

சுத்தமான ஆரோக்கிய வாழ்க்கை நடத்த சாஸ்திரங்கள் வழி கூறுகின்றன. அத்துடன் தர்மத்துக்கு விரோதமில்லாது ஊதியம் தேடும் வழியையும் உபதேசிக்கின்றன. ஆனால் தற்காலம் ஏற்பட்டுள்ள அனர்த்தம் யாதெனில் நமது அனுஷ்டான ஆசாரங்களை அநேகமாக மறந்து விட்டோம். செய்வதும் இல்லை. பல விஷயங்களில் மேனாட்டினரைப் பார்த்து நடந்து வருகிறோம். அத்தகைய வாழ்க்கை நமக்கு முற்றிலும் அநாவசியம் என்பதை உணர்வதில்லை.

—ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடி பீடம்.


ஸால்டோ
மொறுமொறுப்பான பிஸ்கட்
ஒன்றைத் தின்றாலே
மற்றொன்றைத் தின்பதற்கு
ஆவலூட்டுகிறது!
ஜே. பி.
மங்காராம்
அண்டு கோ.
குவாலியர்
JB-1




34

பிறருடைய செல்வத்தைப் பார்த்துப் பொறாமைப்படுகிறவனுக்குச் செல்வம் இருந்தும் இல்லாதது போலவே. அவனுடைய செல்வ நிலைமை வறுமை நிலையாகி விடுகிறது.

வறுமையினால் உண்டாகும் துன்பமெல்லாம் பொறாமைப்படுகிறவன் அனுபவிக்கிறான். செல்வம் இருந்தும் அது அவனுக்குச் சுகம் தருவதில்லை. ஏழை மனிதன் செல்வம் சம்பாதித்துத் தன் குறையைத் தீர்த்துக் கொள்ளலாம். அல்லது வேறு விதத்தில் சந்தோஷம் அடைய முடியும். ஆனால் பொறாமைப் பட்டுத் துக்கப்படுகிறவனுக்குத் துக்கம் தீரும் வழியில்லை. பிறனுடைய செல்வத்தால் இவனுக்குத் துக்கம் உண்டாகிறது. இது மருந்தில்லாத நோய். தன் தரித்திரத்தை ஒருவன் எப்படியோ முயன்று தீர்த்துக் கொள்ளலாம். பிறனுடைய செல்வத்தை இவன் எப்படிக் குறைக்க முடியும்? ஆகவே அதனால் இவன் படும் வேதனை தீருவதற்கு வழியில்லை. இந்த நோய் ஒருவனுக்கு இல்லாதிருந்தால் மிக க்ஷேமம்.

பொறாமை என்கிற வியாதி ஒருவனுக்கு இல்லையானால் அந்த ஆரோக்கிய நிலையை விடப் பெரிய செல்வம் வேறு இல்லை. அந்த ஆரோக்கிய நிலையில் உண்டாகும் சுகம் பெருஞ் செல்வத்துக்கு ஈடாகும். செல்வத்தை விட அது மேலானதே என்றும் கருதலாம்.

விழுப்பேற்றின் அஃதொப்பது
இல்லை;யார் மாட்டும்
அழுக்காற்றின் அன்மை
பெறின்.

விழுப்பேற்றின் — விழுமிய பேறுகளுக்குள், சிறிய பேறுகளுக்குள். அஃதொப்பது இல்லை— அதற்குச் சமானமானது இல்லை. அழுக்காற்றின் அன்மைபெறின் — அழுக்காறின்மை தோய்ந்த நிலையைப் பெற்றுவிட்டால்.


அழுக்காறு என்பது பிறர் செல்வத்தைக் கண்டதனால் உள்ளத்தில் தோன்றும் துன்பம். "அழுக்கறுத்தல்" என்பது பொறாமைப்படுதல்.

* * *

பிறனுடைய ஆக்கத்தைக் கண்டு மகிழ்வதற்குப் பதில் துக்கப்படுகிறவன் பாவத்தில் சிக்கியவன் ஆவான். இம்மையில் சுகமும் மறுமைக்குவேண்டிய தரும வாழ்க்கையும் அவன் விரும்பவில்லை என்றே வைத்துக் கொள்ள வேண்டும். இம்மையில் சுகம் விரும்புகிறவனாயின் பொறாமைப்பட மாட்டான். மறுமைக்குப் புண்ணியம் விரும்புகிறவன் பொறாமைக்கு இடம் கொடுக்க மாட்டான்.

அறன்ஆக்கம் வேண்டாதான்
என்பான் பிறன்ஆக்கம்
பேணாது அழுக்கறுப்
பான்.

பொறாமைப்படுகிறவன் கதி இம்மையிலும் சுகம் இல்லை; பாவம் செய்தவனாகி மறுமையிலும் சுகம் இல்லை. சுகம் விரும்புகிறவன் பொறாமை உணர்ச்சியை விலக்குவான். பிறர் சுகத்தைக் கண்டு தானும் சுகம் அடைவான். 'அழுக்கறுக்க' மாட்டான், அதாவது பொறாமைப்பட மாட்டான்.



## தபால் அதிகாரிகள் கவனிப்பார்களா?

கையெழுத்துப் பிரதிகளைப் பத்திரிகைகளுக்கு புக்போஸ்டில் அனுப்புவதற்குத் தனிச் சலுகை இருக்கிறது. ஆனால், சில நாட்களாகச் சில குறிப்பிட்ட இடங்களிலிருந்து அனுப்பும் கதைகள் பத்திரிகை ஆசிரியருக்குக் கிடைக்காமலே போய் விடுகின்றன. "Press Matter" என்று சொன்னாலுங்கூட, அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமலே விபரீதமாகக் கையெழுத்துப் பிரதிகளை உடைத்துப் பார்த்துப் பத்திராதிபர்களுக்கு அபராதம் விதித்து விடுகிறார்கள். எனவே, பல கதைகள் பத்திரிகாசிரியர்களின் பார்வைக்குப் போகாமலே அனுப்பியவரிடம் திரும்ப அனுப்பி அதிகக் கட்டணமும் வசூலித்து விடுகிறார்கள்.

"Press Matter" என்று இருந்தால் அதற்குத் தனிச் சலுகை அளிப்பதுதான் நியாயம் என்பதைத் தபால் அதிகாரிகள் உணர வேண்டும்.

கும்பகோணம்
3—6—58
அ. சீனிவாசன்

## பஞ்சாயத்துத் தேர்தல்

நன்னிலம் தாலூக்காவைச் சேர்ந்த சில கிராமங்களில் 1958-ம் வருடம் மே மாதம் 10-ந் தேதி முதல் பஞ்சாயத்துத் தேர்தல் நடந்து வருகிறது. அதில் தேர்தல் நடைபெறும் முதல் நாள், தேர்தலுக்கு நிற்க விரும்புவோர் அபேட்சைப் பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும். அதற்கு முதல் நாளே அந்தந்தக் கிராமங்களுக்குத் தேர்தல்நடத்தும் அதிகாரிகள் வந்து விடுகிறார்கள். அபேட்சைப் பத்திரத்தை காலை 9-மணி முதல் 11-மணி வரை தேர்தல் தேதிக்கு முதல் நாள் வாங்கிக் கொள்கிறார்கள். ஆனால், பஞ்சாயத்துத் தலைவர்களில் சிலர் தங்களுக்குப் போட்டி இல்லாமல் செய்து கொள்ளுவதற்காக 10-55 மணிக்கு ஒரு தொகுதியில் அபேட்சைப் பத்திரம் தாக்கல் செய்து, எவ்வளவு அபேட்சகர்கள் அந்தத் தொகுதியில் நிற்கிறார்களோ, அவர்களில் சிலரைப் பஞ்சாயத்துக்குக் கட்டவேண்டிய வரி பாக்கியிருக்கிறது என்று காரணம் சொல்லி, அதிகாரியிடம் சர்டிபிகேட்டு கொடுத்துத் தேர்தலுக்கு நிற்கத் தகுதி இல்லாதவர்களாகச் செய்து, போட்டி இல்லாமல் அந்த ஸ்தானத்துக்கு வந்து விடுகிறார்கள். அதிகாரியிடம் "எனக்கு வரி பாக்கி இல்லை, ஒரு வாரம் முன்பு தேர்தலுக்கு நிற்க வேண்டும் என்ற காரணத்துக்காக வரிஜாடாவையும் கட்டி விட்டேன். அதை விசாரணை செய்ய வேண்டும்" என்று தகுதி இல்லாமல் செய்யப்பட்ட அபேட்சகர்கள் கேட்டும், அதற்குத் தேர்தல் நடத்தும் அதிகாரி "தலைவர் அவ்விதம் சர்டிபிகேட் கொடுத்து விட்டால் எங்களுக்கு விசாரிக்க வேண்டிய அவசியமில்லை" என்று சொல்லி விடுகிறார்கள். "நீங்கள் சிவில் கோர்ட்டுக்குப் போகவேண்டியதுதான்" என்றும் சொல்லி விடுகிறார்கள்;

வெளி ஜில்லாக்களிலும், தாலூக்காக்களிலும் தேர்தல் அதிகாரியே அபேட்சைப் பத்திரம் கொடுத்தவுடன் அபேட்சகர்களுக்கு வரி பாக்கி இருக்கிறதா என்று பஞ்சாயத்துத் தலைவரைக் கேட்டு சர்டிபிகேட் வாங்கிக் கொண்டு, அந்த சர்டிபிகேட்டின் பேரில் அதே இடத்தில் விசாரணை செய்து பிறகுதான் அபேட்சகர்களைத் தகுதி உள்ளவர் என்றோ, அல்லது தேர்தலுக்கு நிற்கத் தகுதி இல்லாதவர் என்றோ முடிவு செய்கிறார்கள். அப்படியிருக்க, சில இடங்களில் மாத்திரம் வேறு விதமாக ஏன் நடைபெற வேண்டும் என்பது தெரியவில்லை.

தேதியூர்
25—5—58
என். நடராஜன்

## செவி சாய்க்காததேன்?

திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள உடபி என்னும் கிராமத்துக்கு இலங்கையிலிருந்து அனுப்பப்படும் கடிதங்களோ அல்லது பத்திரிகைகளோ குறிப்பிட்ட விலாசத்துக்குப் பட்டுவாடா செய்யப்படாமல் இலங்கைக்கே திரும்பி வந்து விடுகின்றன. இதுபற்றிச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பலமுறை எழுத்து மூலமாகத் தெரிவித்தும் அவர்கள் சற்றும் செவிசாய்க்காமல் இருப்பது மிகவும் வருந்தத் தக்கதாகும்.

யாழ்ப்பாணம்
25—5—58
ஜே. ஜேம்ஸ் பாறுண்டோ

## படாதிபதிகள் கவனிப்பார்களா?

ஏ. வி. எம். மின் 'ஹம் பஞ்சி ஏக் டால்கே' என்ற சிறுவர்கள் படத்துக்கு வழங்கிய பிரதம மந்திரியின் பரிசளிப்பு தமிழ் மக்களிடையே பெருமைக்கு இடம் அளித்திருக்கிறது. சில வருடங்களுக்குமுன் சென்னையில் தயாரிக்கும் ஹிந்திப் படம் என்றால் வட நாட்டார்கள் எல்லையற்ற மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்றார்கள். காரணம், சிறந்த தயாரிப்பு அம்சங்கள் அந்தப் படங்களில் அமைந்திருந்தன.

காலச்சக்கரம் சுழலுகையில் ஜனங்களின் போக்கில் மாறுதல் ஏற்படுகிறது. பாமரர்களின் மனத் திருப்பத்தை ஆராய்வோமேயாயின், வாழ்க்கையின் சம்பவங்களைத் தத்ரூபமாகச் சித்திரிக்கும் படங்களே வெற்றி அடைகின்றன எனலாம். வங்க நாட்டிலிருந்து வெளிவந்த 'பாதேர் பாஞ்சாலி' 'அபராஜிதா' மற்றும் 'ஆவாரா', 'ஜாக்தே ரஹோ', 'ஜனக் ஜனக் பாயல் பாஜே', 'மதர்




இந்தியா' போன்ற ஹிந்திப் படங்களும் மேல் நாடுகளில் மிக்க செல்வாக்கைப் பெற்றிருக்கின்றன. மேற்கண்ட படங்களின் வெற்றிக்கு மூல காரணம் இரண்டே அம்சங்களாகும். ஒன்று, சமூகச் சீர்திருத்தக் கொள்கைகளை விஸ்தரிக்குமாறு அமைக்கப்பட்டுள்ள உள்ளத்தைத் தொடும் கதை அம்சம். மற்றொன்று நமது தேசத்தின் பண்பாடுகளை விளக்கிக் கூறும் பொருட்டுத் தயாரிக்கப் பட்டுள்ள வரலாறுகள். குடும்பக் கஷ்டங்களையும், சமூகக் கோளாறுகளையும் நன்கு வெளிப்படுத்தும் சிறந்த படங்களாக மராட்டியிலும், வங்காளத்திலும் அநேக படங்கள் வெளி வந்திருக்கின்றன. சமீப காலமாக, தமிழ் நாட்டில் தயாரிக்கப்பட்டிருக்கும் ஹிந்திப் படங்கள் வட நாட்டாரின் உள்ளத்தைத் தொடும்படியாக அமையவில்லை.

பம்பாய்-22
24—5—58

பச்சை விசுவநாத்

## ஜனநாயகம் படும்பாடு!

நீங்கள் கல்கி இதழில் வெளியாகியுள்ள "தேவிகுளம் தேர்தல்" என்ற தலையங்கம் மிகவும் பொருத்தமானதாகும். தேவிகுளம் தேர்தலுக்குக் கேரள அமைச்சர்கள் ஒருவர்கூட வராமலிருந்தும் தமிழ் நாட்டிலிருந்து திரு காமராஜரும், திரு கக்கனும் பிரசாரத்துக்குச் சென்றதும், "ஜனநாயகம், ஜனநாயகம்" என்று ஓயாமல் பேசும் மந்திரிகள், 'ஜனநாயகம் எங்களால்தான் காப்பாற்றப்படுகிறது' என்று கூறுபவர்கள், ஜனநாயகத்தையே காற்றில் பறக்க விட்டு விட்டுத் தில்லியிலிருந்து வந்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டதும் ஜனநாயகத்துக்கே பெரும் அவமானமாகும். தேர்தலின் முடிவு அவர்களுக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

உத்தமபாளையம்
23—5—58

எம். நாகராஜன்

## குழப்ப வேண்டாம்

வரப்போகும் மெட்ரிக் முறை பற்றிய அறிக்கையொன்று சென்ற வாரம் 'கல்கி' யிலும் மற்றும் சில பத்திரிகைகளிலும் வெளியாகியிருந்தது. அதில் 1 கிலோகிராம்—1 சேர் 6 தோலா—86 தோலா என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது 80 தோலா கொண்டது 1 சேர் என்று ஆகிறது; ஆனால் தமிழ் நாட்டில் புழக்கத்தில் இருப்பது 24 தோலா கொண்ட சேர் ஆகும். இந்தியாவின் எல்லாப் பாகங்களிலும் ஒரே விதமான எடைகளும் அளவுகளும் புழக்கத்தில் இல்லை என்பதை அறிந்து கொண்டே, புதிய முறை எடைக்கும் இப்போதைய எடைக்கும் இடையேயுள்ள சம்பந்தத்தை ஏன் இவ்வாறு பொதுப் படையாகக் குறிக்கிறீர்கள்? சதாம்ச நாணய முறைக்காக வெளியிட்டதுபோல், மெட்ரிக் எடை அளவு விஷயத்தில் நாடு முழுமைக்கும் ஒரு பொதுவான பட்டியல் (Conversion table) தயாரிக்க முடியாது. ஆகவே இதற்கான அறிவிப்பு வெளியிடும் பொறுப்பை ராஜ்ய சர்க்கார்களிடமே மத்திய சர்க்கார் விட்டுவிட வேண்டும். ராஜ்ய சர்க்கார்கூட, ஒரு குறிப்பிட்ட அளவு அல்லது எடை ராஜ்யத்தின் பல்வேறு பகுதிகளில் வெவ்வேறான மதிப்புக்கள் கொள்ளும் பட்சம், அவற்றைப் பிரதேச வாரியாகத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும். இல்லாவிடில் மக்கள் வீணாகக் குழப்பமடைவார்கள்.

சிதம்பரம்
6—6—58

பி. எஸ். என். சுவாமி

## வாழ்த்துகிறோம்!

டாக்டர் ஏ. அனந்தநாராயண ஐயர் அவர்களின் புத்திரியான குமாரி டாக்டர் ஏ. கிரிஜா, சென்னை ரோட்டரி சங்கத்தின் கல்வி நிதி உதவி பெற்றுள்ளார். அதன் மூலம் அவர், அமெரிக்காவில் நியூஹேவன் ராஜ்யத்திலுள்ள யேல் பல்கலைக் கழகத்துக்குச் சென்று குழந்தை வைத்தியத்தில் விசேஷக் கல்வி பெறுவார். அவர் தற்சமயம் சென்னை ஸ்டான்லி ஆஸ்பத்திரியில், குழந்தை வைத்தியப் பகுதியில் டாக்டராகப் பணியாற்றி வருகிறார். ஜூன் மாதம் இருபத்தோராம் தேதி யன்று சென்னையிலிருந்து விமான மூலம் அமெரிக்க நாட்டுக்குப் புறப்படும் புதுமைப் பெண் குமாரி கிரிஜாவுக்கு வாழ்த்துக் கூறுகிறோம்.



# சர்வதேசப் பள்ளிக்கூடம்

**பி. ஜி. கிருஷ்ணய்யா, நியூயார்க்**

உலகத்தை அலைக்கழித்து வரும் பல பிரச்னைகளையும் தீர்க்க ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவிலே, பலப் பல ஸ்தாபனங்கள் இயங்கி வருகின்றன என்பது எல்லோரும் அறிந்ததாகும். ஆனால், அந்தச் சபையின் நிர்வாகத்தில் ஒரு பள்ளிக்கூடம் நடைபெற்று வருவது பலருக்கும் தெரியாமல் இருக்கலாம்.

அதை ஒரு சர்வதேசப் பள்ளிக்கூடம் என்றே சொல்ல வேண்டும். அதில் சுமார் நாற்பது நாடுகளைச் சேர்ந்த குழந்தைகள் கல்வி கற்று வருகிறார்கள். எனவே, அப்பள்ளிக்கூடம் ஒரு சர்வதேச சமுதாயமாகத் திகழ்ந்து வருகிறது. அங்குள்ள குழந்தைகள் தங்கள் தங்கள் தேச கலாசாரங்களுக்கு முரணின்றி, சர்வதேச சகோதர பாவத்துடன் கல்வி கற்று வருவது முக்கியமான அம்சமாகும்.

மேற்படி கல்விசாலையில் உள்ள குழந்தைகளுக்கு அவரவர்களுடைய விருப்பத்துக்கு இணங்க ஆங்கிலம், பிரஞ்சு, ஸ்பானிஷ், சீன மொழிகள் போதனை மொழிகளாக இருந்து வருகின்றன. அவசியமாயின், வேறு மொழிகளும் போதனை மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்படலாம்.

அந்தப் பள்ளிக்கூட நிர்வாகக் கமிட்டியில், ஸ்ரீ டி. எஸ். நாராயணன், ஈ.எஸ். ரெட்டி ஆகியோரும் மற்றும் பல நாடுகளைச் சேர்ந்த பிரமுகர்களும் அங்கம் வகிக்கிறார்கள்.

ஐ. நா. சபையில் ஊழியம் புரியும் அதிகாரிகள், சிப்பந்திகள், இங்கு வரும் தூது கோஷ்டியினர் போன்றவர்களின் குழந்தைகளுடைய நன்மைக்காகவே, இச் சர்வதேசப் பள்ளிக்கூடம் ஏற்பட்டுள்ளது.



சிறுவர் சிறுமியர் பூகோள பாடம் கற்கும் காட்சி

இது இல்லாவிடில், இங்கு வரும் ஐ. நா. சபை ஊழியர்கள், வாசிக்கவேண்டிய தங்கள் குழந்தைகளைத் தங்கள் நாடுகளிலேயே விட்டு விட்டு வரும்படி நேரும். அவ்விதம் விட்டு விட்டு வருவதால், அதிகச் செலவு ஏற்படுவதுடன், குழந்தைகளுடன் கூடிய குடும்ப வாழ்க்கையும் பாதிக்கப்படும் அல்லவா?

இத்தகைய பள்ளிக்கூடம் இல்லாவிடில் சில அதிகாரிகள், தங்கள் குழந்தைகளின் நன்மையை உத்தேசித்து ஐ. நா. சபையில் உத்தியோகம் ஏற்கத் தயங்கலாம். மேற்படி சபை நாளுக்கு நாள் அபிவிருத்தி அடைந்து வருவதால், அதில் ஊழியம் புரியும் அதிகாரிகள் குழந்தைகளையும் குடும்பத்தையும் தங்கள் தங்கள் நாடுகளில் அதிக காலம் விட்டு வைக்க விரும்பமாட்டார்கள். எனவே, அச் சபையின் ஆதரவில் எல்லா நாட்டுக் குழந்தைகளும் வாசிக்கக் கூடிய ஒரு பள்ளிக்கூடம் ஏற்பட்டிருப்பது, அதில் ஊழியம் புரியும் சிப்பந்திகளுக்கும் அவர்களுடைய குழந்தைகளுக்கும் வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது.

ஐ. நா. சபையில் ஊழியம் செய்யும் அதிகாரிகள் இங்கேயே தங்கியிருப்பதற்கு, அவர்களுடைய குழந்தைகளுக்குக் கல்வி அளிக்கும் இத்தகைய பள்ளிக்கூடம் அவசியம் என்பதையும் ஐ. நா. சபை உணர்ந்திருக்கிறது. மேற்படி பள்ளிக்கூடம் இதுவரையில் வாடகைக் கட்டடத்திலேயே இருந்து வந்திருக்கிறது.

ஒவ்வொரு வருஷமும் ஒவ்வொரு வகுப்பாக அது வளர்ச்சி அடைந்து வருவதால், தற்போது அதற்குப் புதிய கட்டடம் நிர்மாணிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அதற்குத் தேவையான கட்டடம் கட்டவும், அதை நீடித்து நடத்தவும் சுமார் ஐம்பது லட்சம் டாலர் தேவையாக இருக்குமென மதிப்பிட்டிருக்கிறார்கள். அக் கட்டடம் ஐ. நா. சபையின் சொத்தாகவே இருக்கும்.

இவ்விதமாக, சின்னஞ்சிறு குழந்தைகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட பள்ளிக்கூடம், ஐ. நா. சபையைச் சேர்ந்த மாபெரும் கல்வி ஸ்தாபனமாகத் திகழ்வதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து வருகின்றன.

## உங்கள் அழகே உங்களுக்கு ஆபரணம்...

## உங்கள் முக சருமத்தை மென்மையாயும்

## அழகாயும் வைக்க

# பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்

## உபயோகியுங்கள்

மிருதுவானதும், குளுமையானதுமான பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உங்கள் சருமத்திற்குப் பாதுகாப்பு அளித்து, அதை அழகுடனும், இளமையுடனும் வைக்கும்! இது எண்ணெய்ப் பசை யற்றது. மற்றும் முகத்தில் தடவிய சிற்றே விநாடிகளில் மறைந்து விடுகிறது. பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் தடவி பவுடர் போட்டுக் கொண்டால் பவுடர் மணிக்கணக்கில் படிந்திருக்கும்.



### சருமத்தை சுத்திகரிக்கும் அற்புதமான க்ரீம்

தினமும் இரவில் பாண்ட்ஸ் கோல்டு க்ரீமை உங்கள் முகத்தில் தடவுங்கள். அது சருமத்தை சுத்தம் செய்து, சருமம் மிருதுத்தன்மையற்றுப் போவதையும், சருமத்துவாரங்கள் வரண்டு போவதையும் தடுக்கிறது. அன்றாடம் பாண்ட்ஸ் கோல்டு க்ரீம் உபயோகித்து, உங்கள் அழகுக்கு தகுந்த பாதுகாப்பு அளியுங்கள்.




### இலவச புத்தகம்

"LOVELIER WITH POND'S" என்ற அழகு இலவச புத்தகத்தை வரவழையுங்கள். இதில் அழகு பராமரிப்புபற்றி உபயோகமான குறிப்புகள் அடங்கியுள்ளன. பி. ஓ. பாக்ஸ் 1612, டிபார்ட்மெண்ட் தெ. 25V, பம்பாய்-1 என்ற விலாசத்திற்கு 25 நயா பைசா ஸ்டாம்புடன் எழுதவும்.

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பரேட்டட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பெற்றது)


புகழ்பெற்றது...
அப்பாதுரை
பொடி
ஆ. அப்பாதுரை முதலியார் & சன்
P.B. No: 189, 55, ஆச்சாரப்பன் தெரு, சென்னை-1.

# நாட்டு வைத்தியம்

ஸ்ரீஹரி

## 61. "நகத்தால் கிள்ளுவதை......"

நகத்தால் கிள்ளுவதை வளர விட்டுப் பிறகு கோடரியால் வெட்டும் நிலையைப் பெறலாமா? தக்க சமயத்தில், ஆரம்பத்திலேயே—சிகிச்சை செய்யாமல் இருமலை உபேக்ஷிப்பது மேற்சொன்ன பழமொழிக்கு ஒப்பானதாகும்.

அவ்விதப் பிழை ஏற்படாமல் இருக்கப் பல்வகைப்பட்ட சுவாசாசய ரோகங்களில் - நோயுடன் போரிட்டுத் தடுக்கவும்-தவிர்க்கவும் முயற்சி செய்யும் இயற்கையின் ஈவிரேவைபல்களுக்கு உறுதுணையாக உதவக் கூடிய மருந்துகள் பலவற்றைத் தெரிவிப்பது நல்லதுதானே?

முன் கட்டுரையில், இவ்வகையைச் சேர்ந்ததும், சித்தர் தமிழில் வகுத்ததுமான ஒரு சில மருந்துகளைப் பற்றித் தெரிவித்தாயிற்று.

6. ஆடாதோடை என்ற ஒரு செடியுண்டல்லவா? இதன் இலையைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி ஆவியில் (இட்டிலியைப் போல்) வேக விட்டுப் பிழிந்த ரஸத்தில் 10 – 20 துளிகள்—சில துளி தேனுடன் சேர்த்துக் குழைத்துத் தினம் 2 முதல் 4 வேளையும் கொடுத்துவர இது வரையில் சொன்ன பிணிகள் யாவும் நீங்கும். குறிப்பாக, இரத்தம் கலந்த சளியைத் துப்புவது, இருமல், இளைப்பு நோய்—அதனுடன் கூடிய சுரம் ஆகியவையும் காமாலையும் குணமாகும்.

7. ஆடாதோடையின் இலையைக் கொண்டு குடிநீர் காய்ச்சி, அது ஆறினதும் சிறிது தேனுஞ் சேர்த்துக் குடிக்கக் கொடுக்கலாம். மேற்சொன்ன பிணிகளெல்லாம் தீரும்.

8. ஆடாதோடையின் இலைகள் இரண்டு மூன்றைக் குறுக வரிந்து, இத்துடன் ஏலக்காய் ஒன்றையும் நசுக்கிச் சேர்த்து, கால்படி வெந்நீரில் இரண்டு மணி நேரம் ஊற வைத்திருந்து, பிறகு மருந்தைக் கசக்கி-ஊறல் நீரை இறுத்து வடிகட்டி 1-2 அவுன்ஸ் வீதம் 1-4 வேளை தினமொன்றுக்குக் குடித்தால், வாதத்தால் உண்டாகும் வறட்டு இருமல், சுரம், இவை நீங்கும்.

9. ஆடாதோடையின் கொழுமையான இலைகள் இரண்டு மூன்றைப் பொடிப் பொடியாகக் கத்திரித்து, ஒரு புதிய மண் சட்டியில் இட்டுச் சிறிது தேனும் கூட்டி எரிக்க, ஒருவித நறுமணம் வீசும். அத்தருணத்தில் அதிமதுரம் அரை வராகன் எடை, திப்பிலி கால் வராகன்எடை தாளிசபத்திரி கால் வராகன் எடை,சித்தரத்தைஅரைக்கால் வராகன்எடை ஆகியவற்றை ஒன்றிரண்டாக நசுக்கி முன்சொன்ன வறுப்பு மருந்துடன் கூட்டி, அரைப்படி சுத்த நீர் விட்டு, அரைக்கால் படியாகக் குறுக்கி வடிகட்டி, காலை மாலை இரு வேளையும் கொடுத்து வர, கோழையுடன் கூடிய இருமலில் கோழைக் கட்டு அறும்; எளிதில் துப்ப முடியும். இருமல், இரைப்பு, சுரம் ஆகியவை நீங்கும்.

10. ஆடாதோடையின் இலையை உலர்த்திச் சுருட்டாகப் புகை பிடித்தால் இரைப்பு நோய் தீரும்.

11. ஆடாதோடையின் இலை, வேர் இவற்றுடன் சிறிது மிளகும் கூட்டி ஊறல் குடிநீர் செய்து குடித்தால் இரைப்பு, வயிற்று உப்பிசம், ஈளை இருமல், சுரம் ஆகியவை சமனமாகும்.

12. ஆடாதோடையின் இலையை இடித்துப் பிழிந்த சாற்றை ஒரு புதிய மண் பாண்டத்திலிட்டுக் காய்ச்சி மெழுகுபதமாகும்போது இறக்கி வைத்துக் கொண்டு—வேளைக்கு இரண்டு முதல் ஐந்து துளி வீதம் தினமொன்றுக்கு, மூன்று நான்கு வேளை தனியாகவோ சிறிது திப்பிலிப் பொடியுடன் கூட்டியோ கொடுக்கவும் செய்யலாம்.

13. ஆடாதோடையின் வேரையும் கண்டங்கத்திரியின் வேரையும் குடிநீராகக் காய்ச்சியதில் திப்பிலியின் சூர்ணத்தை மேற்பொடியாய்க் கூட்டிக் குடித்தால் இருமல் நீங்கும்.

14. ஆடாதோடை வேர், கண்டங்கத்திரிவேர், சீந்தில்கொடி, இவற்றால் ஆன கஷாயத்தில் தேனும் சிறிது சேர்த்துக் கொடுத்து வருவதால் இருமலும் சளியும் போகும்.

15. கொடுமையான ரத்தக் கொதிப்பு இருமல், இரைப்பு ஆகியவற்றில் ஆடாதோடை, திராக்ஷை, கடுக்காய் ஆகியவற்றின் குடிநீரில் தேனும் கூட்டிக் கொடுக்கலாம்.

16. ஆடாதோடை வேர், கண்டங்கத்திரிவேர், சுக்கு, கொள்ளு இவற்றைக் குடிநீராகக் காய்ச்சி அல்லிக் கிழங்கின்

பொடியைக் கூட்டிக் குடித்தால் இரைப்புடன் கூடிய இருமல் தீரும்.

17. இஞ்சிச்சாறு, ஈர வெங்காயச சாறு, எலுமிச்சம் பழச்சாறு ஆகியவற்றைச் சமன் எடையில் கூட்டி அதில் வேளைக்கு ஒரு டீஸ்பூன் வீதம் தினம் இரண்டு வேளையாக மூன்று நாட்கள் சாப்பிட இரைப்பு இருமல் ஆகியவை போய் விடும்.

18. சயக்கொழுநது (இதை இண்டு என்று சிலர் சொல்லுவர்] தூதுளை, சங்கன் இலை, திப்பிலி, கண்டங்கத்திரி, சுக்கு இவற்றைச் சேர்த்துக் காய்ச்சிய கஷாயத்தைக் காலை மாலை குடித்துவர, இருமல் போகும். நிஜமாகவா என்கிறீர்களா? என்னைக் கேட்க வேண்டாம். தேரையர் சொல்கிறார்—இக் கஷாயத்தைக் குடித்தவருக்கு,

**"............இருமலுற்றிடில்**
**தெண்டமுந்தருவன் ! பாக்நேரது**
**நல்லனே !"**

என்று சவால் விடுகிறார். இவ்வளவு திட்டமாகச் சொல்ல வேணுமானால் எவ்வளவு அனுபவ சித்தமானதா யிருக்க வேண்டுமென்று ஆலோசனை செய்து பாருங்கள்.

19. இம்பொருள் என்றொரு பூண்டு. அம்மாம் பச்சரிசியைப் போன்றது. இலை மிகவும் சிறியதாய் இருக்கும். இரத்தம் துப்பும் இருமலில் இது மிகவும் பலனளிக்கும் ஒரு சஞ்சீவி. சாதாரண இருமல் சளிகளில் இதன் பலனைப் பற்றிச் சொல்லவும் வேணுமா ?

இதன் இலையைக் காய வைத்து இடித்துப் பொடித்துச் சலித்ததோடு இரண்டு பங்கு அரிசி மாவையும் கூட்டி அடையாகத் தட்டிச் சுட்டு இரைப்பு, சளி உள்ளவர்கள் சாப்பிட்டு வரலாம். மருந்தாகவும் சிற்றுண்டியாகவும் பயன்படும்.

20. இம்பொருளின் வேர் இரண்டரை வராகன் எடை, அதிமதுரம் ஒருவராகன் எடை இவற்றின் கஷாயத்தைக் காலை மாலை அரை முதல் ஒரு பலம் வரை குடித்து வர, இருமல், இரைப்பு, இருமல் சளி முதலியன நீங்கும்.

21. கிராம்பு [லவங்கம்] என்னும் சரக்கைத் தணலில் வதக்கி வாயில் இட்டுச் சுவைத்து—ஊறும் உமிழ் நீரை விழுங்கி வரத் தொண்டைக் கமரலுடன் உண்டாகும் இருமல் தொண்டைப் புண் ஆகியவை போகும். பற்களின் ஈறும் கெட்டிப்படும்.

22. வெலிப்பருத்தி என்னும் உத்தாமணியின் வேர், கொடி, இலை, பால்

இவைகளினால் செய்த கஷாயத்தை ஒரு மண்டலம் உட்கொண்டால் — ஜல தோஷத்தினால் விளையும் சகல இன்னல் களும் போகும்.

23. ஊமத்தையின் இலையை இரைப்பு, இருமல் சளிகளில் உபயோகிக்கும் முறையையும் நூல்கள் விளக்குகின்றன. ஆனால் அவை வைத்தியனின் மேற் பார்வையில் மட்டுமே உபயோகிக்கத் தக்கவை.

24. எருக்கம்பூ ஒரு பங்கு, மிளகு இரண்டு பங்கு, கிராம்பு ஒரு பங்கு என்று எடுத்து வெள்ளாட்டின் பால் விட்டு அரைத்து, மிளகளவு மாத்திரை களாக உருட்டி உலர்த்தி வைத்துக் கொள்ளவும். இதில் வேளைக்கு ஒரு மாத்திரையாகத் தினம் ஒன்று அல்லது இரண்டு வேளை சிறிது வெள்ளாட்டின் பால் அனுபானத்துடன் சாப்பிட இரைப்பு 'உடனே தணியும்.'

25. ஏலம், அதிமதுரம், நெல்லிக் கட்டையைச் சந்தனம் போல் அரைத் தெடுத்து உலர்த்திய தூள், வால் மிளகு இவைகளின் நுண்ணிய சூர்ணம் வகைக்கு ஒரு பலம், இத்துடன் சர்க் கரை இரண்டரைப் பலம் சேர்த்துக் கலந்து வைத்துக் கொண்டதில் அரை முதல் ஒரு வராகன் எடை வரையில் இளஞ்சூடான ஜலத்துடன் கொடுக்க இருமல், நாவறட்சி இவை தீரும்.

26. ஒதிமரத்தின் பிசினைப் பொடி செய்து இரண்டு முதல் ஐந்து குன்றி வரையில் தினம் இரண்டு வேளை கொடுத்துவர இருமல் நோய் குணப் படும். பால் கொடுக்கும் தாய்மாருக்கு இது மிகவும் பலனளிக்கும்.

27. ஓமம், கடுக்காய்த் தோல், சுக்கு, திப்பிலி, மிளகு, சிற்றரத்தை அக்கிரா காரம், மோடி அல்லது திப்பிலி வேர் இவைகளின் தனித்தனி பொடிகளை ஒரிடையாக எடுத்துக் கூட்டிய மொத் தத்தில் பாதி எடை சர்க்கரையும் சேர்த் துத் தயாரித்த சூர்ணத்தில் மூவிரலளவு ஒரு வேளைக்கெனத் தினம் இரண்டு வேளை கொடுக்கப் புகை இருமல் தீரும்.

28. ஓமம் எட்டு பலம், ஆடா தோடைச் சாறு, இஞ்சியின் ரஸம், எலுமிச்சம் பழ ரஸம், புதினாவின் ரஸம் ஆகியவை வகைக்கு நாலு பலம்; இந்துப்பு ஒரு பலம். இவற்றை யெல் லாம் சேர்த்து ஊற வைத்து உலர்த்தி எடுத்துக் கொண்டு, வேளைக்கு மொச்சை யளவாகக் கொடுக்க இருமல், சுவாச காசம் என்னும் ஆஸ்த்மா, இவற்றுடன் கூடிய அஜீர்ணம் ஆகியவை தீரும்.



நாள் முழுவதும்
கவர்ச்சிகரமாக
தோற்றமளிக்க
"GOKUL"
SANTOL
TOILET POWDER
GOKUL
SANDAL
TOILET POWDER
ஸாண்டல்வுட்
டாய்லட் பவுடர்
சுத்தமான தனி சந்தனத்தை
மென்மையாக்கப்பட்டது...
ஸாண்டால்
சந்தனத்துடன் கூடிய
டால்கம் பவுடர்....
டி. எஸ். ஆர் & கோ
கும்பகோணம்
A.K. GOPAL & CO.
விநியோகஸ்தர்கள்: மெஸர்ஸ் ராமகிரி டிரேடிங் கார்ப்பொரேஷன், 1, டாக்டர் சத்திரம் லேன், மேற்கு புலிவார் ரோடு, திருச்சி * மெஸர்ஸ் கோகுல் ஸ்டோர்ஸ், 179/1, சரத்போஸ் ரோடு, கல்கத்தா-26

## பெங்களூர்

# கோகலே கழகம்

எஸ். வி. எஸ்.

"சரித்திரத்தின் உருவம் என்ன?"

இப்படியொரு கேள்வியைப் போட்டால் முதலில் திகைத்துப் போவீர்கள். அடுத்தாற் போல் கேட்பவனின் புத்தி சுவாதீனத்தைப் பற்றிச் சந்தேகம் எழும்! பின்னர் அப்படிக் கேட்பவர் கீழ்ப்பாக்கத்திலிருந்து வருபவர் என்று தெரிந்து விட்டால், சந்தேகம் உறுதியாகி விடும்!

ஆனால் சென்றமாதம் பெங்களூரில் கோகலே பொது விவகாரக் கழகத்தில் ராஜாஜியின் பிரசங்கத்தைக் கேட்டவர்கள், மேற்படி கேள்விக்கு 'டக்' கென்று 'உருண்டை' என்று பதில் சொல்லி இருப்பார்கள்.

என்ன? என்ன? என்ன?

ஆம்; அருவமாகிய சரித்திரத்துக்கு உலகத்தைப்போல உருண்டையான உருவம் இருக்கத்தான் வேண்டும் என்று சொல்லியிருப்பார்கள்!

நீங்கள் பள்ளிக்கூடத்தில் படித்த நாட்கள் ஞாபக மிருக்கிறதோ, என்னவோ? அப்படி ஞாபக மிருந்தாலும் உபாத்தியாயர் உலகத்தின் உருவம் உருண்டையாகத்தான் இருக்க வேண்டும் என்று உதாரணங்கள் மூலம் நிரூபித்த விஷயம் நினைவிருப்பது சந்தேகம். அதனால் அதைச் சற்று நினைவுபடுத்துகிறேன்.

ஒரு எலுமிச்சம் பழம் எடுத்துக் கொள்ளுங்கள். அதில் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து ஒரு எறும்பு புறப்பட்டு நேரே கிழக்கு முகமாகப் போகிறது என்று வைத்துக்கொண்டால், என்ன ஆகும்? மீண்டும் புறப்பட்ட இடத்துக்கே அது வந்து சேரும்.

ஏன் இப்படியாயிற்று?

எலுமிச்சம் பழம் உருண்டையாக இருப்பதால்தான். அதேபோல் இன்று, சென்னையிலிருந்து ஒருவன் கிழக்கு முகமாகப் பிரயாணம் செய்யத் தொடங்கினானால், சில நாட்கள் கழித்து, மீண்டும் புறப்பட்ட சென்னைக்கே வந்து சேருவான்! அதனால் உலகம் உருண்டையாக இருக்கிறது என்று முடிவு கட்டலாம்.

இவ்வாறு ஆசிரியர் விளக்கியிருக்கிறார்! சென்ற மாதம் 24ம் தேதி ராஜாஜியும் மேற்கண்டவாறு சரித்திரத்தின் உருவம் உருண்டை என்பதை மிக மிக எளிய முறையில் விளக்கி எல்லோரையும் வியக்க வைத்து விட்டார்!

ஒரு ஆறு பெருக்கெடுத்து ஓடினால், வழியிலுள்ள ஏரியை நிரப்பி விட்டுப் போகிறது; வயல்வெளிகளை நிரப்பி மேலே போகிறது. அதுபோல் ஒரு மகான் ஒரு ஊருக்கு வந்தால் அவர்களை எவ்வளவு தூரம், எப்படி எப்படியெல்லாம் பயன்படுத்திக் கொள்ள முடியுமோ, அப்படியெல்லாம் பயன் படுத்திக் கொள்ள விரும்புவது நமது மக்கள் இயல்பு!

ராஜாஜி ராமனே திவ்ய கதாவின் (அதாவது கன்னட சக்கரவர்த்தித் திருமகனின்) வெளியீட்டு விழாவுக்காகப் பெங்களூர் விஜயம் செய்தார். வந்த இடத்தில் அவரைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்று எவ்வளவோ பேர்கள் எங்கெல்லாமோ அழைத்தார்கள். ராஜாஜி தமது உடல் நிலை காரணமாக மறுத்து விட்டார். கடைசியில் திரு டி. வி. குண்டப்பா கௌரவக் காரியதரிசியாக இருந்து நடத்திவரும் கோகலே பொது விவகாரக் கழகத்துக்கு மட்டும் ராஜாஜி போய்ப் பார்த்து விட்டு வர இணங்கினார்.

கோகலே ஞாபகார்த்தமாக எழுந்துள்ள இந்தக் கழகத்தைப் பற்றி நேயர்கள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்!

பெங்களூரில் கோகலே கழகம் 1945ம் ஆண்டில் தொடங்கப்பட்டது என்று சொல்ல வேண்டும். ஆனால் உண்மையில், அதற்கு முன்பிருந்தே இந்தக் கழகம் வேலை செய்து வருகிறது.

இந்தக் கழகத்தின் முக்கியமான பணி, பொதுப் பிரச்னைகளில் பல்வேறுபட்ட அபிப்பிராயங்களைத் தொகுப்பது; பொது விஷயங்களில் பொது மக்களை ஊக்கம் கொள்ளச் செய்வது. அதற்காகப் பிரசங்க வரிசைகள் ஏற்பாடு செய்வது முதலியவையாகும். அவை மட்டுமின்றிப் பொது விவகாரங்களில் அறிஞர்களின் கருத்துக்களைத் திரட்டி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கோ ஸ்தாபனங்களுக்கோ அனுப்பி உதவி யிருக்கிறார்கள். இந்தக் கழகத்தில் பெரும்பாலும் இளைஞர்கள்தான் அங்கத்தினர்கள். அவர்கள் வாரந்தோறும் கூடி, அரசியல், பொருளாதார சம்பந்தமாக விவாதங்கள் நடத்துகிறார்கள். அரசியல், பொருளாதாரம், இலக்கியம், மதம் ஆகியவைகளைப் பற்றிய பெருநூல்களின் மீது சர்ச்சைகள் நடத்தி யிருக்கிறார்கள். இவ்வாறு நாற்பதுக்கு மேற்பட்ட நூல்களின் மீது சர்ச்சைகள் நடத்தியிருக்கிறார்கள்.

இவை யெல்லாவற்றையும் விட இக் கழகம் செய்துவரும் மிக முக்கியமான பணியை இங்கு குறிப்பிட வேண்டும்!

அவ்வப்போது, நகரைச் சுற்றியுள்ள பகுதிகளுக்குச் சென்று அம்மக்களின் தேவைகளைக் குறித்து வந்து நகரசபைக்கு அனுப்பி அக்குறைகளை நிவர்த்தி செய்ய முயல்கிறார்கள். உதாரணமாக, மக்களின் தண்ணீர் கஷ்டம், சுகாதார வசதியின்மை, ரோடு வசதியின்மை இவற்றைப்பற்றியெல்லாம் அதிகாரிகளுக்குத் தெரிவித்து மக்களுக்கு உதவி வருகிறார்கள்!

இவர்களுடைய இந்த அரிய பணியைப் பாராட்டித் தானோ என்னவோ, பெங்களூர் நகர சபை இந்தக் கழகத்துக்கு என்று பெங்களூரில் நரசிம்மராஜ காலனியில் ஒரு இடம் தானமாக வழங்கி யிருக்கிறது. பெங்களூர் நகரின் வட பகுதியில், இயற்கை வனப்பு மிளிரும் இடம் அது. அந்த இடத்தில்

ரூ. 30,000 செலவு செய்து ஒரு அழகிய கட்டடம் எழுப்பி யிருக்கிறார்கள். இந்தப் புதிய கட்டடத்தில் கோகலே கழகம் இரண்டு ஆண்டுகளுக்கு முன் கிரகப் பிரவேசம் செய்தது!

இந்தக் கழகத்துக்கு இவ்வளவு பணம் ஏது என்று யோசிக்கலாம். இந்தக் கழகத்துக்கு வருவாய் எப்படி என்று எண்ணலாம்.

இந்தக் கழகத்துக்கு முக்கியமான வருவாய், அங்கத்தினர்களின் சந்தாவிலிருந்து கிடைப்பது. ஏற்கனவே இக்கழகத்தில் 700 பேர்கள் அங்கத்தினர்கள் இருக்கிறார்கள்! ஆனால் கட்டடம் எல்லாம் இம்மாதிரி சந்தாத் தொகையிலிருந்து மட்டும் எழுப்புவது சாத்தியமல்ல. பல அன்பர்களின் நன்கொடை மூலமாகத்தான் இது சாத்தியமாயிற்று. கழகம் செய்து வரும் பல அரிய நற்பணி பலரை மனமுவந்து நன்கொடை அளிக்கச் செய்திருக்கிறது!

ஸ்ரீ குண்டப்பா, அன்று ஒரு ரஸமான நிகழ்ச்சியைக் குறிப்பிட்டார். ராஜாஜி கவர்னர் ஜெனரலாக இருந்தபோது, ஒரு சமயம் பெங்களூருக்கு விஜயம் செய்திருந்தார். பெங்களூர் பத்திரிகையாளர் சம்மேளனத் தலைவராக அப்போது ஸ்ரீ டி. வி. குண்டப்பா இருந்தார். பத்திரிகையாளர் சம்மேளனத்தின் தலைவர் என்ற தகுதியில் ராஜாஜியுடன் பேச ஒரு பேட்டி கேட்டிருந்தார். அது அனுமதிக்கப்பட்டு, குண்டப்பா ராஜாஜியைச் சந்தித்தபோது, பத்திரிகையாளர் சம்மேளன விஷயத்தை விட்டு, "உங்கள் கோகலே கழகம் எப்படி யிருக்கிறது? அதற்கு நான் ஒரு சிறு தொகை உதவவேண்டும் என்று நினைக்கிறேன்!" என்று சொல்லி ரூ. 500 ராஜாஜி நன்கொடையாக அளித்தார்!

இப்படிச் சற்றும் எதிர்பாராத சமயங்களில் எல்லாம் இக்கழகம், உதவி பெற்றிருக்கிறது! ஆயினும், கட்டடம் கட்டி முடித்த பிறகு இக்கழகத்துக்குப் பெருந்துண்டு விழுந்தது. அதை இட்டு நிரப்புவது எப்படி என்று கவலையடைந்தனர். ஸ்ரீமதி எம். எஸ். ஒரு உதவி நிதிக் கச்சேரி செய்ய இணங்கினார். சென்ற ஏப்ரல் மாதம் கச்சேரி நடைபெற்றது. சுமார், ரூ. 16,000 வசூலாகியது. ஸ்ரீ டி.வி. குண்டப்பாவின் முகத்தில் மலர்ச்சி ஏற்பட்டது!

இந்தக் கழகத்துக்கு உயிரும் உடலுமாக விளங்குபவர் ஸ்ரீமான் டி. வி. குண்டப்பா. இவர் ஒரு சிறந்த எழுத்தாளர். கன்னடத்திலும் ஆங்கிலத்திலும் எழுதுவார். இரு மொழிகளிலுமே நன்கு பேசக்கூடிய திறமை படைத்தவர். பத்திரிகையாளர், சிந்தனையாளர், செயல் திறமையும் பெற்றவர். பெங்களூரில் இவருக்கு நல்ல செல்வாக்குண்டு. கோகலேயின் கொள்கைகளில் கருத்துக்களில் தீவிர ஈடுபாடு கொண்டவர். 1915-ம் ஆண்டு கோகலே காலமானவுடன் அவர் ஞாபகார்த்தமாக ஏதாகிலும் செய்ய வேண்டும் என்று அந்த நாட்களில் பெங்களூரில் ஒரு சிலர் முற்பட்டனர். அவர்களில் ஸ்ரீ குண்டப்பாவும் ஒருவர். இவர்களுடைய முயற்சியினால் ஒரு சிறு தொகைகூட வசூல் செய்யப்பட்டது. அந்தச் சமயம் காந்திமகான் பெங்களூர் வந்து சேர்ந்தார். காந்திமகானைக் கொண்டு, கோகலேயின் பெரிய திருவுருவப் படத்தைத் திறக்க ஏற்பாடு செய்தார்கள். அப்போது பேசிய காந்தி மகான், கோகலே தம்முடைய ராஜகுரு என்றார். உண்மையைச் சொல்லப் போனால் அப்பொழுதிலிருந்தே இக்கழகம் இருக்கிறது என்று சொல்லவேண்டும். ஆனாலும் முன்னேறவில்லை. 1945 லிருந்துதான் இக்கழகம் சிறப்பாகத் தொழிற்படத் தொடங்கியது. அன்று காந்தி மகான் திறந்து வைத்த கோபாலகிருஷ்ண கோகலேயின் திருவுருவப் படம் இப்பொழுதும் இந்தக் கழகக் கட்டடத்தை அலங்கரிக்கிறது.



திரு டி. வி. குண்டப்பா

இந்தக் கழகத்துக்குச் சமீபத்தில், ராஜாஜி விஜயம்செய்தது, அதன் நீண்ட நாளையக் கனவுகளில் ஒன்று நனவாகியது போலத்தான்.

அன்று கழகத்துக்கு மிர்ஸா இஸ்மாயில், நெட்டூர் சீனிவாசராவ் இப்படி நகரத்தின் பல முக்கியமான பிரமுகர்கள் நீதிபதிகள் வக்கீல்கள் ஆகிய பலரும் வந்திருந்தார்கள். அதிலிருந்தே இக் கழகத்தின் தரத்தையும் செல்வாக்கையும் அளிக்கலாம்.

கோகலே கழகத்தின் கட்டடம்தான் எவ்வளவு அழகாக இருக்கிறது! எளிமையுடன் கலந்த அழகு அது. கழகத்துக்குள் நுழைந்ததுமே, ஒருபுறம் வால்மீகி முனிவரும், மற்றொருபுறம் வியாச பகவானும் நம்மை வரவேற்கின்றனர். வால்மீகி முனிவர் முன்னிலையில் லவ குசர்கள் ராமாயணக் கதை சொல்வது போல் அமைந்துள்ள சிலை இன்றெல்லாம் பார்த்துக்கொண் டிருக்கலாம்.

சுவர் முழுதும் நமது பெருந் தேசத் தலைவர்களின் படங்கள் அலங்கரிக்கின்றன. கோகலே, ரானடே, தாதாபாய் நௌரோஜி, திலகர், காந்திஜி இப்படிப் பலருடைய உருவப் படங்கள் காட்சி யளிக்கின்றன. எத்தனை எத்தனை பெரியோர்களின் தியாகத்தினால் நாம் இந்தச் சுதந்திரத்தைப் பெற்றிருக்கிறோம் என்ற உணர்ச்சி கழகத்துக்குள் நுழைந்தவுடனேயே மேலிடுகிறது!

அன்று ராஜாஜியை வரவேற்று ஸ்ரீ டி. வி. குண்டப்பா பேசிய பிறகு, ராஜாஜி பேசத் தொடங்கினார். "இவ்வளவு அழகிய கட்டடமும், சிறப்பும் இந்தக் கழகத்துக்கு ஏற்பட்

டிருக்கிறது என்றால் அது, இந்தக் கழகம் செய்துள்ள சேவையினால் மட்டும் ஏற்பட்டதல்ல. இந்தக் கழகத்தை இயக்கும் ஸ்ரீ டி. வி. குண்டப்பாவின் தியாக உணர்ச்சியும், குண விசேஷங்களும் தான் அவருக்கு உதவ வேண்டும் என்று மக்களைத் தூண்டின. இன்னும் நம் மக்களிடையே நல்ல பண்பு இருக்கவே செய்கிறது. யாராகிலும் நல்ல மனிதர்களைக் கண்டால், அவர்கள் குணத்தைப் பாராட்டி உதவ வேண்டும் என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள்! இல்லையானால், இவ்வளவு நல்ல இடத்தில் இவ்வளவு அழகான கட்டடம் எழுப்பியிருக்க முடியுமா? எத்தனையோ பேர்கள் தங்கள் கழகங்களை, மோட்டார் கார்களை இழந்துவிட்டவர்கள் வீட்டு மோட்டார் ஷெட்டுகளில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்! அவர்கள் பொறுமைப் படும்படியான இவ்வளவு அழகான கட்டடம் பெற்றிருக்க முடியுமா?'' என்றார். அப்போது சபையில் 'கொல்' என்று சிரிப்பொலி எழுந்தது.

ராஜாஜி மேலும் சொன்னார்: ''இந்தக் கழகம் பொதுப் பிரச்னைகளைச் சர்ச்சை செய்ய ஏற்பட்டது. அதனால் உங்களுக்கெல்லாம் நமது சுதந்திரப் போராட்டத்தின் பழைய சரித்திரத்தைச் சொல்ல விரும்புகிறேன். இதோ சுவரிலுள்ள இந்தப் பழைய தலைவர்களைப் பார்த்தவுடன், எனக்கு அந்தப் பழைய சரித்திரம் நினைவுக்கு வருகிறது. பல ஆண்டுகளுக்கு முன்பு நம்மிடையே கோகலே போன்ற பெரிய தேசபக்தர்கள் இருந்தார்கள். அவர்கள் அந்நாட்களில் ஒவ்வொரு பிரச்னையையும் கூர்ந்து பார்த்து, ஆராய்ந்து பிறகு தான் பேசுவார்கள். அந்த நாட்களில் அவர்கள் பேசும் பேச்சுக்களை மக்கள் ஒரு தடவைக்குப் பல தடவைகள் வாசிப்பார்கள். ஆனால் இன்று, பொது வாழ்விலுள்ள பலர் ஒன்றுமே படிக்காமல் பேசுகிறார்கள்!

ஒவ்வொரு விஷயத்தையும் ஆராய்ந்து பேசுவது என்ற காலம் மாறி ஒரு புது யுகம் தொடங்கியது. திலகர் தமது சுயராஜ்ய இயக்கத்தை ஆரம்பித்தார். திலகர் மிகப் படித்த மேதாவி. அரசியல், பொருளாதார விஷயங்கள் மட்டுமின்றி, பகவத் கீதை போன்ற நமது புராதன இலக்கியங்களையும் படித்துத் தேர்ந்தவர். அவர் சும்மா சட்ட சபைகளில் பேசுவது மட்டும் போதாது, பொதுஜன அபிப்பிராயம் திரட்டினால்தான் பிரிட்டிஷ் அரசாங்கம் அசைந்து கொடுக்கும் என்று கருதினார். அவர் படிப்பு, ஆராய்ச்சி இவற்றை விடப் பொதுஜன அபிப்பிராயமே முக்கியம் என்று கருதினார்.

படிப்பு ஆராய்ச்சிக் குழுவினர், பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கோபமூட்ட விரும்பவில்லை. கோபமடைந்த மக்களிடமிருந்து உருப்படியாக ஒன்றும் பயனடைய முடியாததால் அவர்கள் கிளர்ச்சி வேண்டாம் என்றனர். திலகர் கோஷ்டியினர் அவர்களை மிகுந்த அருவருப்புடன் நோக்கினர்.

இதற்கிடையில் மூன்றாவது கோஷ்டி கிளம்பினர். இவர்கள் மேற்கூறிய இரண்டு

கோஷ்டியினர் முறையும் தவறு என்று கருதினர். இவர்கள் பிரிட்டிஷார் தலையில் வெடிகளைப் போட்டுக் கொன்று பயமுறுத்தி சுயராஜ்யம் பெற வேண்டும் என்றனர்.

இவர்கள் அனைவரும் தீவிர தேசபக்தி கொண்ட இளைஞர்கள். இவர்கள் முக்கியமான பிரிட்டிஷ் அதிகாரிகளைக் கொல்வதாக நினைத்து நிரபராதிகளானவர்களைச் சில சமயம் கொன்றனர். ஒவ்வொரு சமயம் அவர்கள் விரும்பினவர்களையே கொன்றனர். எனினும் இம் முறையும் பயன் அளிக்கவில்லை.

இந்தச் சமயத்தில் அரசியல் அரங்கில் காந்தி மகான் தோன்றினார். அவர் ஆராய்ச்சிக் கோஷ்டிக்கு நண்பராக இருந்தார். கோகலேயைத் தமது குரு என்றார். அத்துடன் பொதுஜன அபிப்பிராயத்தைத் திரட்ட வேண்டும் என்பதிலும் நம்பிக்கைகொண்டிருந்தார். அதனால் அந்தக் கோஷ்டியாரிடமும் நட்பு கொண்டிருந்தார். நாட்டு வெடிகளை எறிந்து சுயராஜ்யத்தைப் பெற வேண்டும் என்று சொல்லி வந்த இளைஞர்களின் தீவிர தேச பக்தியைக் கண்டு அவர்களிடமும் அன்பு கொண்டிருந்தார். அவர்களைத் தங்கள் தவறான முறையை விட்டொழிக்கச் செய்ய வேண்டும் என்று முயன்று வந்தார்.

ஏனெனில் பிரிட்டிஷாரைப் பற்றிக் காந்திஜிக்கு நன்றாகத் தெரியும். அவர்களை இப்படியெல்லாம் பயமுறுத்திப் போகச் செய்ய முடியாது என்பதை நன்கு அறிந்திருந்தார்.

இந்த இளைஞர்களோ காந்தி மகானின் தீவிர தேசபக்தியைக் கண்டார்கள். காந்தி மகானைத் தங்கள் கொள்கைக்கு மாற்றிவிடலாம் என்று நம்பி நெருங்கிப் பழகினார்கள். காந்தி மகானும் இவர்களைத் தம் கொள்கைக்கு மாற்றி விடலாம் என்று நம்பினார். ஆம், அவர்களுடைய ஹிம்சா முறையைத் தவிர்த்து, வேறு எந்த விஷயத்திலும் அவர்களிடம் மனவேற்றுமையோ, சண்டையோ காந்திஜிக்குக் கிடையாது.

இந்தச் சமயத்தில்தான் காசி சர்வகலாசாலையின் பட்டமளிப்பு விழாவில் பேசும்படி காந்தி மகான் அழைக்கப்பட்டார். பெரிய மகாராஜாக்கள், பணக்காரர்கள் எல்லாரும் மண்டபத்தில் நிரம்பியிருந்தனர். இங்குதான் காந்தி மகான் தீவிரவாதிகளின் தேச பக்தியைப் பாராட்டிப் பேசினார். இது அங்கிருந்த மகாராஜாக்களுக்குக் கோபத்தை மூட்டிவிட்டது! பலர் காந்திமகான் பேசிக்கொண்டிருந்த போதே பாதியில் எழுந்து போய் விட்டனர். இந்த மாதிரி யெல்லாம் நடப்பது இப்பொழுது சர்வசாதாரணம். அந்த நாட்களில் அப்படியல்ல. காந்திமகானின் அன்றையப் பேச்சு பலருக்கு எட்டிக்காயாகக் கசந்தது!

அதற்குப் பிறகுதான் காந்திமகான் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தார். அந்த வரலாறு எல்லாருக்கும் தெரியும்.

நமக்குச் சுதந்திரம் கிடைத்தது. மரத்தில் கட்டப்பட்டிருந்த மனிதன் அவிழ்த்துவிடப்படுகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்படி அவன் கட்டவிழ்த்து விடப்படுவதே போதுமானதாகுமா? வேலைசெய்ய, சாப்பிட, சந்தோஷமாக இருக்க எல்லாம் அவனுக்குத் தெரிந்திருக்க வேண்டுமல்லவா? அதற்கு அவன் முயல வேண்டுமல்லவா? அப்பொழுது தானே பெற்ற விடுதலைக்குப் பயன் உண்டு? அவனைப் போன்றதுதான் நம் நிலைமையும். நமக்குச் சுதந்திரம் கிடைத்தது. சுதந்திரம் மட்டுமே லட்சியமல்ல! இனி நம்மை நாமே நன்றாக ஆளவேண்டும். அதாவது நாம் பணக்காரர்களாக வேண்டும். சந்தோஷமாக இருக்க வேண்டும். எல்லாவிதத்திலும் சிறப்புற்று வாழ வேண்டும். பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில், அவர்கள் நாட்டில் அமைதி நிலைநாட்டினால் போதும் என்று எண்ணினர். ஆனால், இன்றைய சர்க்கார் நாட்டில் அமைதி நிலைநாட்டினால் மட்டும்போதாது! ஒவ்வொரு குடும்பத்தையும் நடத்த வேண்டிய பொறுப்பு சர்க்காருக்குச் சேர்கிறது.

அரசாங்கம் ஒவ்வொரு பிரஜையின் கல்விக்கும், தேக ஆரோக்கியத்துக்கும் மட்டும் வழிவகை செய்தால் போதாது. அவன் சாப்பாட்டுக்கு, உடைக்கு, இருப்பதற்கு ஆகிய எல்லா வசதிகளும் செய்து தரவேண்டும். அந்த லட்சியத்தைச் சீக்கிரம் அடைய வேண்டும் என்றுதான் முயல்கிறோம். ஆனால் அது அவ்வளவு சுலபமாகக் கிட்டுவதாக இல்லை. அதனால் மக்கள் ஏமாற்ற முற்றிருக்கின்றனர்.

எல்லாரும் பிறரை உழைத்துப் பாடுபட வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆகவே, மொத்தத்தில் நாம் காண்பது என்ன? எங்கும் அதிருப்தி! எங்கும் மனக்கசப்பு!

இதைப்பார்க்கும்போது, நாட்டுக்கு நல்ல படியான படிப்பும் மிகுந்த ஆராய்ச்சியும் அவசியம் என்று ஏற்படுகிறது. சுதந்திரம் பெற்ற மக்களிடையே காணும் உணர்ச்சிகள், வேகங்கள் என்னென்ன என்பதை ஆராய வேண்டும். பழைய சரித்திரங்களில் எப்படிச் சமுதாய சக்திகள் தொழிற்பட்டிருக்கின்றன என்பது மட்டுமின்றி, இன்றைக்கு எப்படித் தொழிற்படுகின்றன; நாளை எப்படித்தொழிற்படும் என்பனவற்றை யெல்லாம் ஆராய வேண்டியது இன்றைய இளைஞர்களின் கடமை. ஆகவே, நாம் மீண்டும் கோகலே யுகத்துக்குப் போகிறோம்.

இன்று சட்டசபைகளில் மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கும் சட்டங்கள் செய்யப்படுகின்றன. வோட்டளிப்பவருக்கு அது என்ன சட்டம் என்பது கூடச் சரியாகத் தெரியாது! ''கைதூக்கச் சொன்னார்கள். தூக்கினேன்'' என்கிறார்கள்! இத்தகைய நிலைமை அதிக நாள் நீடிக்கமுடியாது. பொதுப் பிரச்னைகளைப் படித்து, ஆராய்ந்து பொதுஜன அபிப்பிராயம் உண்டாக்குவதுஅவசியம். ஆராய்ச்சியுடன் பேசுபவர்களைத் தொல்லை தருபவர்கள் என்று சர்க்கார் தரப்பிலிருப்பவர் இன்று குறைகூறலாம். ஆனாலும் அவர்கள் அவசியம். நாட்டு நலனுக்கு அப்பணி அவசியம்!'' என்றார் ராஜாஜி.

கோகலே காலத்தில் விட்ட குறையை மீண்டும் இப்பொழுது தொட்டுப் பிடிக்க வேண்டும் என்றார் ராஜாஜி.

சரித்திரம் எப்படி உருண்டையாக இருக்கிறது, பார்த்தீர்களா?


அறிவிப்பு!
முற்றிலும் புது மாதிரி
டெக் டூத் பிரஷ்
இந்த 3 விசேஷ அம்சங்களைக் கவனியுங்கள்
1 மிருதுவான 'நீட்டன்' முடிகள்
ஈறுகளை புண்ணாக்காமல் பற்களை சுத்தம் செய்யும்!
2 தேர்ந்தெடுக்க 2 வித தலைப்பாகம்
'ஓவல்' மற்றும் ஷார்ட் 'ஓவல்' வடிவங்களில் கிடைக்கும்.
3 கைக்கடக்கமான பிடி
விஞ்ஞான முறைப்படி பிரத்தியேக வடிவம் கொண்டது.
ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன் ஆப் இந்தியா பிரைவேட் லிமிடெட்
Tek
Johnson & Johnson
OF INDIA PRIVATE LTD

# இலவசப் பரிசுகளுக்கான

# டுமெக்ஸ் பேபி புட்

## கூப்பன்களை

# இப்பொழுதே அனுப்புங்கள்!

பேபி புட் இறக்குமதி மீதுள்ள கட்டுப்பாடுகளினால் டுமெக்ஸ் பேபி புட் கூப்பன்கள்மீது இலவசமாக பரிசுகள் வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்து நடத்தமுடியாதது பற்றி மிகவும் வருந்துகிறோம். ஆகவே டுமெக்ஸ் பேபி புட் டின்களில் இனி மேல் இலவசப்பரிசு கூப்பன்கள் வைக்கப்படமாட்டாது. ஆனால் 1958, அக்டோபர் 31-ம் தேதிக்குள் எமக்கு வந்து சேரும் கூப்பன்கள்மீது இலவசப்பரிசுகள் வழங்கப்படும்.

**வழங்கப்படும் பரிசுகள்**

12 கூப்பன்களுக்கு — டுமெக்ஸ் பேபி புட் மிக்ஸர். 16 கூப்பன்களுக்கு — எல்லோராலும் விரும்பப்படும் டுமெக்ஸ் 'பீடிங் பாட்டில்' அல்லது ராசி சக்கரங்களுடைய ப்ரேஸ்லட்

**மறந்து விடாதீர்கள் !**


1958, அக்டோபர் 31-ம் தேதிக்குள் வந்துசேரும் கூப்பன்களுக்கு மட்டுமே இலவசப்பரிசுகள் வழங்கப்படும். ஆகவே உங்கள் கூப்பன்களை அனுப்பத் தாமதியாதீர்கள்!

**டுமெக்ஸ் பிரைவேட் லிமிடெட்** வேவல் ஹவுஸ், பல்லார்ட் எஸ்டேட், பம்பாய்-1.

# பாவை விளக்கு

அத்தியாயம் 13

## ஐம்புலனும் வழிந்துருக....




உண்மை, உணர்ச்சி, ஓசை, நயம் இவ்வளவையும் குழைத்து உமா பத்துப்பத்துப் பாடல்களாக நூறு கவிதைத் துணுக்குகள் இயற்றியிருந்தாள். மலையிடைப் பிறந்த சிற்றருவிபோல் அவள் கவிதைகளில் அழகு தமிழ் துள்ளிக் குதித்துப் பற்பல அற்புதங்களைச் செய்துகொண்டிருந்தது. அவ்வளவும் உயிர்த் துடிப்பு நிறைந்த காதற் கவிதைகள்.

ஒரு பாடலில் கூட, முன்பெல்லாம் காதலைத் தொடாதவள், ஒரு வரியில் கூடக் காதலைத் தவிர வேறு உணர்ச்சிகளுக்கு இடமளிக்கவில்லை. மகாகவி பாரதியின் 'குயிலு'க்கும், பாரதிதாசனின் காதற் பாடல்களுக்கும் ஒப்பான பல துணுக்குகள் அங்கங்கே மின்னிச் சிரித்தன. ஆண்டாள், மீரா, சரோஜினி ஆகிய பெண் கவிகளுக்குச் சரிசமமாக நின்றுகொண்டு, உமா தன் இதய யாழை மிக உருக்கமாக மீட்டினாள். நிலவு சொரியும் நள்ளிரவின் தனிமையில், அலை பொங்கும் கடற்கரையின் ஒரு விளிம்பில் நின்றுகொண்டு, தொலை தூரத்து எதிர்க்கரையில் நின்று ஏங்கும் காதலனை அவள் கூவி அழைக்கிறாளா?

"துணையே! எனதுயி ருள்ளே
இருந்து சுடர் விடுக்கும்
மணியே! எனதுயிர் மன்னவனே!
என்றன் வாழ்வினுக்கோர் அணியே!"

என்ற பாரதியின் வரிகளால் அவனை அழைத்துவிட்டு, "நான் இங்கே எழுதியிருக்கும் பாடல்கள் என்னுடைய சொந்த உணர்ச்சியின் வெளியீடுகள்; உங்களுக்காக எழுதியிருப்பவற்றை நீங்கள் அச்சுக்குக் கொடுத்தீர்களானால் என்னுடைய அருமையை, உணர்ந்துகொள்ள முடியாத கொடிய பாவம் உங்களை வந்து சேரும்" என்று எச்சரிக்கை செய்திருந்தாள்.

அறிவறியாப் பருவத்தில் அவனை முதலில் சந்தித்ததிலிருந்து, அவளுக்கே தெரியாமல் சிறிது சிறிதாக ஏற்பட்ட மனமாற்றங்கள் அவ்வளவையும் அதில் அவள் படிப்படியாக விளக்கியிருந்தாள். விவரம் தெரிந்த பின்பு, விவரம் தெரியாத நாட்களில் நடந்த நிகழ்ச்சிகளுக்கு, மூல காரணம் பளிச்சென்று உதயமாகிறதல்லவா? தன்னைத்தானே அவள் தன் கவிதைகளில் கூறுபோட்டுக்

காட்டியிருந்தாள். ஆத்ம சோதனை என்ற ரண சிகிச்சைக்குத் தன் கவிதை உணர்ச்சியை அவள் கருவியாக்கி யிருந்தாள். தாகூரின் அஞ்சலி ஒரு புறமும், உமர்கய்யாமின் மது வெறி மறு புறமுமாக அங்கே மாறி மாறித் தோன்றின. ஆண்டாளின் வேதனைகள் அத்தனையும் உமாவும் அநுபவித்திருந்தாள். கவிதைகள் அவற்றை ஒளிக்க வில்லை.

நேரம் போவதே தெரியாமல் கவிதா மஞ்சத்தில் கண்ணுறங்கிய தணிகாசலத்தைத் தேவகி வந்து தட்டி எழுப்பினாள். அறிதுயிலில் ஊஞ்சலாடிய தணிகாசலம் சுப்பையாவின் அறையில் தான் இருப்பதையும், தேவகி அருகில் நிற்பதையும் கண்டு திடுக்கிட்டான்.

"என்ன? என்ன அக்கா?"

"உமாவின் தூக்கம் கலைந்து விட்டது. நீ வந்திருப்பதைச் சொல்லி யிருக்கிறேன். போய்ப் பார்த்து விட்டு வா!"

கவிதையும் கையுமாக உமாவைப் பார்ப்பதற்கு எழுந்தான் தணிகாசலம்.



"இதோ பார்!" என்று அவனை அதட்டினாள் தேவகி. "உமா என்ன கேட்டாலும் மறுக்காதே; என்ன சொன்னாலும் 'சரி' என்று ஒப்புக் கொள். அவள் உயிர் இப்போது உன்னுடைய கையில் தான் இருக்கிறது."

'அவள் உயிர் இப்போது என் கையில் தான் இருக்கிறது!' என்று நினைத்துக் கொண்டு, அந்த உயிரையே வடித்து நிரப்பிய கவிதைக் கிண்ணத்தையும் கையில் ஏந்திக் கொண்டு, உமாவிடம் சென்றான் தணிகாசலம். மெதுவாக மாடிக் கதவைத் திறந்தான்.

"மாமா!..." அவள் உதடுகள் அசைந்தன. சொற்கள் ஒலிக்கவில்லை.

"உமா!"

"வந்து இப்படிக் கட்டிலில் உட்காருங்கள்" என்று அடுத்தாற்போல் கணீரென்று பேசினாள். எழுந்து சாய்ந்து கொண்டு உட்கார முயற்சி செய்தவள் முடியாமல் சரிந்து விழுந்தாள். கட்டிலுக்குப் பக்கத்தில் நின்று கொண்டு உச்சி முதல் உள்ளங்கால் வரையில் பார்த்தான் தணிகாசலம்.

"எவ்வளவு நாட்களாக எவ்வளவு தூரத்தில் என்னைவிட்டு விலகியிருந்தீர்கள். இனிமேலும் அப்படி என்னைச் சோதனை செய்ய வேண்டாம். சீக்கிரம் நான் ...... சீக்கிரம் நான் ...... உங்களை விட்டு ... உங்களை விட்டுப் போகப்..."

உமாவின் தொண்டை அடைத்தது.

"இப்படியெல்லாம் நீ பேசுவதென்றால் இப்போதே நான் சென்னைக்குத் திரும்பிப் போகிறேன்" என்று கடுமையாய்க் கூறினான் தணிகாசலம்.

உமா சிரித்தாள். "என் மாமாவுக்கு எத்தனை மூன் கோபம்! இந்தக் கோபத்தை யெல்லாம் இத்தனை நாள் எங்கே வைத்திருந்தீர்கள்?"

கட்டிலில் உட்கார்ந்த தணிகாசலம் நெடு நேரம் அவள் முகத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். அவனும் அவளிடம் அதற்குப் பிறகு பேசவில்லை. 'மனங்கள் பேசின; கண்கள் பேசின; வாய்கள் பேசவில்லை.

"இப்படியே இருந்தால்?" என்று மௌனத்தைக்கலைத்தான் தணிகாசலம்.

"பேசினால்தான் உங்களுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வருகிறதே!"

"எனக்குக் கோபம் வராதபடி ஏதாவது நல்ல பேச்சாய்ப் பேசு!" என்றான்.

"பேசட்டுமா?" என்று குழந்தைபோல் உமா தலையாட்டினாள். "ஆண்டாள் ஏன் கடவுளான கண்ணனை மனித ராக்கிப் பாட வேண்டும்? அவளுடைய சுயநலந்தானே அது?"

''உளறத் தொடங்கி விட்டாளே!' என்று தனக்குள் நொந்து கொண்டு, "நம்மைப் பற்றிச் சொல்லாமல் எங்கேயோ பறந்து போகிறாயே?" என்று கேட்டான் தணிகாசலம்.

உமாவின் வாய் மெல்ல ஓர் பாடலை முணுமுணுக்க ஆரம்பித்தது :-

"நாமம் ஆயிரம் ஏத்த நின்ற
நாராயணா! நரனே! உன்னை
மாமி தன்மகனாகப் பெற்றால்
எமக்கு வாதை தவிருமே!"

பாடலை நிறுத்தியவுடன் உமாவின் முகம் வெட்கத்தால் சிவந்தது. "இதற்கு என்ன பொருள் என்று சொல்லுங்கள்!"

"கவிதையில் பாடினால் எனக்கு என்ன புரியும்?"

"கடவுளை மனிதராக்கியது ஒரு குற்றம். ஏற்கனவே கல்யாணம் செய்து கொண்டவரை அவனுக்கு மாமிமகனாக இருக்கச் சொல்லியது மற்றொரு குற்றம்



நானும் இந்த இரண்டு குற்றங்களுக்கும் இப்போது ஆளாகி யிருக்கிறேன்!''

'நீயும் ஆண்டாளும் ஒன்றாக முடியுமா? நானும் கண்ணனும் ஒன்றாக முடியுமா?-அடி முட்டாள்!' என்று தனக்குள் அநுதாபப்பட்டுக் கொண்டான் தணிகாசலம். 'கண்ணன் எங்கே? நான் எங்கே? அவன் மலையைத் தூக்கினானும்; கடலைக் கலக்கினானும்; ஐந்து தலை நாகத்தின் மேல் அஞ்சாமல் ஆட்டம் போட்டானும். நானோ ஒரு தலை நாகத்தைக் கண்டு விட்டு ஒரு மைல் தூரம் ஓட்டம் பிடித்தவன்!'

அவன் பேசாமல் இருந்ததைக் கண்டு, ''சொல்லுங்கள்; நானும் ஆண்டாளும் ஒன்றுதானே? உம், சொல்லுங்கள்'' என்று கேட்டாள் உமா.

எந்த நோக்கத்துடன் இந்தக் கேள்வியை உமா கேட்கிறாள் என்பதை அவன் புரிந்து கொண்டான். அவளுடைய சொந்த விருப்பத்துக்கு ஆண்டாளையும்



துணை சேர்த்துக் கொண்டால்தான் அவளுக்கு அமைதி கிடைக்கும். 'வெண்ணெய் திரண்டு வரும், சமயத்தில் தாழியை உடைத்து விடாதே!' என்று தேவகி செய்த எச்சரிக்கையை அவன் எண்ணிப் பார்த்தான். உமாவின் இக்கட்டான நிலையிலிருந்து அவளைக் காப்பாற்றி விட்டால் போதும்.

''ஆமாம்; நீயும் ஆண்டாளும் ஒன்றுதான்!'' என்றான் தணிகாசலம். ''உங்கள் இரண்டு பேர் ஆசையிலும் தவறு ஒன்றுமில்லை. ஆண்டாள் வாழ்ந்த காலத்தில் இரண்டு பெண்களென்ன, எத்தனை பெண்கள் வேண்டுமானாலும் வாழலாம். வாழ்ந்தார்கள். இப்போது கூட நீ நினைக்கிறபடி நீ குற்றவாளியல்ல. பாவ புண்ணியம் என்பது மனிதருக்கு மனிதர், மதத்துக்கு மதம் வேறுபடக் கூடிய தத்துவம். நீ மட்டும் இஸ்லாம் மதத்தில் பிறந்திருந்தால்?''

தணிகாசலத்துக்கு எப்படியாவது நட்டாற்றில் சுழல் வெள்ளத்தில் மிதப்பவளுக்குக் கை கொடுத்தால் போதும் என்ற கவலை வந்து விட்டது.

''ஓ!'' என்று ஆச்சரியத்துடன் தன் வாயைக் குவித்து, ''அப்படியானால்...'' என்று தயங்கினாள் உமா.

''அப்படியானால்...''

உமாவின் முகத்தில் குபீரென்று இத்தனை ஆனந்தம் எங்கிருந்து பொங்கியது? அமாவாசை இருளில் முழு நிலவு முளைத்தெழுந்ததைப் போல் அவள் முகம் 'சட்'டென்று மாறியது. பிறகு நாணத்துடன் தலையணையில் தன் தலையைப் புதைத்துக் கொண்டாள்.

''என்ன அசட்டுத்தனம் இது?''

''நீங்கள்...நீங்கள்...வந்து...'' என்று தலையை அவன் பக்கம் திருப்பாமலே தொடர்ந்து பேசினாள்.

''நான்...நான் வந்து...?''

''என்னை...''

''உன்னை...?''

''போங்கள்! எனக்கு வெட்கமாக இருக்கிறது'' என்று தன் முகத்தைத் திருப்பி, கரங்களால் கண்கள் இரண்டையும் பொத்திக் கொண்டு, விரல்களின் இடுக்குகள் வழியே அவனைப்பார்த்தாள்.

அந்த அன்புப் பார்வையில் தணிகாசலம் பித்தனானான்.

உமாவின் உயிரைக் காக்கவோ, தேவகியின் எச்சரிக்கைக்காகவோ, உமாவுக்கு அவன் இழைத்த கொடுமைக்குப் பரிகாரமாகவோ, அவளுடைய உழைப்புக்குப் பரிசாகவோ, அல்லது வேறு எந்தக் காரணத்துக்காகவோ அவன் அந்தக் கணத்தில் அவளை விரும்பவில்லை. காரண காரியம் என்பது அந்த விநாடியில் அங்கே செத்தொழிந்தது. அவளுக்காகவே அவளை அவன் ஏற்றுக் கொள்ளத் துடித்தான். தனக்காகவே அவளை வாரி எடுத்துக் கொள்ள விரும்பினான். அவன் மனம், 'சொல் உமா! சொல்ல வந்ததை முழுவதும் சொல்லி விடு! உடனே சொல்லி விடு! தயங்காதே!' என்று அவளிடம் கெஞ்சியது.

அவள் கேட்க விரும்பியதை அவனாகவே கேட்டிருப்பான். ஆனால், உமாவின் வாயால் அந்த வார்த்தைகள் எப்படி வெளிவருகின்றன என்பதை அவன் காண வேண்டாமா? நாணிச் சிவந்த முகத்தில் இன்னும் எப்படியெல்லாம் வெட்கம் படர்ந்து பரவுகிறது என்பதை அவன் நோக்க வேண்டாமா? வாழ்க்கையின் ஒவ்வொரு அணுத்துளியையும் கலை உணர்வோடு பருகி மகிழ்வதற்கு ஆசைப்படும் அதிசயமான மனமாயிற்றே அவனுடையது?

''சொல், உமா! சொல்!'' என்றான்.

"என்னே...நீங்கள்...நீங்கள் வந்து... சொன்னால் சிரிக்கக் கூடாது! கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்."

"கட்டாயம் செய்து கொள்கிறேன். அதற்காகவே ஓடி வந்திருக்கிறேன்!"

"உண்மையாகவா!"

"உண்மையாகத்தான்!"

"ஆகா! நம்பவே முடிய வில்லை; என்னால் நம்பவே முடியவில்லை!"

கண்களை மூடிக் கொண்டு, இந்தச் செய்தி கொடுத்த அதிர்ச்சி தாங்காமல், நாலு முறை இருமி ஓய்ந்தாள் உமா. நெஞ்சுக்குள்ளே வலி எடுத்திருக்க வேண்டும். பல்லைக் கடித்துக் கொண்டு சற்றே முகம் சுளித்தாள். அடுத்த நிமிஷத்தில் வலி தீர்ந்து விட்டது. வழக்கம் போல் சிரித்தாள்.

"நமக்கு எப்போது கல்யாணம்?"

"கல்யாணமோ நிச்சயமாகி விட்டது. இதில் அவசரம் எதற்கு? முதலில் உன்னுடைய உடம்பைக் கவனித்துக் கொள். நீ எழுந்து நடமாட வேண்டாமா? இப்படிப் படுக்கையில் கிடக்கும் போதா கல்யாணம்? கல்யாணத்தை மெதுவாய் வைத்துக் கொள்வோம்."

"ஊஹூம்!"

"பைத்தியம்! அவசரப்படாதே!"

"அப்படியானால் நம்முடைய கல்யாணம் இந்த ஜன்மத்தில் இல்லை."

ஓங்கி அவள் கன்னத்தில் அறைய வேண்டும் போல் கோபம் வந்தது அவனுக்கு. இது என்ன சிறுபிள்ளைத்தனம்! சிரமப்பட்டுத் தன் கோபத்தை அடக்கிக் கொண்டு, "அவச்சொல் சொல்லாதே, உமா!" என்று கெஞ்சினான். "எவ்வளவு நாட்களுக்குப் பிறகு நாம் இன்றைக்குச் சந்திக்கிறோம். உன் விருப்பத்தை நான் மறுத்து விட்டேனா? ஆனந்தமாக இருக்க வேண்டிய நேரத்தில் இப்படி வாட்டி வதைக்கிறாயே? அடுத்த மாதத்தில், உன் உடம்பு தேறியவுடன் கல்யாணம். என்ன சரிதானா?"

"இதுவும் கல்யாண மாதந்தான். நாளைக்கே எனக்கு உடம்பு சரியாய்ப் போகும். பட்டணத்துக்குப் புறப்படுவோம். போனவுடன் கல்யாணம்!"

தணிகாசலத்தின் பேச்சு எதுவும் அவளிடம் எடுபடவில்லை. எந்தச் சமாதானத்துக்கும் அவள் தயாராக இல்லை. அவளுடைய பிடிவாதத்துக்கு ஏற்றாற் போல் தொடர்ந்து நான்கைந்து முகூர்த்த நாட்கள் வேறு வந்தன.

"உன் உடம்பு தாங்க வேண்டாமா?" என்று கேட்டவனிடம், "உங்கள் தாலியைத் தாங்குவதற்குத்தான் அது உயிரை வைத்துக் கொண்டிருக்கிறது" என்று பதில் சொல்லி, மேலே பேச விடாமல் அவன் வாயை ஒரேயடியாய் அடைத்து விட்டாள் உமா.

கல்யாணம் எப்படி நடக்க வேண்டுமென்பதைப் பற்றியும் அவள் திட்டவட்டமான விவரங்கள் கொடுத்தாள்: தேவகியின் வீட்டிலிருந்து சுப்பையா முதலிய எல்லோரையும் பட்டணத்துக்கு அழைத்துக் கொண்டு போக வேண்டும். நேரே தணிகாசலத்தின் வீட்டுக்குச் சென்று இறங்க வேண்டும். அங்கே அவனுடைய அப்பாவையும் சித்தியையும் வரவழைத்து, அவர்களுக்கு எதிரில் கல்யாணம் நடத்தினால் போதும். வெளியார் யாருக்கும் சொல்லக் கூடாது. சௌந்தரத்தம்மாளுக்குப் பிடித்தமானால் கலந்து கொள்ளட்டும். பிடிக்காவிட்டால் கவலை இல்லை. சுடர் விட்டு எரியும் பாவை விளக்கின் சாட்சியாக அவன் அவளுக்கு மாலையிட வேண்டும். வேறு எந்த ஆடம்பர அலங்காரமும் கூடாது. அவன் அப்படி மணப் பெண்ணை உட்கார்ந்திருக்கும்போது, வானத்திலிருந்து அவள் தாயாரும், குழந்தை



கல்யாணியும் அவளைக் கண்டு களிப்பார்கள். கல்யாணி தன் அப்பாவின் வீட்டுக்கே அவள் சித்தியாக வந்து விட்டதால் தன் 'டி'யை மறந்து 'சேர்த்தி' என்று சொல்வாள்! கனவில் கல்யாணி வந்தால், 'இனிமேல் நீ என்னை அக்கா என்று கூப்பிடாதே, ராஜாத்தி; நான் உன்னுடைய சித்தி' என்று உமா சொல்வாள்.

தணிகாசலம் தனக்கு வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு உமாவின் பேச்சை உற்றுக் கேட்டான். பன்னிரண்டு வயதுச் சிறுமி பேசுகிற பேச்சைப் போல் ஒரு பகுதியும், அறிவும் அனுபவமும் நிறைந்த பெண்ணின் பேச்சைப் போல் மறு பகுதியும் இருந்தன. நீண்ட நேரம் அவள் தன்னை அலட்டிக் கொள்ள வேண்டாமென்பதற்காக மெல்ல அந்த இடத்தை விட்டு எழுந்தான் அவன். உமா அவனை விடவில்லை.

"ஊருக்குப் போனவுடன் டாக்டர்களை அழைத்து வரப் போவார் என்

அப்பா. எந்த டாக்டரும் அங்கே வரக் கூடாது. கல்யாணம் ஒன்றுதான் எனக்கு வைத்தியம். நீங்கள்தான் என் வியாதியைப் போக்கும் டாக்டர்!''

'' 'நீங்கள் எனக்கு டாக்டருமல்ல; வக்கீலுமல்ல' என்று முன்னால் ஒரு சமயம் சொன்னாயே!''

''அது அந்தக் காலம்! இப்போது எனக்கு எல்லாமே நீங்கள்தான்.''

அவளுடைய வேடிக்கையான பேச்சுக்களுக்கு மத்தியில் ஏதோ ஒரு வேதனையையும் கண்டான் தணிகாசலம். ''எல்லாமே நானல்ல; நமக்கு மேல் கடவுள் ஒருவன் இருக்கிறான்'' என்றான் அவன்.

''அந்தக் கடவுளும் என் கவிதைகளைப் புரிந்து கொள்வானல்லவா?''

மடியில் கிடந்த கையெழுத்துப் பிரதியைப் புரட்டத் தொடங்கினான் தணிகாசலம். அதன் தலைப்பு மாத்திரம் அவன் கண்களை உறுத்தியது. ''உமா! சாகாத சிரஞ்சீவி இலக்கியமென்று எனக்கு இதைச் சொல்லத் தோன்றுகிறது. இதைப் புத்தகமாக வெளியிட்டால் என்ன? இந்தத் தலைப்பு மட்டும் எனக்குப் பிடிக்கவில்லை; மாற்றிவிடு.''

''தலைப்பையும் மாற்றக் கூடாது; புத்தகமாகவும் போடக் கூடாது.''

''ஏன்?''

''ஊர் உலகத்துக்காக நான் இந்தக் கவிதைகளை எழுதவில்லை. 'தாஜ்மஹால்' என்ற தலைப்பில் நீங்கள் எழுதாததால் நான் எழுதியிருக்கிறேன்.''



' அவன் அவளுக்காக எழுதிய அழைப்புக் கதையைப் பற்றித் தன்னுடைய கருத்தை வெளியிட்டாள் உமா. நீண்ட நாளைப் போராட்டத்துக்குப் பிறகு, அவள் தன் தோல்வியைத் தானே ஒப்புக் கொண்டு மனம் கலங்குவது போல் அவனுக்குத் தோன்றியது.

" நீங்கள் என்னை ஒரேயடியாய்த் தூக்கி வைத்து எதற்காகப் பொய்யை எழுதியிருக்கிறீர்கள்? சந்தனக் கிளை, அப்படி-இப்படி என்றெல்லாம் நீங்கள் என்னைப் போற்றுவதற்கு அப்படி என்னிடம் என்ன தனித் தன்மை இருக்கிறது?—நான் மிகவும் இழிந்த பெண்; உங்களுடைய வெறுப்புக்கு ஆளாக வேண்டியவள்."

" நீ எழுதிய கவிதைகளை நீயே ஒரு முறை படித்துப் பார்! வெறும் சந்தனக் கிளையல்ல; சந்தனக் காடு, நீ!"

" இல்லை, இல்லை! இனியும் என்னை உயர்வாகப் பேசாதீர்கள்; என்னால் தாங்க முடியாது" என்று கத்தினாள் உமா. " இப்போது இங்கே உருகிக் கிடக்கும் நான் யார் தெரியுமா? வெறும் கட்டை! தன் மணத்தை யெல்லாம் பறி கொடுத்த அற்பமான விறகுக் கட்டை! ஆசை, பாசம், விருப்பு, வெறுப்பு முதலிய எல்லாத் தன்னலப் பிசாசுகளும் என்னைப் பிடித்துக் கொண்டு பேயாட்டம் ஆட்டுகின்றன. வெட்கத்தை விட்டு உங்களிடமே நான் கல்யாணப் பேச்சை எடுத்த பிறகும், என்னை நீங்கள் பெண்



னென்று மதிக்கிறீர்களா? வேண்டாம்; வேண்டாம்; மதிக்காதீர்கள்.''

தணிகாசலம் அவள் வாயைத் தன் கரத்தால் பொத்தினான். அவன் கண்களில் கண்ணீர் பெருகியது. ''உமா! உன் மனந்தான் உனக்கு எதிரி; வேறு யாராலுமே உனக்குத் துன்பம் கிடையாது. உலகம் எப்படி நினைத்தால் என்ன? நீ எனக்குக் கிடைத்த பெருஞ் செல்வம்; நான் இழக்க விரும்பாத, மறக்க விரும்பாத மாசற்ற செல்வம்! உன்னிடம் மணமில்லா விட்டால் இத்தனை கவிதைகள் எங்கே யிருந்து வரமுடியும்? எட்டி மரம் மணப்பதில்லை; சந்தனந்தான் நன்றாக மணக்கும்.''

''உங்களுடைய கற்பனையை நான் கெடுப்பானேன்?'' என்றாள் உமா. ''அப்படியே அது உண்மையாக இருந்தாலும், அந்த மணத்தையெல்லாம் என் எழுத்தில் கவிதைகளாக உங்களுக்கு வடித்து விட்டேன். மணமில்லாத சந்தனக் கட்டை இது. உங்களுக்கு இந்தக் கட்டை இனி இருந்தாலும் ஒன்றுதான்; எரிந்தாலும் ஒன்றுதான். அந்தக் கவிதைகளில் உள்ள உங்கள் உமாவை மட்டும் நீங்கள் ஒருபொழுதும் மறந்து விடாதீர்கள். என்னைச் சீக்கிரம் மறந்து விடுங்கள். நான் காரணத்தோடுதான் சொல்கிறேன்.''

இத்தனை பயங்கரமான ஒரு பிறவியுடன் தன்னைப் பழக விட்ட கடவுளை அவன் நொந்து கொண்டான். உமா பெண்தானா? அல்லது தெய்வமங்கையா? தன்னை இருகூறாய் அவள் அவனெதிரில் பிய்த்து வைத்த பிறகு அவன் அவள் சொற்களை நம்பத்தான் வேண்டியிருந்தது. உள்ளத்தினாலே உயர்ந்தவள். ஆனால் அந்த உள்ளத்தின் உயரத்துக்கு எழும்பிப் பறக்க முடியாமல் உலகத்தின் ஆசாபாசங்கள் அவளைக் கீழே பிடித்து இழுத்து விட்டன. உலகத்தில் வாழ்ந்து கொண்டே அதன் தூசிக் காற்றைச் சுவாசிக்காமல் ஒதுக்க முடியுமா?

'ஆம், மரமில்லாமல் மணமில்லை; மணமில்லாமல் மரமில்லை' என்று தனக்குள் ஒரு முடிவுக்கு வந்தான் தணிகாசலம். 'சந்தன மரமென்றாலும் அது மரந்தானே? தன்னுடைய அருமை தனக்கே தெரியாமல் அது மற்ற மரங்களைப் போல் எரிய விரும்புகிறது. காதல் உணர்வின் சாதாரணத் தொல்லைகளை அனுபவித்திராதவளால் எப்படி இத்தகைய அமர கவிதைகளை இயற்றியிருக்க முடியும்? அழியும் பொருள்களிலிருந்து அழியாப் பொருள்களைக் காட்டுவது தானே சிரஞ்சீவிக் கலை?'

அவள் கொடுத்த வேதனைகளை மறப்பதற்காக அவள் எழுதிய கவிதைகளையே உருக்கமாகப் பாடத் தொடங்கினான் தணிகாசலம். உமா பேரானந்தப் பெருவெள்ளத்தில் மூழ்கிக் கண்களை இறுக மூடிக் கொண்டாள். ஆனந்தக் கண்ணீர் அருவியாகப் பெருகி அவள் காதுகள் இரண்டையும் குளங்களாக மாற்றின. கவிதை கொடுத்த சுகானுபவம் என்னும் புஷ்பக விமானத்தில் அதை எழுதியவளும் பாடியவனும் அப்போது ஒன்றாக இணைந்து பறந்தார்கள்.

''நிறுத்திவிடாமல் பாடிக் கொண்டே இருங்கள்; நான் கேட்டுக் கொண்டே இருக்கிறேன்'' என்றாள் உமா.

தணிகாசலத்தின் உள்ளுணர்வு நெக்கு நெக்காய் உருகி அவன் எலும்பையே பாகாய்க் கரைத்துக் கொண்டிருந்தது.

## அத்தியாயம் 14
## அழலுருவின் சாட்சியாக...

சின்னபுரத்திலிருந்து வந்த விளக்கமான கடிதங்களைக் கண்ட பிறகு சென்னையிலிருந்த இரு குடும்பத்தாரும் உமாவை வரவேற்க எழும்பூர் ரயிலடியில் வந்து கூடினர். சௌந்தரத்தம்மாள் தன் சொந்த வெறுப்பைக் காற்றில் பறக்க விட்டு, சந்திரசேகரனின் தயவை நழுவ விடாமல் இருப்பதற்காகக் கூட்டத்தாருடன் சேர்ந்து விட்டாள். கலெக்டர் வீட்டுச் சம்பந்தம் கைகூடாதென்று தெரிந்த பிறகு, சகோதரரின் சம்பந்தத்தை உதறி விடுவதற்கு அவனுக்கு மனமில்லை. தானாகவே வலிந்து வந்து கௌரியிடமும் கல்யாணி அம்மாளிடமும் நெருங்கிப் பழகினான்.

எழும்பூர் ரயிலடிக்குள் புகையைக் கக்கிக் கொண்டு எக்ஸ்பிரஸ் வண்டி நின்றது. முதல் வகுப்புப் பெட்டியிலிருந்து தேவகியின் கைத்தாங்கலில் உமா இறங்கி வந்தாள். அவளுடைய கோலத்தைக் கண்ட பேராசிரியர் அதை ரயிலடி என்றும் பாராமல் கதறி அழுது விட்டார். தாமே இதற்கெல்லாம் காரணமென்ற மன உறுத்தல் அவரைப் பிழிந்தெடுத்தது. குழந்தைபோலத் தேம்பித் தேம்பி அழுதார். கௌரி ஓடிப் போய் அவளை மறுபுறம் தாங்கிக்கொண்டு கை கொடுத்தாள். உமாவைக் காண வந்திருந்த அத்தனை கண்களும் கலங்கின. ஆனால், உமா மட்டிலும் கலங்கவில்லை.

தணிகாசலத்தின் வீட்டுக்குள் நுழைந்த உமா அவளுக்காகப் போடப்பட்டிருந்த கட்டிலில் படுக்கவில்லை. கீழே தரையில் சாய்ந்துகொண்டு உட்கார்ந்தாள். மதிப்புக்குரிய விருந்தினர் ஒருவருக்கு நடக்கும் உபசாரங்கள் யாவும் அவளுக்கு நடந்தன. வாய் திறந்து யாருமே ஒரு வார்த்தை அவளிடம் பேசவில்லை. ஜுரமிருக்கிறதா என்று தொட்டுப் பார்த்தாள் கல்யாணி அம்மாள். "எனக்கு ஒரு குறைவும் இல்லை, அத்தை!" என்று சிரித்தாள் உமா. இருதயத்தின் வேகம் கட்டுக்கடங்காமல் அடித்துக் கொண்டது, அவள் ஒருத்திக்கே தெரியும். இரவில் ரயிலில் தூங்குவது போல் கண்களை மூடிக்கொண்டு வந்தாளே தவிர தூங்கவில்லை.

சந்திரசேகரனையும் சந்திரலேகாவையும் அருகில் அழைத்து, "இன்றைக்கு முகூர்த்த நாள்தான்; கடிதத்தில் எழுதியபடி என் கல்யாணத்தை முடித்து விடுங்கள்" என்றாள். "பாலுவிடம் சொல்லி அம்மாவின் படத்தை எடுத்து வரச் சொல்லுங்கள். அதோடு சித்தியுடன் கடைக்குப் போய் எனக்காக எப்பாடுபட்டாவது ஒரு பாவைவிளக்கு வாங்கிக் கொண்டு வாருங்கள். பிறந்த இடத்து ஸ்ரீதனமாக அது போதும்."

கல்யாணி அம்மாள்மீது சாய்ந்து கொண்டு உமா சற்று நேரம் களைப்பாறினாள். "நாங்கள் குற்றாலத்திலிருந்து திரும்பும்வரையில் நீ பொறுத்திருக்கக் கூடாதா, உமா? இவ்வளவு கஷ்டமும் இல்லாமல் காரியம் நடந்திருக்குமே!" என்றாள் கல்யாணி அம்மாள்.

"என்னுடைய புத்தி என்னிடம் இல்லை. தயவுசெய்து என்னை மன்னித்துக் கொள்ளுங்கள், அத்தை!"

கல்யாணத்துக்கு வேண்டிய சாமான்கள் கால்மணி நேரத்துக்குள் வீட்டில் நிறைந்தன. கண்ணபுரத்துச் சுப்பையா ஒரு புறமும், டிஸ்போசல் மாமா மறுபுறமும் சுறுசுறுப்பாக அலைந்தார்கள். டிஸ்போசல் மாமா அன்று மனம் துணிந்து ஆபீசுக்கு லீவு போட்டு விட்டார். எல்லாம் அவர் வீட்டு மூல சக்தியின் உத்தரவு.

சந்திரலேகாவும் கௌரியும் உமாவுக்குத் தலைவாரிப் பூச்சூடி விட்டார்கள். ஆடை அணிகளை அணிவித்து அவளைப் புதுமணப் பெண்ணாக மாற்றினார்கள். உமாவுக்கு இந்த அலங்காரமொன்றும் பிடிக்கவில்லை யென்றாலும் கௌரியின் கண்டிப்புக்காகப் பொறுத்துக் கொண்டாள். நெற்றிக்குத் திலகமிட்டு, கண்களுக்கு மை தீட்டி, தலை நிறையப் பூ வைத்து அவளைக் கண்ணாடியில் பார்த்த போது உமாவுக்கு நோய் நொடி எதுவும் இருப்பதாகவே தெரியவில்லை. கௌரியின் கரத்தைப் பற்றித் தன் கண்களில் ஒற்றிக் கொண்டு, "நான் கொடுத்து வைத்தவள், கௌரி!" என்று நாத் தழுதழுக்கக் கூறினாள்.

மேளதாளம் ஏதுமில்லாமல் அமைதியாகவே திருமணம் நடந்தேறியது. அருகில் பிறந்தகத்து ஸ்ரீதனமான பாவை விளக்கு; மேலே திருத்தணி முருகன் படம்; சுற்றிலும் பெரியவர்கள். பையன் பரமசிவத்தை மடியில் வைத்துக் கொண்டு தலை கவிழ உட்கார்ந்திருந்தாள் உமா. தெய்வ சந்நிதியில் தீப ஒளி காணக் காத்து நிற்கும் பக்தர்களைப் போல் மற்றவர்கள் மௌனமாக நின்று கொண்டிருந்தார்கள். முருகனின் திருவடிக் கீழ், பாவை விளக்கின் சுடரொளியின் சாட்சியாக, உமாவின் தாயாரும் குழந்தை கல்யாணியும் உருவமற்ற பெருவெளியில் நின்று காண, தணிகாசலம் அவள் கழுத்தில் திருவை அணிவித்தான். கௌரி அந்த மஞ்சள் கயிற்றை நிறைந்த மனத்துடன் இறுக்கமாக முடிந்து விட்டாள்.

பெரியவர்களிடம் ஆசீர்வாதம் பெற்றுக் கொண்ட பின்பு, உமா மெல்ல எழுந்து தன் தாயாரின் படத்தருகில் சென்றாள். மாலை மாலையாய்க் கண்ணீர் உதிர்த்து விட்டு, "அம்மா! என் ஆசை நிறைவேறி விட்டதம்மா; இனிமேல் நீ என்னை அழைத்துக் கொள்ளலாம், அம்மா!" என்று கூவினாள்.

சுற்றி நின்றவர்கள் எல்லோரும் இதைக் கேட்டுத் துணுக்குற்றனர். கௌரி பதறிப் போய் அவளை இழுத்துக் கொண்டு கூடத்துக்குச் சென்றாள். அங்கே பெண்களின் கலகலப்பில் அவளுக்குப் பொழுது போனதே தெரியவில்லை. கௌரியின் மடியிலும் தேவகியின் மடியிலும் படுத்துக் கொண்டு அரட்டை அடித்தாள். பேசுவதற்குத் திராணியில்லை என்று தேவகி அவளைத் தடுத்துப் பார்த்தும் உமா கேட்கவில்லை. சந்திரலேகாவுக்கும் கல்யாணி அம்மாளுக்கும் கூடச் சிரிக்கச் சிரிக்கக் கதை சொன்னாள். உமாவின் சக்திக்கு மீறிய குதூகலத்தைக் கண்ட கல்யாணி அம்மாள், "அசட்டுப் பெண்ணே! உன் கதைகளுக்கெல்லாம் என்ன அவசரம்? மெதுவாய் வைத்துக் கொள்ளக் கூடாதோ?" என்று கேட்டாள்.

"போங்கள், அத்தை! இன்றைக்குப் பேசாமல் வேறு என்றைக்கு நான் பேசுவதாம்?" என்று செல்லமாய்ச் சிணுங்கி, "நீங்கள்எல்லோரும்கொடுத்த வாழ்வால் என் மனம் நிரம்பி வழிந்து கொண்டிருக்கிறது, அத்தை!" என்று

தன் நன்றியைக் கொட்ட முடியாமல் கொட்டித் தீர்த்தான் உமா.

பேராசிரியர், டிஸ்போசல் மாமா, சுப்பையா மூவரும் சீட்டுக் கச்சேரியில் இறங்கினார்கள். தணிகாசலம் அவர்களுக்குப் பக்கத்தில் பாயில் படுத்துக் கிடந்தான். அவன் மனத்தில் இன்பமுமில்லை; துன்பமுமில்லை. சலனமற்ற தேக்கத்தில் அது உறைந்திருந்தது. 'இவ்வளவு நாட்கள் இவ்வளவு பிடிவாதமாக விலகியிருந்த உமா, ஒரே நாளில் இப்படி அவசரப்படுவது ஏன்?' அவன் தன் தாயாரின் படத்துக்கு முன்னால் நின்று வேண்டிக் கொண்ட சொற்கள் அவன் செவிகளை விட்டு அகலவில்லை.

இரவு வந்தது. சௌந்தரத்தம்மாவின் குடும்பத்தார் மாத்திரம் சாயங்காலமே வீட்டுக்குத் திரும்பினார்கள். தன் அப்பாவையும் சித்தியையும் அங்கேயே தங்கச் சொல்லியிருந்தாள் உமா. இரவுச் சாப்பாடு முடிந்தவுடன் காற்றோட எல்லோரும் மொட்டை மாடிக்குப் போய்ப் படுக்கச் சென்றனர். தணிகாசலமும் கிளம்பினான். கௌரி அவனைப் பிடித்து நிறுத்தினாள். "உமாவிடம் நீங்கள் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லையே இன்றைக்கு?"

"மெதுவாய்ப் பேசிக் கொள்வது; இனிமேல் எங்கே போகப் போகிறாள்?"

"நன்றாயிருக்கிறது கூத்து!" என்று நகைத்தாள் கௌரி. "பழைய உமா இல்லை அவள். என்னைப் போல் அவளும் உங்களுக்கு வாழ்க்கைப்பட்டிருக்கிறாள். அதை மறந்து விடாதீர்கள். போய் அவளுக்குத் தைரியம் சொல்லி, எல்லாக் கவலைகளையும் விட்டுவிடச் சொல்லுங்கள். அவளுக்கும் நீங்கள்சொந்தம் என்ற நம்பிக்கை ஏற்படச் செய்யுங்கள்."

தணிகாசலம் இனந் தெரியாத வருத்தத்துடன் இலேசாகச் சிரித்தான்.

"அவளுக்கு உடம்பும் சரியில்லை; இந்தச் சமயத்தில் அவளிடம் மனம் நோகப் பேசாதீர்கள். அவள் மேல் எரிந்து விழாதீர்கள். நயமாகப் பேசி, தானேயிருந்து வைத்தியம் செய்து கொள்வதற்கு அவளை எப்படியாவது சம்மதிக்கும்படி செய்யுங்கள்."

உமாவுக்கு அங்கு வந்ததிலிருந்து பாலும் கஞ்சியுமே ஆகாரம். இரவில் அதைக் கூடச் சரியாகக் குடிக்கவில்லையாம். அவளுடைய கலகலப்பு அவளாக ஏற்படுத்திக் கொண்ட கலகலப்பு. மற்றவர்கள் பேச்சைக் கேட்டு அவள் ஓய்வெடுத்துக் கொள்ளவில்லை. தேவகியோ வாய்க்கு வாய், "நேற்றுக் கண் திறக்காமல் படுக்கையில் கிடந்தவள் இன்றையதினம் இப்படிக் கொட்டம் அடிக்கிறாளே!" என்று கூறி வந்தாள்.

தணிகாசலத்தின் எழுத்து அறையில் உமா கொண்டு வந்த ஸ்ரீதனமான பாவை விளக்கு சுடர் விட்டது. உமாவின் கட்டிலைச் சூழ்ந்து கொண்டிருந்த பெண்கள் ஒவ்வொருவராக விலகினார்கள். புது மணப் பெண்ணான உமா தன் கணவனை எதிர்நோக்கித் தனிமையில் காத்திருந்தாள். தனக்கு மாலையிட்ட மன்னவனை முழு உரிமையுடன் சந்திக்க ஒவ்வொரு கணத்தையும் அவள் யுகமாக்கிக் காத்திருந்தாள்.

அடடா! என்ன ஏக்கம், என்ன ஆவல், என்ன இன்பம், என்ன துன்பம், என்ன குதூகலம், என்ன வேதனை......

தணிகாசலம் எட்டிப் பார்த்தான்.

"வாருங்கள்!" ஏதோ விருந்துக்குள் விருந்து அழைப்பது போல் ஒலித்தது.

ஒரு ஓரமாகக் கட்டிலில் நகர்ந்து கொண்டு, தாராளமாக அவன் உட்காருவதற்கு இடம் தந்தாள் உமா. தலையணையிலிருந்த தன் தலையைச் சிறிது சிறிதாக நகர்த்தி அவன் மடியின்மேல் கொண்டு வந்து கிடத்தினாள். நெற்றிப் பொட்டுக்கள் இரண்டும், கடைந்தெடுத்த மூக்கு, வளைந்து வழிந்த புருவங்கள் இரண்டும் பனிச்சென்று துலங்கின. வைத்த விழி வாங்காமல், வாய் பேசாமல், ஆடாமல், அசையாமல் வெகு நேரம் அப்படியே கிடந்தாள்.—அவன் கண்களில் அப்படி என்னதான் இருந்தது? அவளுடைய கருமணிப் பாவைகளுக்குள்ளே அவளுடைய அழகு முகத்தின் பிரதிபிம்பத்தைத் தேடினாளா?

ஏப்ரல் மாதச் சிறு கதைப் போட்டியில் நூறுரூபாய் பரிசு பெற்ற

**"விடுதலைப் பத்திரம்"**

என்னும் கதை அடுத்த இதழில் பிரசுரமாகிறது.

பரிசு பெற்றவர்: ரா. வேதவல்லி "வேதா"

2/6, ராமநாயக்கன் தெரு, நுங்கம்பாக்கம் சென்னை-6



இருமல்!
இதமளிக்கும்
நிரந்தரமான குணத்திற்கு
COUGH SYRUP
பி. ஜ. காப் ஸிரப்
பெங்கால் இம்யூனிடி




ஒன்றல்ல 17
மயக்கும் மணங்கள்
உங்களுக்கு கிறுகிறுப்பும்
புளகாங்கிதமும் தரும்!
PALMOLIVE
Talcum Powder
DE LUXE
வெறியூட்டும் 17 லெண்டுகளின்
அற்புதக் கலவை சேர்ந்த பாமாலிவ்
டால்கம் டீ லக்ஸின் நறுமணம்
உங்களை மகிழ்வித்து புளகாங்கிதம்
அடையச் செய்யும்...
மணிக்கணக்காக
உங்களுக்கு குளுமையும்
புத்துணர்ச்சியும்
அளிக்கும்!
பாமாலிவ்
டால்கம் டீ லக்ஸ்
உண்மையில் உயர்ந்த டால்க்...
வீட்டிலுள்ள அனைவருடைய சுகத்திற்கும்
சுகாதாரத்திற்கும்...குழந்தைக்கும்கூட!


சௌகரியமும்
திறமையும்
தருமாறு அமைக்
கப்பட்டுள்ளது.
பிரபாத்
புராடக்ஸ்
"இந்தியாவில் முதன்மை
யானவை, இன்றும்
முதல்தரமானவை."
Prabhat
Prabhat

அவளுடைய சலனமற்ற பரவச நிலை அவனுக்கு விநோதமாகத் தோன்றியது.

"அங்கே என்ன வைத்திருக்கிறாய்? எதைத் தேடுகிறாய்?"

"அதுவா!" மீண்டும் அந்தப் பொல்லாத மௌனம்; பெருமூச்சு. "மாமா! என்னையே அங்கு வைத்திருக்கிறேன்; என்னையே தேடுகிறேன்!"

"நீதான் என் மடியில் இருக்கிறாயே?"

"ஊஹூம்!" ஒரு சிணுக்கம். "என் உயிரை...என் கற்பனையை...என் எல்லாவற்றையுமே தேடுகிறேன்!...உங்கள் கண்கள் பொல்லாத கண்கள். அழிவிலிருந்து அழிவற்றதைத் தேடும் கண்கள்."

"உளற ஆரம்பித்து விட்டாயா?" தணிகாசலம் சிரித்தான்.

உமா கொஞ்சும் மொழியில் செல்லமாய்க் கேட்டாள். "ஏன் மாமா, நான் உங்களுடைய மனைவி தானே?"

"என்ன, சந்தேகம் வந்து விட்டது!"

புத்தம் புது மஞ்சள் கயிற்றில் தொங்கிய தாலியை மார்பகத்தில் எடுத்து விட்டுக் கொண்டு விரல்களால் அதைச் சுற்றிச் சுழற்றி விளையாடினாள். "உங்களிடம் நான் அகப்பட்டுக் கொண்டு விட்டேன்.—இல்லையா?"

'நான்தான் அகப்பட்டுக் கொண்டு விழிக்கிறேன், தனியாய்த் தவிக்கிறேன் ஒரு பைத்தியத்திடம்!' என்று சொல்வதற்குத் தோன்றியது அவனுக்கு.

தனக்குத்தானே அந்தத் தாலியிடம் பேசிக் கொண்டாள் உமா. "நான் இனி உங்களுக்கே சொந்தம்; உங்களுக்கு மட்டுமே சொந்தம். இனிமேல் நீங்கள் என் கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ள மாட்டீர்கள்! வெளியில் தள்ளினால்தான் என்ன, என் கழுத்தைக் கட்டிக் கொண்டு என்னுடன் தொங்கிக் கொண்டே வருவீர்கள்!"

தணிகாசலத்தின் கண்கள் கலங்குவதற்குள் அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டாள் உமா. "'சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவது இனியே!'" என்ற சிவனடியாரின் வரிகளை முணுமுணுத்தாள்.

நெஞ்சில் குமைந்து கொண்டிருந்த நெருப்பெல்லாம் அப்போது உமாவின் விழிகளில் குளிர் நிலவாய்க் குழைந்தது. ஊற்றுப் பெருக்கால் அந்தக் கண்களிலிருந்து குளுமை பொங்கிக்கொண்டே இருந்தது. அவளை வளைத்துக் கொண்டிருந்த கரங்கள் இலேசாகச் சுட்டன. தென்றல் கண்ட மாந்தளிரென உமாவின் இதழ்கள் இரண்டும் துடிதுடிப்பதைக்கண்டான் தணிகாசலம். தென்றல் கண்ட மாந்தளிரா! அல்லது தேனூறும் வண்ண ரோஜாவா! உமாவின் நெட்டுயிர்ப்பில் குளிர் நெருப்பின் கொழுந்துகள் புகை எழுப்பின. தணிகாசலமும் உமாவும் ஒருவரை யொருவர் மறந்து, ஒருவரில் ஒருவர் ஒன்றி, ஒருவரும் ஒருவ

## ஜூன் மாதச் சிறுகதைப் போட்டி

1. மாதந்தோறும் நடக்கும் இந்தச் சிறுகதைப் போட்டியில் எழுத்தாளர்கள் எல்லோரும் கலந்து கொள்ளலாம்.

2. எழுத்தாளர்கள் சொந்தமாகவே கதைகள் புனைந்து அனுப்ப வேண்டும். கதைகள் கல்கியில் ஆறு பக்கத்திலிருந்து பத்து பக்கம் வரையில் வெளியிடக் கூடியதாக இருக்கலாம்.

3. ஒவ்வொரு மாதமும் அந்தந்த மாதப் போட்டிக்கு வந்த கதைகளில் சிறந்ததற்கு நூறு ரூபாய் பரிசு வழங்கப்படும்.

4. ஜூன் மாதப் போட்டிக்கு ஜூன் 1-ந் தேதியிலிருந்து 30-ந்தேதி வரை கதைகள் எழுதி யனுப்பலாம். ஜூன் மாதப் போட்டிக்கு வந்த கதைகள் ஜூலை மாதம் முழுதும் பரிசீலனை செய்யப்படும். பரிசு பெற்ற கதை ஆகஸ்டு மாதத்தில் பிரசுரமாகும். அதேபோல் அந்தந்த மாதக் கதைகள் அடுத்த மாதத்தில் பரிசீலனை செய்யப்பட்டு, அதற்கடுத்த மாதத்தில் பிரசுரமாகும்.

5. கதைகளை நல்ல காகிதத்தில் இடைவிடுகள் விட்டு ஒரே பக்கத்தில் எழுத வேண்டும். காகிதத்தின் மறு பக்கத்தில் எழுதக் கூடாது.

6. தேர்ந்தெடுக்கப்படாத கதைகளைத் திரும்பிப் பெற விரும்புவோர் அவற்றுடனேயே போதிய தபால் பில்லைகள் வைத்து அனுப்ப வேண்டும். தபால் பில்லைகள் வைத்து அனுப்பாதவற்றைத் திருப்பி யனுப்புவதற்கில்லை.

7. போட்டிக் கதை சம்பந்தமாக எந்தவிதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்வதற்கில்லை.

8. தேர்ந்தெடுத்த கதைகளைத் திருத்துவதற்கும் குறைத்து வெளியிடுவதற்கும் ஆசிரியருக்குப் பூரண உரிமை உண்டு.

— ஆசிரியர், கல்கி

ரும் இல்லாமல் உருகிக் கலந்து போனார்கள். அனல்பட்ட மெழுகாய் அவர்கள் கரைந்தார்கள்.

அந்த அறையில் நிறை பாவை விளக்கு கடல் அலைகளின் சங்கமத்தைக் கண்டு களிக்கும் கலங்கரை விளக்கம் போல், கம்பீரமாக ஒளி உமிழ்ந்தது. புதுமணத் தம்பதிகளுக்கென்றே தன் ஒளியைச் சந்தன வெள்ளமாக்கி அறை முழுவதிலும் அது தெளித்து வைத்திருந்தது. ஐம்புலனும் ஒரு புலனாய், அழகுருவாய், ஒரு பொருளாய் அவர்கள் ஒடுங்கி நிற்பதை அந்தப் பாவை விளக்கு தன் சுடர்க் கரத்தால் பஞ்சபூதங்களுக்கும் சுட்டிக் காட்டியது போலும்.

அதற்குப் பிறகு, அடடா! உமா பேசிய பேச்சுக்கள், சிரித்த சிரிப்புகள், காதோடு காதாய்க் கொஞ்சிய ரகசியங்கள், செய்த குறும்புத்தனங்கள்! உமாவைக் கொஞ்சும் கிளி என்பதா? கூவும் குயில் என்பதா? ஆடும் மயில் என்பதா? குழந்தையிலும் குழந்தையாக மாறி அவள் மழலை மிழற்றினாள். கந்தர்வ லோகத்தின் அப்ஸரஸாக மாறி அற்புதமாகப் பாடி அவள் அவனை ஆனந்த பரவசத்தில் ஆழ்த்தினாள்.

நேற்று வரையில் இருதய பலவீனத்தால் நோய்ப் படுக்கையில் கிடந்து எமனோடு போராடியவளுக்கு இத்தனை தெம்பு எங்கிருந்து வந்தது? தன்னுடைய சக்தியை யெல்லாம் அணு அணுவாகத் திரட்டி இந்த ஒரே இரவில், அனைத்தையும் கொட்டிக் கவிழ்க்க விரும்புகிறாளா? இதை எண்ணித் தணிகாசலம் பயந்து விட்டான்.

உமாவின் உல்லாசப் பிதற்றல்கள் அவனுக்கு வேடிக்கையாக இருந்தன. வேதனையாகவும் இருந்தது. அமாவாசை இரவில் மொட்டை மாடியில் படுத்துக் கொண்டு அவனும் அவளும் வானத்து நட்சத்திரங்களை எண்ணிக் கணக்கெடுக்க வேண்டுமாம்! பூத்தொட்டிக்குப் பக்கத்தில் கண் கொட்டாமல் உட்கார்ந்து கொண்டு இதழ் இதழாக ரோஜா கட்டவிழும் அதிசயத்தைக் காண வேண்டுமாம்! கடையில் விற்கும் வாசனைப் 'பௌடரு'க்குப் பதிலாக அவன் அவளுக்கு மலர்களிலிருந்து மகரந்தப் பொடியைச் சேகரித்துத் தரவேண்டுமாம்!

'பித்தம் தலை உச்சிக்கு ஏறிவிட்டது' என்று நினைத்துக்கொண்டு, "பேசியது போதும், உமா; நாளைக்குப் பேசிக்கொள்ளலாம்; வாயை மூடிக்கொண்டு தூங்கு!" என்று தன் விரலை அவள் வாயருகில் கொண்டு சென்றான்.

"நாளைக்கா!...ஊஹூம்!...நாளைக்கு என்ற பேச்சில் எனக்குச் சிறிதும் நம்பிக்கை இல்லை."

தணிகாசலத்தின் இருதயம் ஒருமுறை குலுங்கி விழுந்தது.

கோபத்துடன் அவன் அவளைக் கண்டித்தான். "பச்சைக் குழந்தையா, நீ? கல்யாணியின் பிடிவாதம் கூடத் தேவலாம் போலிருக்கிறதே!"


"என்ன சொன்னீர்கள்! என்ன சொன்னீர்கள்!" உமா ஆத்திரத்துடன் அவன் தோளைப் பிடித்துக் குலுக்கினாள். "குழந்தை கல்யாணியா?...ஆ! என் நெஞ்சு வலிக்கிறதே!"

உமா கட்டிலில் சுருண்டு விழுந்தாள். விளக்கு நாச்சியார் தன் ஏந்திய கரங்களால் அவள் முகத்துக்கு ஒளி தந்து கொண்டிருந்தாள். எந்தச் சமயத்தில் எந்தப்பேச்சை எடுக்கக் கூடாதோ, அந்தப் பேச்சை எடுத்து, உமாவின் நினைவில் குழந்தை கல்யாணியைக் கொண்டு வந்ததற்காக அவன் தன் நாக்கைக் கடித்துக் கொண்டான்.

இரவின் அமைதியைக் குலைத்துக் கொண்டு எங்கிருந்தோ ஒரு ஆந்தை அலறியது. (அடுத்த இதழில் முடியும்)

சங்கீதத்தை விரும்புவோர் சிலரே . . .





ஆனால் எல்லோரும் விரும்புவது



Parry's பாரிஸ்

மிட்டாய்களே

ஏனெனில் அவை ருசியுள்ளவை, ஆரோக்கியமானவை, சுத்தமானவை

தயாரிப்போர்: பாரீஸ் கன்பெக்ஷனரி லிமிடெட், மதராஸ்

PRS 318

# கால்கேட்டின்

## துப்புரவாக சுத்தம் செய்யும் வன்மை உங்களது பற்களையும் ஈறுகளையும் பாதுகாக்கிறது !

சாஸ்திரீயமாக அமைக்கப்பட்ட கால்கேட் டூத் பிரஷ் உங்கள் பற்களின் இடுக்குகளில் சுலபமாக நுழைகிறது . . . உட்புறத்தையும், வெளிப்புறத்தையும் துப்புரவாக சுத்தம் செய்கிறது . . . பல் ஈறுகளை மிருதுவாகத்தடவி உறுதிப்படுத்துகிறது! உங்கள் பற்களையும், ஈறுகளையும் கால்கேட் டூத் பிரஷ்ஷால் பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

4 சைஸ்கள் : ★ அடல்ட் ★ ஜூனியர் ★ சைல்ட் ★ பேபி

★ ஹார்ட் ★ மீடியம் ★ ஸாப்ட்

உலகச் சுகாதார பிளாஸ்டிக் குழாயில் கிடைக்கும். ரெகுலரும் கிடைக்கிறது.




அழகான பிளாஸ்டிக் பிடிகளில் உறுதியாகப் பொருத்தப்பட்ட ஸ்டெரிலைஸ் செய்யப்பட்ட நைலான் பிரிஸல்கள்

இந்தியாவில் சிறந்த டூத்பேஸ்ட் செய்பவர்களால் தயாரிக்கப்படுகிறது!

---




# மழமழப்பான சுகமான க்ஷவரத்திற்கு...

வாழ்வில் வெற்றி கண்டவர்கள் வேறெந்த தயாரிப்பையும் நாடாமல்

# பாமாலிவ்

ஷேவிங் கிரீமைத்தான் உபயோகிக்கிறார்கள்




பாமாலிவ் என்றாலே உயர்ந்த ரகம்!

# செல்வமும் சுதந்திரமும்

கெ. சந்தானம்

## 10. மூல சுதந்திரங்கள்

மனம் போனவாறு சிந்தித்தல், தன் சிந்தனையை ஒளியாமல் பிறரிடம் பிரசாரம் செய்தல், அப்படிப் பிரசாரம் செய்வதற்கு மற்றவர்களைச் சேர்த்துச் சங்கம் அமைத்தல்- இம் மூன்றும் மனிதனின் மூல சுதந்திரங்களாவன. சஞ்சார சகாப்தத்தில் இவற்றுக்கு எவ்விதத் தடைகளும் இருந்திருக்க முடியாது. ஆனால், அப்பொழுது இவ்வுரிமைகளுக்கும் அதிக அவசியமில்லை. சிக்கலான எவ்வித சமூகப் பிரச்னைகளும் இல்லை. சூக்ஷ்மமாகச் சிந்திக்க ஆற்றலளிக்கும் கல்வியும், நூல்களும் வாதம் செய்யும் கூட்டங்களும் இல்லை.

விவசாய சகாப்தத்தில் மதத்தைப் பற்றியும், சமூக ஆசாரங்களைப் பற்றியும் இந்தச் சுதந்திரங்கள் அவசியமாக இருந்தன. சில இடங்களில் அரசியல் முறைகளைப் பற்றியும், அரசர்களின் போக்குகளைப் பற்றியும் தீரர்கள் சுதந்திரமாகப் பிரசாரம் செய்து கொடிய தண்டனைக்குட்பட்டார்கள். ஆனால் பொதுவாக அரசாங்கத்துக்கும் பொது மக்களின் வாழ்க்கைக்கும் நெருங்கிய சம்பந்தமில்லை. விவசாயம், குடிசைத் தொழில்கள் முதலிய பொருளாதார ஏற்பாடுகள் மிகவும் எளியவைகளாக இருந்ததால் அவைகளைப் பற்றி வாத விவாதத்துக்கு இடமில்லை. ஆகலால் மதத்தைப் பற்றியும், அதன்பேரில் அமைக்கப்பட்டுள்ள பழக்க வழக்கங்களைப் பற்றியுமே தீவிர அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டன. அவைகளுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்ட பாரதம், சீனா முதலிய நாடுகளில் மதமோ, சமூகமோ அதிகமாகப் பாதிக்கப்படவில்லை. அவைகளைத் தடுக்கப் பலாத்காரத்தைப் பிரயோகம் செய்த தேசங்களில் பெரிய கலகங்களும், குழப்பங்களும் ஏற்பட்டன. ஒரு கொள்கையின் உண்மை எவ்வாறு இருப்பினும் அதை மற்றொருவன் தடுப்பதால் அதன் பலம் சாதாரணமாக அதிகரிக்குமே ஒழிய, குன்றாது. மதக் கொள்கைகளுக்காக உயிர் கொடுப்பவர்களுக்கு மறுமையில் பெரும் பலன் கிடைக்குமென்ற நம்பிக்கையின் காரணமாக அவைகளை அடக்குவது சாத்தியப்படாமல் இருந்தது.

இயந்திர சகாப்தத்தில் மக்களின் கவனம் மதத்திலிருந்து அரசியலிலும், பொருளாதாரத்திலும் செல்லுகிறது. ஆகலால் இக் காலத்தில் இத் துறைகளிலேயே இம் மூல சுதந்திரங்களைப் பற்றிய பிரச்னைகள் சிக்கலாக இருக்கின்றன. கல்வி பெருகி, பத்திரிகைகளும், புத்தகப் பிரசுரங்களும் பெரிதும் ஓங்கி, பிரசார வசதிகளும் கணக்கின்றி வளர்ந்து விட்டதால் இந்தச் சுதந்திரங்களின் தன்மைகளும், போக்குகளும் மிகவும் மாறிப் போய் விட்டன.

இக்காலத்தில் எல்லாவித புதிய எண்ணங்களுக்கும், பிரசாரங்களுக்கும் பத்திரிகை முக்கிய சாதனமாகி விட்டதால், பத்திரிகை சுதந்திரமே மூல சுதந்திரங்களின் அஸ்திவாரமாகி விட்டது. பத்திரிகைகளின் ஆதரவின்றி அரசியல் கட்சிகளும், சங்கங்களும் தங்கள் கொள்கைகளைப் பரப்ப முடியாது. பத்திரிகைகளின் சுதந்திரத்தை ஒழித்து அவைகளைத் தமது பிரசாரக் கருவிகளாகச் செய்வதே இந்தக் காலத்திய எதேச்சாதிகார அரசாங்கங்களின் முதல் காரியமாகும். சுதந்திரப் பத்திரிகைகளும் எதேச்சாதிகாரமும் ஒரே தேசத்தில் சேர்ந்து வாழ முடியாது. ஆதலால் இந்தக் காலத்தில் ஜனநாயக முறை ஒன்றிலே தான் மூல சுதந்திரங்கள் நிலவுவது சாத்தியமாகும்.

பத்திரிகைகளைத் தவிர, வானொலிப் பிரசாரமும் முக்கியமான போதிலும் அது பல ஜனநாயக ராஜ்யங்களிலும் சர்க்கார் வசத்திலிருக்கிறது. அதன் மூலம் அரசாங்கத்துக்கு விரோதமாகப் பிரசாரம் செய்வதென்பது சாத்தியமல்ல.

ஜனநாயகத்தில் பத்திரிகை சுதந்திரம் இருப்பினும், பத்திரிகைகளை நடத்துவது மிகவும் கடினமாகி வருகிறது. லக்ஷக்கணக்கான முதல் வேண்டும். முதலாளிகளின் கொள்கைகளை அனுசரித்தே அதன் ஆசிரியர்கள் எழுத வேண்டும். அதிக முதலின்றிச் சிறிய பத்திரிகைகளைப் பிரசுரித்தால் அது விற்பனையாவதில்லை. பத்திரிகைகளின் வருமானத்தில் பெரும் பாகம் விளம்பரத்திலிருந்து கிடைக்கிறது. சில்லறை விஷயங்களில் விளம்பரம் செய்யும் முதலாளிகள் தலையிடா விட்டாலும், தமது கூட்டத்துக்கே விரோதமான கொள்கைகளுக்கு ஆதரவளிக்க மாட்டார்கள்.

சர்க்கார் விளம்பரங்கள் அதிகரித்து வருவதால் மற்றோர் விதத்தில் பத்திரிகைகளின் சுதந்திரத்துக்கு ஆபத்து. ஓரளவு அதிகாரத்தாலும், மீறி பணத்தாலும் ஜனநாயக அரசாங்கங்களும் பத்திரிகை மீது ஆதிக்கம் பெறக் கூடும்.

சங்கங்கள் மூலம் புதிய கொள்கைகளைப் பரப்பக் கூடுமென்றால், இயந்திர சகாப்தத்தில் அதற்கும் பல கஷ்டங்களுண்டு. பிரசாரத்துக்கு வேண்டிய கூடத்தின் வாடகை, ஒலிபரப்புக் கருவிகள் முதலிய வசதிகளுக்கு ஏராளமாகச் செலவு செய்யவேண்டும். திறந்த மைதானத்தில் பொதுக்கூட்டம் போட்டுப் பிரசாரம் செய்வது பாரதமொன்றில்தான்

என்று தோன்றுகிறது. அதுவும் பாரதம் விவசாய சகாப்தத்தில் இன்னமும் இருந்து வருவதால் அவ்விதக் கூட்டங்கள் அமைதியுடன் நடைபெறுவது நாளுக்கு நாள் மிகவும் கஷ்டமாகி வருகிறது.

கல்வி மூலம் குறிப்பிட்ட கொள்கைகளைப் போதிப்பது மூல சுதந்திரங்களுக்கு மறைமுகமான அபாயமாகும். சிறு குழந்தைகளுக்குச் சில கொள்கைகளே உண்மையானவை, அதற்குமாறாகச் சிந்திப்பவர்கள் தீயவர்கள் என்று வற்புறுத்தி வந்தால், அவர்களுக்குச் சுதந்திரமாகச் சிந்திக்கும் சக்தி மங்கிவிடும். மற்றவர்கள் சிந்திப்பதற்கும் சரியான சூழ்நிலை இருக்காது. பாலர்களிடம் பிரசாரம் செய்வதன் மூலம் தமது லட்சியங்களை நிலை நிறுத்த ஹிட்லர் முயன்றார். அதைப் போலவே ருஷியாவிலும், மற்றப் பொதுவுடைமை நாடுகளிலும் கல்வி பிரசாரக் கருவியாக உபயோகிக்கப்படுகிறது.

இந்த மூல சுதந்திரங்களை மனித சமூகத்தின் அடிப்படையான உரிமைகளாக்க வேண்டுமென்று சர்வதேச சங்கத்தின் மூலம் அரிய முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. அவை பாராட்டத் தக்கவையே. ஆயினும், சர்வதேச சங்கத்துக்கும் தனி மனிதனுக்கும் வெகுதூரம் நடுவில் இருக்கும் அரசாங்கங்கள், முதலாளிக் கூட்டங்கள், அவற்றின் பரம்பர விரோதங்கள் பிரஜைகளின் மூல சுதந்திரங்களைப் பறித்துவிடத் தயாராக இருக்கின்றன.

மேற்கூறியதிலிருந்து, மூல சுதந்திரங்களைக் காப்பதற்குப் பல முறைகளை ஏககாலத்தில் கையாள வேண்டும். அனைத்துக்கும் அடிப்படை ஜனநாயகம். அதை உயிரைக் கொடுத்தேனும் பாதுகாக்க வேண்டும். ஜனநாயகம் இழந்த மக்களுக்கு வேறு எவ்விதத்திலும் மூல சுதந்திரங்கள் நிலைத்திரா.

ஜனநாயகத்திலும் இம்மூல உரிமைகள் அரசியல் திட்டத்தில் தெளிவாக விதிக்கப்பட்டிருப்பது நலம். பாரத அரசியல் திட்டத்தில் முதன் முதலில் கண்டிருந்த உரிமைகளில் ஓரளவு சுருக்கி மாறுதல்கள் செய்யப்பட்டன. அதற்கு எதிராகப் போதிய கிளர்ச்சி இல்லை. இவ்விதம் மேன்மேலும் மூல உரிமைகளைச் சுருக்கி விடுவதற்கு இடம் கொடுக்கலாகாது.

சுதந்திரத்தில் பற்றுள்ளவர்கள் ஆங்காங்கு அதைப் பாதுகாப்பதற்குச் சங்கம் அமைத்து, சுதந்திரத்துக்குப் பங்கம் ஏற்பட்டபொழுது அதனைக் கோர்ட்டுகள் மூலம் ஸ்தாபிப்பதற்கு முயல வேண்டும். இக்காலத்தில் கோர்ட்டுகளில் வாது செய்வதற்கு அதிகப் பணமும் செலவாகும். காலமும் பிடிக்கும். பலர் சேர்ந்து வாதாடினால்தான் சாத்தியமாகும்.

சுதந்திரத்தைப் பாதுகாப்பதை முக்கிய உத்தேசமாகக் கொண்ட சில பத்திரிகைகள் ஆங்காங்கு பிரசுரிக்கப்பட வேண்டும். அவை வார, மாதப் பத்திரிகைகளாக இருந்தால் கூடப் போதுமானது. எவ்விதக் கட்சிக்கும், சுயநலக் கூட்டத்துக்கும் கட்டுப்படாமல் இருக்க வேண்டும்.

இவ்வித சுதந்திர சங்கங்களும், பத்திரிகைகளும் எந்த அரசியல் கட்சியையும் சேர்ந்திருக்கலாகாது. எல்லா அரசியல் கட்சிகளும் சுதந்திரத்தின் பாதுகாப்பைத் தமது பொதுக் கொள்கையாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

முடிவில் வேறு வழிகளில் சுதந்திரத்தைக் காப்பாற்றுவதற்குச் சாத்தியமில்லாமல் போனால், காந்தியடிகள் போதித்த சத்தியாக்கிரகத்தை உபயோகித்துக் காப்பதற்குப் பலர் தயாராக வேண்டும். சாதாரணமாக ஜனநாயகத்தில் சத்தியாக்கிரகத்துக்கு இடமில்லை. பிரசாரத்தின் மூலம் பெரும்பாலோரின் மனத்தை மாற்றுவதே சரியான முறை. ஆனால் இது எப்பொழுதும் பலனளிக்காது. பெரும்பான்மைக் கட்சியினர் அகங்காரத்தாலோ, கோபத்தாலோ மூல சுதந்திரங்களைப் புறக்கணிக்கலாம். அல்லது அதிகாரிகள் அவ்வாறு புறக்கணிப்பதைத் தடுக்காமலிருக்கலாம். அப்பொழுது ஒரு சிலர் தைரியமாகச் சுதந்திரத்தைக் காப்பாற்றி அதிகாரிகளை எதிர்த்துச் சத்தியாக்கிரகம் செய்தால் சமூகம் விழித்துக் கொண்டு அவர்களுக்கு ஆதரவு அளிக்கும்.

மக்களுடைய மனமே சுதந்திரத்தின் கடைசிக் கோட்டை. சுதந்திர மனமுள்ள மக்களை எவரும் நீண்ட காலம் அடிமைப்படுத்துவது சாத்தியமாகாது. அவ்வாறு மனத்தில் சுதந்திரம் குடிகொள்ளாத மக்கள் எதேச்சாதிகாரிகளுக்கும், போக்கிரிகளுக்கும் அடிமைப்படாமல் தப்புவது துர்லபம்.

## பிரஜையின் உரிமைகள்

மூல சுதந்திரங்கள் தனிமனிதனின் பிறப்புரிமைகளாவன. அவற்றைத் தவிர, ஒரு ராஜ்யத்தில் பிரஜையாக இருப்பதால் சில உரிமைகள் கிடைக்க வேண்டுமென்று இக்காலத்தில் பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுகிறது. பால்யத்தில் கட்டாயமாகவும், இலவசமாகவும் கல்வி போதிக்கப்படுவது நாகரிக சமூகத்தின் அடிப்படையான கடமையாகக் கருதப்படுகிறது. இந்திய அரசியல் திட்டத்தில் பாரதக் குழந்தைகள் அனைவருக்கும் 14 வயது வரையில் கட்டாயக் கல்வி 1960-ம் வருஷத்துக்குள் கற்பிக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தற்பொழுது 100-ல் 50 குழந்தைகளே 11 வயது வரையில் பள்ளிகளில் படிக்கின்றனர். அரசியல் திட்டத்தின் உத்தேசத்தை நிறைவேற்றுவதற்கு இருபது, முப்பது வருஷங்கள் பிடிக்கும் என்று தோன்றுகிறது. ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் 15, 16 வயது வரையில் பையன்களும், பெண்களும் கட்டாயமாகக் கல்வி பயிலுகின்றனர்.

இதனைத் தவிர, சாமர்த்தியமுள்ள பையன்களும், பெண்களும் உயர்தரக் கலாசாலைகளிலும், தொழிற்பயிற்சி நிலையங்களிலும் சேர்ந்து தேர்ச்சி பெற உரிமை பெற வேண்டுமென்றும் ஒப்புக் கொள்ளப்படுகிறது. பொதுவுடைமை நாடுகளில் மட்டும் இது பூர்ணமாக நிலவி வருகிறது. ஆனால் எந்தப் பையன் அல்லது பெண்ணுக்கு எந்த சாஸ்திரத்துக்கு, தொழிலுக்கு அல்லது கலைக்கு விசேஷ சாமர்த்தியம் இருக்கிறது என்பதைப் பற்றி அதிகாரிகளே தீர்மானிப்பதால் பாரபட்சமும், அநியாயமும் எளிதில் பரவும். இதர தேசங்களில் ஓரளவு சாமர்த்தியம் இருக்கிறதென்று அத்தாட்சி பெற்று விட்டால் மேற்படிப்புக்கு உரிமை எளிதில் கிடைக்கிறது. ஆனால் பணம்

இருந்தாலொழிய அதனைப் பயன்படுத்திக் கொள்ள முடியாது. ஏழைப் பையன்களையும் பெண்களையும் இம்மாதிரி தங்கள் சக்திகளை வளர்ப்பதைத் தடுப்பதால் அவர்களுக்கு மட்டுமின்றிச் சமூகத்துக்கே கஷ்டமென்பதை உணர்ந்து, அதற்காகப் புத்திக் கூர்மையான ஏழை வாலிபர்களுக்குத் தாராளமான உதவி கொடுக்கும் வழக்கம் பெருகி வருகிறது. அமெரிக்கா போன்ற சில இடங்களில் ஏழைகள் வேறு தொழில்களில் சம்பாதித்துக் கொண்டே உயர்தரப்படிப்பையும்சாதிப்பதற்கு வசதிகள் இருக்கின்றன.



விஞ்ஞானம், வைத்தியம், கட்டட, இயந்திர, மின்சார எஞ்சினியரிங் பயிற்சி, சங்கீதம் முதலிய துறைகளில் இயற்கையான ருசியும், மேதையுமுள்ள வாலிபர்கள் சமூகத்தின் பொக்கிஷங்கள். அவர்களை அன்புடன் பொறுக்கியெடுத்து அந்த சக்திகளை வளர்ப்பதற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் அளிப்பது தூரதிருஷ்டியுள்ள சமூகத்தின் கடமையாகும். அவற்றைப் பலரும் சம்பாதிக்கும் தொழில்களாகவே பாவித்து, ஜாதி, மத, அந்தஸ்தின்பேரில் தகுதியில்லாத வாலிபர்களை நிபுணர்களாக்க முயலுவது முடிவில் பிரயோசனமில்லாத முயற்சி மட்டுமில்லாமல் சமூகத்துக்குத் தீங்கு விளைவிப்பதாகும். ஒரு நாட்டின் வைத்தியர்களின் தரம் குறைந்தால் மக்களின் ஆரோக்கியத்துக்கு அபாயம். எஞ்சினீர்கள் மட்டமாக இருந்தால் கட்டடங்களுக்கும், இயந்திரங்களுக்கும், தொழிலாளிகளின் உயிருக்கும் அபாயம். புதிய கருவிகளை நிர்மாணிப்பதற்கும், விஞ்ஞானமும், கலைகளும் வளர்வதற்கும் சமூகத்தின் சக்தி குன்றிவிடும். புத்திக்கும், பிறப்புக்கும் ஓரளவு இயற்கையான சம்பந்தம் இருக்கக் கூடுமாயினும், அதனை நிச்சயமாக நிர்ணயிக்க மனிதனுக்கு ஆற்றலில்லை. ஒவ்வோர் குழந்தையின் புத்திக் கூர்மையையும், சாமர்த்தியத்தையும் பாரபட்சமின்றிக் கவனித்தே முடிவு செய்ய வேண்டும்.


கல்விக்கு அடுத்தபடி நோயற்ற வாழ்வு பிரஜையின் உரிமையாகக் கருதப்படுகிறது. இதற்கு இரண்டு வித வசதிகள் தேவை. சமூகத்தில் அனைவருக்கும் பொதுவான சுகாதார ஏற்பாடுகள் வேண்டும்.சுத்தமான குடிஜலம், புழுதியில்லாத ரோட்டுகள், சாக்கடை வசதிகள், கொசு பூச்சிகள் இல்லாமை, வீடுகளிலும் தொழிற்சாலைகளிலும் காரியாலயங்களிலும் நல்ல காற்று, வெளிச்சம், அதிக உஷ்ணமும் குளிரும் இல்லாமலிருப்பதற்கு ஏற்பாடுகள் முதலியவை. தனிப் பிரஜை நோய்வாய்ப் பட்டபொழுது, அவனுக்கு வேண்டிய வைத்தியமும், அவன் ஆஸ்பத்திரியில் இருக்கும் பொழுது அவனுக்கும் அவன் குடும்பத்துக்கும் வேண்டிய உதவிகள். இவ்விரண்டும் பூர்ணமாகக் கிடைக்கும் சமூகத்தில் மனித சக்திக்குட்பட்ட நோயற்ற வாழ்வு சாதிக்கப் பட்டதென்றே கூறலாம்.

மூன்றாவதான பிரஜா உரிமை கவலையற்ற ஜீவனம். இதற்கு மூன்று அம்சங்களுண்டு. கல்வி கற்று வயது வந்தவுடன் சாமர்த்தியத்துக்குத் தகுந்த தொழில் கிடைக்க வேண்டும். அம்மாதிரி தொழில் கிட்டாமலிருந்தாலோ, சிறிது காலம் கிட்டிச் சிறிது காலம் வேலையில்லாமல் இருந்தாலோ, வேலையில்லாத காலத்தில் போதிய உதவி அளிக்க வேண்டும். அபாயத்தாலோ, நோயாலோ வேறு எக் காரணத்திலாவது தொழில் செய்யும் சக்தியை இழந்து விட்டால், அவனையும் அவனை அண்டி யிருப்போரையும் பராமரிப்பது சமூகத்தின் பொறுப்பாக இருக்க வேண்டும். மூன்றாவதாக, முதிர்ந்த வயதில் பிரஜைக்குத் தந்சமயம் சர்க்கார் சேவகர்களுக்குக் கொடுப்பது போல் பென்ஷன் வழங்க வேண்டும்.

இவற்றையெல்லாம் செய்வதற்குப் பல முறைகள் உண்டு. கூலி, சம்பளம் கொடுக்கும் காலத்தில் இதற்காக ஒரு பங்கு எடுத்துச் சேமித்துவைக்கலாம். பொது வரிப்பணத்திலிருந்து கொடுக்கலாம். ஒவ்வோர் தொழிலுக்கும் தனியாகச் சேமிப்பு முறை வகுத்து, அவற்றில் சேராத சிலருக்கு மட்டும் சமூகப் பொதுநிதியில் உதவியளிக்கலாம்.

கல்வி, நோயற்ற வாழ்வு, கவலையற்ற ஜீவனம் இம் மூன்றையும் போதிய அளவில் சாதிப்பதற்குச் சமூகத்தின் வருஷாந்திர வருமானம் நடைமுறைச் செலவைவிடப் போதிய அளவு அதிகமாக இருக்க வேண்டும். செல்வத்தைப் பொறுத்த அளவில் சில அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் இந்த நிலையை அடைந்து விட்டன. ஆயினும், செல்வப் பெருக்கினால் ஏற்படும் தீமைகளுக்காளாகி அந்நாடுகளின் மக்கள் தங்கள் செல்வத்துக்கேற்ற சுகத்தைப் பெறுவதில்லை. மதுபானம், புகையிலை, மிதமிஞ்சிய சுகவேட்டைகளில் ஈடுபட்டுப் புதிய நோய்களுக்கு ஆளாக்கப்பட்டும், பலர் மதிமிழந்து பைத்தியக்கார ஆஸ்பத்திரிகளில் அடைபட்டும், மோட்டார், விமான விபத்துகளுக்காளாகியும் வாழ்க்கைச் சுகத்தை இழக்கின்றனர்.

வறுமையின் துன்பங்களைப் போக்கி மிதமிஞ்சிய செல்வத்தின் தீமைகளையும் விலக்கி, பகவத்கீதை கூறுவதுபோல் சாத்விக வாழ்க்கை சாத்தியமா என்பது இயந்திர சகாப்தத்தின் முக்கிய பிரச்னையாகும். அவ்வித லட்சியத்தை அடைவதற்குப் பாரதத்துக்கு நல்ல வாய்ப்புண்டு. இந்நாட்டுக்கு மிதமிஞ்சிய செல்வம் கிடைப்பது சாத்தியமில்லை. வறுமையைப் போக்குவது மிகவும் கஷ்டமான காரியமாக இருப்பினும், விடா முயற்சியில் சாதிக்கக் கூடியதே. ஆதலால் இப்பொழுது முதற்கொண்டே மக்களின் மனத்தைப் பக்குவப்படுத்திக் கொண்டு வந்தால், செல்வம், சுதந்திரம், தர்மம், அன்பு என்ற நான்கு நித்தியமான தூண்களில் நிலை பெற்று நிற்கும் ஓர் ஆதர்ச சமூகத்தை நிர்மாணம் செய்யக் கூடும்.



# பூரணத்தின் பாவை

பரிபூரணத்தை அடைய மனிதன் செய்யும் முயற்சிக்கு அளவேயில்லை. டிஸைனர்கள், மேல் இன்ஜினியர்கள் டெக்னீஷியன்களின் மூளையும் கைகளும் மூலப்பொருள்களைக் கொண்டு ஓரியண்ட் விசிறியின் மிக உயர்ந்த அறுகுணமான அம்சங்களை அமைக்கின்றன. இவர்கள் உழைப்பின் பலனை இங்கே காண்கின்றோம். பரிபூரணத்தை அடைய மனிதன் செய்யும் முடிவில்லாத முயற்சிக்கு இந்த விசிறி ஒரு திருஷ்டாந்தமாக விளங்குகிறது.

ஓரியண்ட் தொழிற்சாலையில் திட்டமிட்டு வேலைசெய்வதிலும், உங்களுக்கு மிக உயர்ந்த சேவைசெய்யும் விசிறியைத் தயாரிக்கும் திட்டத்தை வகுப்பதிலும், அதைப் பூர்த்திசெய்யும் வழிவகைகளைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியிலும் விசேஷ கவனம் செலுத்தப்படுகிறது. பெருவாரியான உற்பத்திக்கு ஏற்றபடி புதிய முறைகள் அவைகளைக் காட்டிலும் புத்தம்புதிய முறைகளால் அடிக்கடி மாற்றப்படுகின்றன. இதன் பலன், மெச்சத்தக்க சேவை, இணையற்ற பெருகு வேலைப்பாடு.

**Orient FANS**

**ஓரியண்ட் விசிறி-தோற்றத்திலும் சேவையிலும் பல வருடங்கள் முன்னதாக நிற்கிறது.**

**ஓரியண்ட் ஜெனரல் இண்டஸ்ட்ரீஸ் லிட்.,**
6 கேசர் பீபி லேன், கல்கத்தா-11

டிஸ்ட்ரிபியூட்டர்கள்:
ஹிந்துஸ்தான் டீலர்ஸ் லிட்., 4, ஸ்ட்ரிங்கர்ஸ் தெரு, சென்னை - போன்: 2658


# வாழ்க மணமக்கள்



ஆரணி சுக்க நாவும் உத்தமயானர் திரு அன்னுமலை செட்டியாரின் புதல்வி சௌ. பவுனம்பாளுக்கும், திரு வெப்பிர சாந்துக்கும் திருமணம் நடந்தது.




புதுதில்லி கங்க உதவி கலெக்டர் திரு எம். வி. நாராயண ராவுக்கும், சௌ. வசுந்தரவுக்கும் குடந்தையில் விவாகம் வெகு விமரிசையாக நடந்தேறியது.



சம்ஸ்கிருதப் பேராசிரியர் திரு ஏ. சண்முக முதலியார் அவர்களின் புதல்வி சௌ. சோமிஸாம்பாளுக்கும், திரு கண பதிக்கும் திருமணம் நடந்தது.



திருப்பதி தர்ந்து திருப்பர் திரு எ. ரங்கசாமி அய்யங்காரின் புதல்வி சௌ. சூடாமணிக்கும், திரு ராமசாமிக்கும் திருமணம் திருச்சானூரில் நடந்தது.



தலைமை ஆசிரியர் திரு எஸ். சேஷகிரி அய்யர் அவர்களின் புதல்வர் திரு எஸ். நடராஜனுக்கும் சௌ. சாரதாவுக்கும் விவாகம் மாயூரத்தில் நடந்தேறியது.




பெஸ்ட் அண்ட் கம்பெனி தலைமைக் குமாஸ்தா திரு கந்தசாமி முதலியார் புதல்வர் திரு டி. எஸ். சிவமணிக்கும், சௌ. அருந்ததிக்கும் திருமணம் நடந்தது.



பாரி கம்பெனி உதவி மானேஜர் திரு கு. ரங்கநாதன் அவர்களுக்கும், செள. ராஜேசுவரிக்கும் பொறையாரில் திரு மணம் வெகு சிறப்பாக நடந்தது.



கர்க்கி கலாமந்திரம் செயலாளர் திரு எஸ். ரங்கநாதன் அவர்களுக்கும், செள. ஜயலக்ஷ்மிக்கும் வெகு சிறப்பாகத் திரு மணம் நடந்தேறியது.




பிரபல அட்வகேட் திரு எம். பி. கோவிந்தனின் புதல்வி செள. தங்கத் துக்கும், திரு ஜயராமன் அவர்களுக் கும் விவாகம் நடைபெற்றது.




திரு எல். எஸ். ரங்காராஜன் எம். ஏ.க் கும், செள. லலிதாவுக்கும் மே மாதம் ஒன்பதாம் தேதி அனலை கிராமத்தில் விவாகம் வெகு சிறப்பாக நடந்தேறியது.



திரு ஆர். ராமசாமி அய்யங்காரின் புதல்வி செள. ஜயலக்ஷ்மிக்கும், திரு வி.வி. எஸ். சேஷாத்திரிக்கும் ஸ்ரீ வில்லிபுத்தூ ரில் திருமணம் நடைபெற்றது.



திரு சேதுராமனின் புதல்வி செள. பத்மாவதிக்கும், திரு ராமநாதன் அவர்க ளுக்கும் செகந்தராபாத்தில் வெகு சிறப் பாகத் திருமணம் நடந்தேறியது.





# கடைசிக் கருத்து

மாயாவி

(சென்றவாரத் தொடர்ச்சி)

**ப**ண்ணையார் வீட்டுக் கொல்லைப் பக்கத்தில் வண்டியை நிறுத்தச் செய்து கீழே இறங்கினான் ராமு. கைக்குட்டையினால், கண்ணீர் வழிந்திருந்த கண்களையும் முகத்தையும் துடைத்துக் கொண்டான். பிறகு, தயங்கிக் கொண்டே, "வண்டிக்காரரே! கொஞ்சம் கதவைத் தட்டிக் குரல் கொடுக்கிறீர்களா?" என்று கேட்டான். ஆமாம்; அவன் எப்படிக் கூப்பிட முடியும்? என்ன சொல்லிக் கூப்பிடுவான்?

வண்டிக்காரன் உலக சம்பிரதாயம் தெரிந்தவனாக இருக்க வேண்டும். அவன் புரிந்து கொண்டு, வீட்டுப் பின்புறக் கதவைத் தட்டி, "சாமி! சாமி!" என்று விளித்தான்.

நெடுநேரம் தட்டிய பிறகு கதவு திறந்தது. கையில் ஹரிக்கேன் விளக்குடன், "யாரது?" என்று கேட்டுக்கொண்டே வெளியே வந்தார் பண்ணையார்.

பண்ணையாரா அவர்? அந்த ஆஜானுபாகுவான சரீரமா இப்படிப் பிழிந்து எறியப்பட்ட சக்கையைப் போல் ஆகிவிட்டது?

ஒதுங்கி நின்று கொண்டிருந்த ராமுவைக் கண்டாரோ இல்லையோ, அவர் சிரத்தைத் தாழ்த்திக் கொண்டார். பிறகு குனிந்த தலையை நிமிர்த்தாமலே, "வா......வா...... வாருங்கள்......" என்று தடுமாறினார்.

ராமுவுக்கும் அவருடைய முகத்தை ஏறிட்டுப் பார்க்கும் தைரியம் வரவில்லை. வண்டிக்காரனிடம் கூறுவதுபோல், "வண்டிக்காரரே! குழந்தையை வாங்கிக் கொண்டு போக வந்திருக்கிறேன் என்று சொல்லுங்கள்" என்றான்.

"அதற்கு நீங்களே......உள்ளே வாருங்களேன்." அவருடைய தடுமாற்றம் இன்னும் அதிகமாயிற்று.

ராமு, அப்படி அங்கே நின்றவாறே குழந்தையைப் பெற்றுக்கொண்டு திரும்பிவிட வேண்டுமென்று வரவில்லை. மறுநாள் காலை ஐந்து மணிக்குத்தான் அவனுடைய ஊருக்கு அடுத்த ரயில். அதுவரை, பச்சைக் குழந்தையை எங்கே கொண்டு வைத்துக் கொண்டிருப்பதாம்? அவன் வண்டிக்காரருக்கு உரிய வாடகையைக் கொடுத்துவிட்டு, "காலையிலே நாலு மணிக்கெல்லாம் மறுபடியும் வண்டி கொண்டு வாருங்கள், வண்டிக்காரரே! நான் ஐந்து மணி ரயிலுக்குத் திரும்ப வேண்டும். இப்படிக் கொல்லைப்புறமாகவே வண்டியை நிறுத்திக்கொண்டு கதவைத் தட்டுங்கள்" என்று கூறினான்.

* * *

**வ**ண்டிக்காரன் போய் விட்டான். நிமிஷ நேரம் ராமுவும் பண்ணையாரும் அங்கே அசையாமல் நின்று கொண்டிருந்தனர். பிறகு அவர்தான் மீண்டும் தட்டுத் தடுமாறிப் பேசினார்: "உள்ளே போகலாமா?"

ராமு மௌனமாக அவரைப் பின்பற்றினான். அவன் உணர்ச்சிகளை உள்ளடக்கிக் கொள்ளத்தான் முயன்றான். ஆனால் அந்த வீட்டின்

ஒவ்வோர் இடமும் அவனுக்குச் சாருவை நினைவூட்டிக் கொண்டிருந்தன.

வீட்டின் கடைசிக் கட்டான மாட்டுக் கொட்டிலில் அவர்கள் நுழைந்தார்கள். அந்த நேரத்தில் அங்கே ஆள் நடமாட்டம் ஏற்பட்டதாலோ, என்னவோ, படுத்திருந்த மாடு ஒன்று எழுந்து "அம்மா!" என்று கத்தியது.

ராமுவின் பார்வை குரல் கேட்ட திசைக்குத் திரும்பியது. அதே மாடுதான்-லட்சுமி என்று சாரு பெயர் வைத்திருந்தாளே, அந்தப் பசு. சாருவின் பிரசவத்துக்கு ஒரு மாதத்துக்கு முன்னால் அவன் இங்கு வந்திருந்தான். அப்பொழுது இந்த லட்சுமியும் சினை. "லட்சுமிக்கும் எனக்கும் ஒரே மாசம்" என்று அன்று அவள் வேடிக்கையாகச் சொன்னது அவனுக்கு நினைவு வந்தது. அவனை அறியாமலேயே அவனுடைய கண்கள் கொட்டிலைச் சுற்றி நோக்கின. சற்றுத் தள்ளி இளம் கன்று ஒன்று கட்டிப் போடப்பட்டிருந்தது. "இந்தத் தாயும் சேயும் க்ஷேமமாக இருக்கின்றன. என் கன்றுதான் தாயில்லாக் கன்றாகிவிட்டது" என்று புலம்பியது அவனுடைய நெஞ்சம்.

அடுத்த கட்டு. அது ஒரு பக்கத்தில் ஒரு சிறு குச்சிலை உடைய தாழ்வாரம் போன்றது. அந்தக் குச்சில் பெண்களுக்கானது. முன்பு ஒருதடவை ராமு மனைவியை அழைத்துப் போக வந்திருந்தபோது, அவள் இந்தக் குச்சிலிலிருந்து எட்டிப் பார்த்தவாறு அவனைக் கண்களால் வரவேற்றாள். அந்தத்தடவை அவளுடைய முக தரிசனம் பெற அவன் மூன்று நாட்கள் காத்திருக்கவேண்டியிருந்தது.

அடுத்த கட்டு கிணறும், குளிக்கும் அறையும் கொண்டது. இங்கே வந்தபோதெல்லாம் அவனை இந்தக் கிணற்றடியில் உட்கார்த்தி வைத்து, அவள் வாளி வாளியாகத் தண்ணீரை இறைத்துக் கொட்டிக் குளிக்கச் செய்வாள். "அம்மாடி! என் ராசாவுக்கு நான் இல்லாமையால் உடம்பெல்லாம் எவ்வளவு சூடு ஏறிப் போயிருக்கிறதோ?" என்று கேலியாகச் சில சமயமும், சில சமயம், "நம் ஊர்போல் இங்கே ஆறு இல்லை, அமிழ்ந்து குளிக்க. அந்தக் குறையைப் போக்குகிறேன்" என்றே கூறிக்கொண்டும், அவன் "ஐயோ! போதுமே" என்று கத்தும்வரை தண்ணீரை இறைத்து விட்டுக் கொண்டே இருப்பாள். குளிப்பாட்டுவதில் மட்டுமென்ன? அவனுடைய சிசுருஷைகள் ஒவ்வொன்றிலுமே அவளுக்குத் தனி உற்சாகம்; தனி கருத்து.

இப்படி அந்த வீடு முழுவதும் அவளைக் கண்டான் ராமு. கண்ணில் ஊற்றாகப் பெருக்கெடுத்து ஓடிய கண்ணீரை அவனால் வழித்து மாளவில்லை.

* * *

கூடம் போன்ற ரேழியை அடையும்வரை பண்ணையாரும் அவனும் ஒரு வார்த்தை கூடப் பேசிக் கொள்ளவில்லை. கூடத்தில் ஒரு பாயில் படுத்துக் கொண்டிருந்தாள் சங்கரி அம்மாள்; சாருவின் தாயார்—ராமுவின் மாஜி மாமியார். அருகில் ஒரு தொட்டில். அதில் படுத்திருந்தவன்தான் சாரு தன் கணவனுக்கு விடுத்துச்சென்ற நினைவுச்சின்னமோ? ராமுவின் துயர் நீக்கும் அருங்கனியோ? அவன் குடும்பத்தின் புதுக் குருத்தோ? அன்போடு தாவி ஓடி மகனை அள்ளி எடுத்து முத்தமாரி பொழிந்து, 'கண்ணே! என் செல்வமே!'' என்று கதற வேண்டும் போல் இருந்தது ராமுவுக்கு.

பண்ணையார் மனைவியை எழுப்பினார். திடுக்கிட்டு எழுந்த அந்த அம்மாள், எதிரே நின்ற ராமுவைக் கண்டதும் கணநேரம் மௌனமானாள். பிறகு முகத்தை மூடிக்கொண்டு, 'சாரு' என்று கதறியவாறு அடுக்களையை நோக்கிப் பாய்ந்தோடினாள். இருக்கிறவனை வரவேற்பதற்குப் பதிலாக, அவள் இல்லாத மகளைக் கூவி அழைத்தாள். ஆமாம், அவளுக்காக அவள் மூலம் உறவானவன்தானே இவன்? இப்பொழுது அவள் இல்லை; அவனும் சங்கரி அம்மாளுக்கு இல்லை.

"உட்காருங்கள்" என்று கூறிவிட்டுப் பண்ணையார் அடுக்களைக்குச் சென்றார். அவர் மனைவியைத் தேற்ற நெடு நேரமாயிற்று. பிறகு உள்ளே அடுப்பு பற்ற விடுகின்ற ஓசை கேட்டது.

பண்ணையார் கூடத்துக்கு வந்தார். ராமு இன்னும் நின்று கொண்டுதான் இருந்தான். "உட்கார்ந்து கொள்ளுங்கள்" என்று அவர் மீண்டும் கூறினார். தொடர்ந்து, "ஒரு பதினைந்து நிமிஷம்; அதற்குள் சாப்பாடு தயாராகிவிடும்" என்றார்.

சாப்பாடா! அவள் இருந்த வீட்டில், அவள் கையால் அன்னம் புசித்த இடத்தில், அவள் இல்லாமல் அவனுக்குச் சாப்பாடு செல்லுமா? "வேண்டாம்; நான் ஸ்டேஷனில் சாப்பிட்டு விட்டேன்" என்று அவன் புளுகினான்.

"அப்படியானால் காப்பி போடச் சொல்லுகிறேன். அடி! டிகாஷனுக்குத் தண்ணீர் போடு. அவர் சாப்பிட்டு விட்டாராம். நான் இதோ பால் கறந்து கொண்டு வருகிறேன்." அவர் புறப்பட்டார்.

"இந்த அகால வேளையில் ஒன்றும் வேண்டாம்" என்றான் ராமு.

அவர் கேட்கவில்லை. அடுக்களைக்குச் சென்று பால் கறக்கச் செம்பை எடுத்துக் கொண்டு வந்து கொட்டிலை நோக்கி நடந்தார். என்ன நினைத்துக் கொண்டாரோ, கொஞ்ச தூரம் போனவர் திரும்பி வந்து, "சாமு தூங்குகிறான்; எழுப்பட்டுமா?" என்று கேட்டார்.

"சாமு! சாமு!" என்று ராமுவின் உள்ளம் புலம்பியது. அந்தப் புலம்பலிலே தனது துயரத்தில் பாதி கரைந்து விட்டதுபோல் உணர்ந்தான் அவன். சாமு! தன் அப்பாவின் பெயர். அந்தப் பெயரே அவன் தங்கள் பொருள் என்பதை நிரூபித்து விடவில்லையா?

"வேண்டாம்; தூக்கத்தில் எழுப்பினால் அழுதாலும் அழுவான்" என்றான் அவன்.

"அழுகையா?" அவர் விசனம் தோயச் சிரித்தார். "அதையெல்லாம் அவன் எங்களுக்கு ஒதுக்கி விட்டான். பசித்தால் கூட அழ மாட்டான். வேற்று முகமே கிடையாது அவனுக்கு. யாரிடமானாலும் தாவி ஓடி விடுவான். அவனால்தான் நாங்கள்..." அவர் கையிலிருந்த செம்பைக் கீழே வைத்துவிட்டு, "சாமு! கண்ணு சாமு!" என்று அவனைத் தொட்டிலிலிருந்து தூக்கினார். "இதோ பார்; யார் வந்திருக்கிறார்களென்று."

பண்ணையார் தாங்கிக் கொண்டிருந்த குழந்தையின் முகத்தை நிமிர்த்தினார்.

குழந்தை ஒரு விநாடி ராமுவை நோக்கினன். ராமுவின் கைகள் விரிந்தன. ஆனால் அதனுள்ளே பாயவில்லை அவன். பண்ணையாரின் முதுகுப் பக்கம் திரும்பி, முகத்தைத் தாத்தாவின் தோளில் புதைத்துக் கொண்டு விட்டான் சாமு.

'' தூக்கம் தெளியவில்லை. ஏய் கண்ணு! இங்கே பாருடா. உன்......உன்...'' அவர் மறுபடியும் குழந்தையின் முகத்தைத் திருப்பினர். ஆனல் அவன் சிணுங்கியவாறு முகத்தைத் தோளோடு ஒட்டிக்கொண்டு கண்களையும் மூடிக் கொண்டான்.

'' பால் கறந்துண்டு வரேளா ?'' என்று உள்ளேயிருந்து நினைவூட்டினுள் சங்கரி அம்மாள்.

'' ம்...ஆகட்டும்...'' அவர் குழந்தையைப் பலவந்தமாகத் தூக்கி ராமுவின் விரித்த கரங்களுக்குள்ளே வைத்தார்.

'வீல்' என்று ஒரு கத்தல். சாமு கையையும் காலையும் உதைத்துக் கொண்டு அழுதான். ஆனல் அவர் அதைப் பொருட்படுத்தவில்லை. கீழே வைத்திருந்த செம்பை எடுத்துக் கொண்டு கொட்டிலை நோக்கி வேகமாகச் சென்று விட்டார்.

குழந்தையை அணைத்திருந்த கரங்களிலிருந்து ஒரு மின்சார உணர்ச்சி கிளம்பி ராமுவின் உடலெங்கும் பரவியது. அந்த உணர்ச்சி! ஆம்! அவனுக்கு நன்றாக நினைவிருக்கிறது. அன்று, முதல் முதலாகச் சாருவை இவ்வாறு தன் கரங்களால் அணைத்துக் கொண்டபோது பரவிய உணர்ச்சியைப் போன்றதல்லவா ?

அவன் நயனங்கள் தன் உதிரத்தின் உருவை ஊடுருவி நோக்கின. அவளை அப்படியே உரித்து வைத்தது போன்ற சாயல். அதே வட்ட முகம். அதே அகன்ற கண்கள். அதே நீண்ட மூக்கு. தலைக்கு மாத்திரம் தன்னைக் கொண்டிருந்தான் போலும். தலை சற்றுப் பருமனுக இருந்தது. கேசமும் அப்படியே; தனக்கு இருப்பதைப்போல் கருள் கருளாக நடு நெற்றிவரை படர்ந்திருந்தது.

ராமுவின் கைகள் மகனை இப்படி அணைத்துக் கொண்டே இருக்கத் துடித்தன. ஆனல் அவன் அதற்கு ஒரு விநாடிக்கு அதிகமாக இடமளிக்கவில்லை. துள்ளி விழுந்து தந்தையின் பிடியிலிருந்து தப்பிவிட முயன்ருன். அவனுடைய பலமான அழுகையோ அண்டத்தையே கிடுகிடுக்க வைத்தது.

ராமு குழந்தையைச் சமாதானப்படுத்தத் தனக்குத் தெரிந்த வித்தையெல்லாம் செய்து பார்த்தான். ம்ஹூம். குழந்தையின் அழுகையும் நிற்கவில்லை; அவன் வில்லாக வளைந்து நிமிறுவதும் நிற்கவில்லை.



''அழாதேடா கண்ணு, அழாதே'' என்று அடுக்களையிலிருந்து சங்கரி அம்மாள் குரல் கொடுத்தாள்.

அவளுடைய குரலைக் கேட்டதும் சாமு இன்னும் பெரிதாக வீரிட்டான். ''தாத்தி தாத்தி'' என்று தன் குஞ்சுக் கையை அடுக்களையை நோக்கி நீட்டி அழுதான்.

குழந்தை துள்ளிய துள்ளலில் எங்கே கீழே விழுந்து விடுவானே என்று பயமேற்பட்டது ராமுவுக்கு. ஆகையால் அவனை மெல்லத் தரையில் விட்டு விட்டான். சாமு கைகளையும் கால்களையும் ஊன்றியவாறு தவழ்நடை போட்டு ஒரே பாய்ச்சலாக அடுக்களைக்கு ஓடி விட்டான். அடுக்களையில் நுழைந்த விநாடியிலேயே அவனுடைய அழுகையும் மாயமாய் மறைந்து விட்டது!

இப்பொழுது ராமுவின் உள்ளந்தான் அழுதது - ''இப்படி இருக்கும் குழந்தையை எப்படி ஊர் வரை கொண்டு சேர்க்கப் போகிறேனே?'' என்று.

* * *

**ப**ண்ணையார் பாலைக் கறந்து அடுக்களையில் கொடுத்துவிட்டு வந்தார். வரும்போதே, ''அவனுக்குத் தூக்கம் தெளியவில்லை; அதனல் தான் அழுதிருக்கிறன்'' என்று ராமுவிடம் சொன்னர்.

''தூங்கிவிட்டானு?''

''ஆமாம்.''

அவர் துண்டை உதறிப் போட்டுக்கொண்டு ராமுவுக்கு அருகில் தரையில் வந்து உட்கார்ந்து கொண்டார்.

''கொள்ளை விளையாட்டு விளையாடுகிறன். அவன் விளையாட்டு ஒவ்வொன்றும் அவளுடைய குழந்தைப் பிராயத்தை எங்களுக்கு நினைவூட்டுகின்றன. ஈடு செய்ய முடியாத எங்கள் குறையை அவன் ஈடு செய்து வருகிறன். இன்னும் சில காலம் போனல் எங்கள் துக்கம் மாறி விடும். ஆனல் அதற்கு நாங்கள் கொடுத்து வைக்கவில்லையே?'' அவர் விசும்பினர்.

ராமுவின் கை விரல்கள் தரையில் கோலமிட்டுக் கொண்டிருந்தன; அவனுக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை.

''கட்டாயம் அவனை அழைத்துக் கொண்டு தான் போக வேண்டுமா ?'' என்று அவர் ராமுவைப் பரிதாபத்துடன் கேட்டார்.

ராமு குனிந்திருந்த தலையை நிமிர்த்தாமல், ''ஆமாம்'' என்றன்.

'' செய்யுங்கள். எங்கள் தலைவிதி நன்றாக இருந்திருந்தால் அவளை இழந்திருப்போமா ?

இந்த வீட்டிலே பிரகாசமான பெட்ரோமாக்ஸ் விளக்கைப் போல் அவன் எரிந்து வந்தான். நாங்கள் பண்ணிய பாவம் அந்த ஒளி விளக்கு அணைந்தது. இவன்தான் கைவிளக்காக எங்களுக்குச் சிறிது வெளிச்சம் காட்டி வந்தான். இப்பொழுது இவனும் போய்விடப் போகிறான். நாளை முதல் இந்த வீட்டில் இருள் சூழ்ந்து விடும்; சூழ்ந்த அந்தகாரம் கப்பிக் கொண்டுவிடும். அதில் நாங்கள் தடுமாற வேண்டும். நாங்கள் அவனை இழந்துவிட்டாலும் இன்றுவரை இழந்ததாகவே தோன்றாதபடி செய்து வந்தான் சாமு. ஆகவே நாளை முதல்தான் நாங்கள் சாருவை இழந்ததற்காகத் துக்கப்பட வேண்டியவர்கள் ஆவோம்.''

அவருடைய கண்களில் நீர் பொங்கியது. மேலே போட்டிருந்த துண்டை எடுத்துத் துடைத்துக் கொண்டார்.

''எங்கள் நிலையும் அதுவேதான். பத்து மாதங்கள் பல்லைக் கடித்துக் கொண்டு இருந்து விட்டோம். இனிமேல் முடியாது. அப்பாவும் அம்மாவும் உருகி விட்டார்கள். அவர்களுடைய துக்கத்தை ஆற்றாவிட்டால் விரைவில் சருகாகி விடுவார்கள்'' என்றான் ராமு.

''எங்களுக்குத் தெரியாதா? எங்களைப் போலவே அவர்களுக்கும் அவன் மகனாகத்தான் விளங்கினான் என்பது. ஆனாலும் இப்பொழுது எங்களுக்கு இவனை விட்டால் வேறு யார் இருக்கிறார்கள் ஆறுதல் பெறுவதற்கு?''

ராமுவின் நெஞ்சில் சுருக்கென்று குத்தியது இந்த வார்த்தை. ஆம்; இவர்களுக்கு இவனை விட்டால் வேறு யார் இருக்கிறார்கள்?

''வருத்தப்படாதீர்கள். ஐந்தாறு மாசங்கள் இவனை அங்கே வைத்துக் கொண்டிருந்து அப்பா—அம்மாவின் மனசு சிறிது சமாதானமடைந்ததும் இங்கே திருப்பிக் கொண்டு விட்டு விடுகிறேன்.''

அவன் போக்குக் காட்ட இவ்வாறு சொல்லவில்லை. முழு மனத்தோடுதான் பேசினான். சற்றுமுன் இங்கே வரும்வரை தங்களது துயரந்தான் மகத்தானது என்று எண்ணியிருந்தான் அவன். ஆனால் இங்கே வந்து இவர்களுடைய பெற்ற வயிறு பற்றி எரிவதைப் பார்த்தபோது தங்களது துயரம் துச்சமானது என்று பட்டது அவனுக்கு. இங்கே வந்தபோது அவனுடைய மனம் உறுதிக் கொண்டிருந்தது. இப்பொழுது அதில் சலனம் ஏற்பட்டு விட்டது. ''எங்களுக்கு இவனை விட்டால் யார் இருக்கிறார்கள்? யார் இருக்கிறார்கள்?'' என்ற பண்ணையாரின் சொற்கள் அவனுடைய உறுதிக்குள்ளே புகுந்து அதைக் குடைந்தன.

''ஐந்தாறு மாசம்! ஐந்தாறு மணி நேரங்கூடச் சாமு இல்லாமல் இந்த இருளடைந்த வீட்டில் எங்களால் இருக்க முடியாதே!'' என்று அரற்றினார் பண்ணையார்.

ராமு பதில் பேசவில்லை.

* * *

சங்கரி அம்மாள் கடக் கடக் காப்பியைக் கொண்டு வந்து வைத்தாள்.

''சாப்பிடுங்கள்'' என்றார் பண்ணையார்.

ராமு காப்பியைப் பருகினான். அது அவனுக்கு வேம்பாகக் கசந்தது.

''சரி; அப்படியானாலும் காலையில் சாமுவை அழைத்துக்கொண்டுதான் போகப் போகிறீர்களா?'' என்று கேட்டார் பண்ணையார்.

''ஆமாம்; மனசைத் தேற்றிக்கொண்டு சந்தோஷத்தோடு அவனை அனுப்புங்கள்.'' இதைக் கூறுவதற்கு ராமு தன் மனசைக் கல்லாக்கிக் கொள்ள வேண்டியிருந்தது.

''அடியே!'' பண்ணையார் அடுக்களையை நோக்கிக் குரல் கொடுத்தார். ''குழந்தையின் சாமான்களையெல்லாம் கையோடு ஒரு பெட்டியில் எடுத்து வை. அவர்கள் ஐந்து மணி வண்டிக்குப் போக வேண்டும்.''

உள்ளேயிருந்து சங்கரி அம்மாளின் விம்மல் சத்தம் கேட்டது.

* * *

கூடத்துக்கு அடுத்த முன் கட்டில் ராமு படுத்துக் கொண்டிருந்தான். அவனுடைய கண்கள் மூடியிருந்தன. ஆனால் உணர்வு விழித்துக் கொண்டிருந்தது. உள்ளே பண்ணையாரும் சங்கரி அம்மாளும் என்னென்னவோ பேசிக் கொண்டு குழந்தையின் சாமான்களைப் பெட்டியில் எடுத்து வைக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தனர். அரைமணி நேரம் சென்ற பிறகு, பண்ணையார் கையில் விளக்குடன் ராமு படுத்திருந்த நடுக்கட்டுக்கு வந்தார்.

அவர் அங்கு வந்ததும் ராமு எழுந்து உட்கார்ந்தான்.

''விழித்துக்கொண்டுதான் இருக்கிறீர்களா? நல்லதாயிற்று'' என்று கூறிவிட்டு அவர் அங்கே ஓர் ஓரமாகப் போடப்பட்டிருந்த இரும்புப் பெட்டியண்டை சென்று அதைத் திறந்தார். உள்ளேயிருந்து ஏழெட்டு நகைப் பெட்டிகளையும், குழந்தைக்காகப் பிரத்தியேகமாக வெள்ளியில் செய்திருந்த விளையாட்டுச் சாமான்களையும் எடுத்து வெளியே வைத்துவிட்டு, ''ஒரு நிமிஷம் இங்கே வருகிறீர்களா?'' என்றார்.

ராமு எழுந்து அவர் அருகில்போய்நின்றான்.

''உட்காருங்கள்'' என்று கூறிய அவர், அவன் அமர்ந்ததும், ''காலையில் புறப்படுகிற அவசரத்தில் இந்த வேலையும் வேண்டாமென்றுதான் இவைகளை இப்பொழுதே எடுத்து வைத்துவிட வந்தேன். இந்தாருங்கள்; இவையெல்லாம் சாமுவுக்காகச் செய்துள்ள நகைகள்; விளையாட்டுச் சாமான்கள். ஒரு கண் பார்த்து விடுங்கள்; பிறகு அவனுடைய துணிமணிகள் வைத்திருக்கும் பெட்டியிலே வைத்துவிடுகிறேன்'' என்றார்.

கொள்ளை கொள்ளையாக எவ்வளவு நகைகள் ஓர் ஆண் குழந்தைக்கு? ஆமாம் பாவம், அவர்களுக்கு இனி அவனை விட்டால் யார்?

இப்படி நினைத்துக் கொண்டாலும் ராமுவின் நெஞ்சில், 'இவற்றை நாம் பெற்றுப் போவது சரியா?' என்று எண்ணினான். அடுத்த கணமே ''இவையெல்லாம் எதற்கு? நாங்களே அவனுக்கு வேண்டியதைச் செய்து போட்டுக் கொள்ளுகிறோம்'' என்றான்.

பண்ணையாரின் முகம் கன்றிப் போயிற்று. அவர் சொன்னார்: ''வித்தியாசமாக நினைக்கிறீர்கள். இவைகளும் உங்கள் பொருளால் செய்தவைதான். சாருவின் நகைகளை அழித்துச் செய்தவை இவை. மேலும் இவைகளை அவனுக்குப் பூட்டுவதற்கு அல்லாமல், இந்த

# கால்கேட் குளோரோபில்* ஈறுகளை பலப்படுத்துகிறது

## வைத்திய சோதனை நிரூபிக்கிறது!



**ஈறுகளைப் பலப்படுத்து கிறது!**

கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை வழக்கமாகத் தேய்ப்பதால், குளோரோபில் மூலம் அது ஈறுகளைப்பலப்படுத்துகிறது.

**வாய்நாற்றத்தை அதி தீவிரமாய் ஒழிக்கிறது!**

வேறு சாதாரண பற்பசையை விட மிக மிகத்தீவிரமாக வாய்நாற்றத்தை கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் ஒழிக்கிறது என்பது ருசுவான உண்மை.

**சொத்தையாக்கும் கிருமிகளை ஒழிக்கிறது!**

கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை ஒவ்வொரு முறையும் சாப்பிட்டவுடன் தேய்ப்பதால் பல் எனுமலை அரிக்கும் நாச அமிலங்களும், அவற்றை விளைவிக்கும் கிருமிகளும் குறைகின்றன!

**வேறு எந்த பற் பசையிலும் இதை விட அதிக வீரிய குளோரோபில் இல்லை!**




* நீரில் கரையும் குளோரோபிலின்ஸ் சேர்ந்தது.

**இதோ!** பெரிய எக்கானமி அளவில் கிடைக்கிறது

இரும்புப் பெட்டியில் பூட்டி வைப்பதற்கா நாங்கள் ஆசையோடு செய்தோம்?''

ராமுவுக்கு அவற்றை வாங்கிக் கொள்ள மனமேயில்லை. இருந்தாலும் அவருடைய மனம் நோகக் கூடாதென்று, ''சரி, எடுத்து வையுங்கள்'' என்றான்.

அவைகளை ஒரு பக்கமாக ஒதுக்கி வைத்து விட்டுப் பண்ணையார் இரும்புப் பெட்டியில் ரகசிய அறையைத் திறந்து, அதனுள்ளிருந்து நீண்ட காகித உறை ஒன்றை எடுத்தார்.

''இதையும் வாங்கிக் கொள்ளுங்கள்.''

''என்ன இது?''

''ஒன்றுமில்லை. என் சொத்துக்களின் விவரத்தை இதில் எழுதி வைத்திருக்கிறேன்.''

''என்ன?''

''ஆமாம்; அவள் மறைந்த உடனே இதைத் தயாரித்து வைத்துவிட்டேன். இப்பொழுது இல்லாவிட்டாலும் விரைவில் இது உங்களுக்குத் தேவைப்படும்.''

''எதற்கு?''

''நிலபுலன்களின் குத்தகையைப் பெற்றுக் கொள்ளவும், கொடுக்கல் - வாங்கல்களை ஒழுங்கு செய்யவும்.''

''விளங்கவில்லையே!''

''நாங்கள் போய்விடப் போகிறோம்.''

ராமு திடுக்கிட்டான். ''எங்கே?''

''சாந்திபெறக் காசிக்கு. இன்னும் நாலைந்து வருஷங்களுக்குப் பிறகு இவனை உங்களிடம் ஒப்படைத்து விட்டுக் குறை வாழ்நாளை விசுவநாதன் சன்னிதியில் ஓட்டிவிட்டு, உடலைக் கங்கையில் கரைக்கத் திட்டமிட்டிருந்தோம். அந்தப் பாக்கியத்தை நீங்கள் முன்னதாகவே அளித்து விட்டீர்கள்.''

''என்ன, நீங்கள் இங்கிருந்து போய்விடப் போகிறீர்களா?''

''நாளைக்கே உங்களுக்கு ஐந்து மணிக்கு ரயில். எங்களுக்குப் பத்து மணிக்கு. அவன் இல்லாமல் ஒரு நாள்கூட இந்தப் பாழடைந்த வீட்டில் இருக்க முடியுமா?''

''வேண்டாம்; அப்படியெல்லாம் மனமுடைந்து பேசாதீர்கள். அருகில் இருந்தால் அவனை அடிக்கடி வந்து பார்த்துப் போகவாவது செய்யலாம்.''

''பார்த்துப் போகவா? அது முடிந்திருந்தால் சாமுவை அன்றே உங்களிடம் ஒப்படைத்திருப்போமே. அங்கே வந்தால் நாங்கள் சாமுவைக் காணமாட்டோம்; சாருவைத்தான் காண்போம். சாந்தி பெறமாட்டோம்; நாங்கள் சங்கடம் அடைவோம்.''

''அதற்காக...?''

''வேறு வழியில்லை. குருத்து மரத்தில் இருக்குமட்டுந்தான் மரத்துக்கு உயிர். அதை வெட்டி எடுத்துச் சென்று விட்டால் மரம் பட்டுவிடும். எங்களின் ஒரே குருத்தாக விளங்கினாள் சாரு. அவள் பட்டுவிட்டாள். ஆனால் அவள் பட்ட இடத்தில் இவன் உடனே முளைத்து எங்களைப் படாமலிருக்கச் செய்தான். இப்பொழுது இந்தக் கடைசிக் குருத்தும் எங்களிடமிருந்து வெட்டப்பட்டதென்றால் நாங்கள் பட்ட மரந்தானே?''

''என் நிலையும் அதுதானே?''

''இல்லை; தவறு. உங்கள் பெற்றோரின் கடைசிக் குருத்து படவில்லை. அது வாடியிருக்கிறது; அவ்வளவுதான். நாளைக்கே வேறொரு திருமணத்தின் மூலம் நீர் பாய்ச்சப்பட்டால் நீங்கள் துளிர்த்து விடுவீர்கள். உங்கள் குடும்பம் தழைத்து விடும். ஆனால் பாவிகளாகிய நாங்கள்தான்...''

''போதும்; நிறுத்துங்கள்'' என்று உரக்கக் கத்தி விட்டான் ராமு.

''இங்கே வாருங்களேன்'' என்று கூடத்திலிருந்து அவரை அழைத்தாள் சங்கரி அம்மாள். ''அவருக்கு மனமில்லையென்றால் கட்டாயப்படுத்தி என்ன பலன்?''

''ஆமாம், அஞ்ஞானம்! குழந்தையைப் பிரியப் போகிறோமே என்ற வருத்தத்தில் என்ன என்னவோ பேசிவிட்டேன், மன்னித்துக் கொள்ளுங்கள். இவை எல்லாவற்றையும் பெட்டியிலே வைத்து விடுகிறேன்'' என்று கூறி நகைப்பெட்டி முதலியவற்றுடன் கூடத்துக்குச் சென்றார் பண்ணையார்.

ராமு மண்ணுந்தையாக உட்கார்ந்திருந்தான். அவருடைய கடைசி வார்த்தைகள் அவனுடைய பொட்டில் தட்டி அவனைத் துடிக்கச் செய்து விட்டன.

''உங்கள் கடைசிக் குருத்து வாடித்தான் இருக்கிறது......மீண்டும் துளிர்க்கும்...தழைக்கும். ஆனால் எங்கள் குருத்துத்தான்......'' என்ற அந்த வார்த்தைகள் அன்றிரவு முழுவதும் அவனைக் கண் மூடவே விடவில்லை.

* * *

சரியாகக் காலை நான்கு மணிக்கு வண்டிக்காரன் வந்து விட்டான். பண்ணையார் எழுந்து கதவைத் திறந்தார். பின்னர் ராமுவை எழுப்ப வந்தார். அவன் அதற்குள் எழுந்து புறப்படத் தயாராக இருந்தான்.

''இருங்கள்; ஒரு நிமிஷத்தில் குழந்தையை எழுப்பி உடை மாற்றி எடுத்துக் கொண்டு வருகிறேன்'' என்று திரும்பினார் பண்ணையார்.

''வேண்டாம்; அவனை எழுப்ப வேண்டாம்'' என்றான் ராமு.

''ஆமாம்; அதுவும் சரிதான். எழுப்பினால் நேற்றுமாதிரி அழத் தொடங்கினாலும் தொடங்கி விடுவான். புறப்படும்போது அபசகுனம் மாதிரி நாங்கள் அழுவது போதாதென்று அவனும்......''

''நீங்களும் அழக்கூடாது.''

''கூடாதுதான். ஆனால் உடலோடு ஒட்டியிருக்கும் அங்கத்தை வெட்டி எடுக்கும்போது எவ்வளவுதான் பல்லைக் கடித்துக் கொண்டிருந்தாலும், வேதனை அலறலாக வெளிப்பட்டு விடுகிறதே!''

''நீங்கள் அலறவும் வேண்டாம். உங்கள் அங்கத்தை நான் வெட்டப் போவதும் இல்லை. சாமு உங்களிடமே வளரட்டும்.''

''உண்மையாகவா மாப்பிள்ளை?'' அவரை அறியாமலே, அப்பொழுது ஏற்பட்ட களிப்பில், 'மாப்பிள்ளை' என்று வார்த்தை வெளி வந்து விட்டது.

''ஆமாம்; இல்லாவிட்டால் நான் என் சாருவுக்குத் துரோகம் இழைத்தவன் ஆவேன்'' என்று கூறிக்கொண்டே வண்டியை நோக்கி நடந்தான் ராமு.

இப்பொழுது அவன் உள்ளத்திலே துக்கம் துள்ளவில்லை; அமைதி நிறைந்திருந்தது.




ாக்ஸோ லபரட்டரீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், பம்பாய் . கல்கத்தா . மதருஸ் . புது டில்லி




## 10. கடல் சிலந்தி

திமிங்கிலத்துக்குள் அமர்ந்திருந்த வீராங்கன், 'ஓகோ...கோ' என்ற பயங்கர ஓசையைக் கேட்டுத் திடுக்கிட்டான். என்ன நடக்கிறது, என்ன நடந்தது என்பதை ஒருவாறு அவன் ஊகித்துக் கொண்டான்.

பவளக் குகை பூதாகாரமான திமிங் கிலத்தின் தாக்குதலால் ஒரு பகுதி அடி யோடு சிதைந்து விட்டது. அதற்குள் இருந்த கடல் சிலந்திக்கு அடக்க முடியாத கோபம் கொந்தளித்துக் கொண்டு வந்து விட்டது. எப்பேர்ப்பட்ட திமிங்கிலமும் அந்தக் குகை அருகில் வருவதில்லை. அப் படித் தப்பித் தவறி வந்து விட்டால்கூட வந்த அடையாளம் தெரியாமல் திரும்பிப் போய் விடும். கடல் சிலந்தியிடம் திமிங் கிலங்களுக்குக்கூட அவ்வளவு பயம். அப்படி யென்றல் மற்றச் சின்னஞ்சிறு கடல் பிரா ணிகளைப் பற்றிக் கூற வேண்டியதில்லை. ஆனல் இன்று ஒரு திமிங்கிலம் அதை யெல்லாம் மறந்தோ மறக்காமலோ கடல் சிலந்திக்குத் தீங்கிழைத்து விட்டது. குகையையே சிதைத்து விட்டது.

கடல் சிலந்தி திமிங்கிலத்தோடு உக்கிர மாகப் போரிட்டது. வீராங்கன் திமிங்கிலத் தின் வாயில் இருந்த இடுக்கு வழியாகக் கடல் சிலந்தியைக் கவனித்தான். அப்பப்பா! என்ன கொடூரம்!


பார்ப்பதற்குத் தரையிலிருக்கும் சிலந்தி யைப் போலவே இருந்தது. ஆனல் பரும னில் பிரும்மாண்டமாக, கிட்டத்தட்ட திமிங் கிலத்தின் அளவினதாகவே இருந்தது. அதற்கு ஆயிரக்கணக்கான கால்கள் காணப்பட்டன. ஒவ்வொரு காலின் முனையி லும் ஒரு துவாரம் இருந்தது. அதன் வழி யாக விஷம் கலந்த திரவத்தைக் கக்கிக் கொண் டிருந்தது. மிகப் பெரிய கண் களில் இருந்து நொடிக்கு ஒரு தடவை மின்னல் போல் வெளிச்சம் தோன்றிக் கண்ணைப் பறித்தது.

இத்தனை பலத்தோடு தாக்கிய கடல் சிலந்தியைத் திமிங்கிலத்தால் ஒன்றும் செய்ய முடியவில்லை. தன்னைக் காப்பாற் றிக் கொள்ளவே அது வகையறியாது விழித்தது. அப்படி இருந்தும் அந்த இடத்தை விட்டுத் தப்பி ஓட நினைக்கவில்லை. கோழையைப் போல் ஓடிச் சென்று உயிர் வாழ்வதைவிட வீரத்தோடு சண்டையிட்டுச் சாவது எவ்வளவோ மேல் அல்லவா!

ஒரு சமயம் கடல் சிலந்தி கொடுத்த செம்மையான அடியைத் தன் கழுத்தில் வாங்கிக் கொண்டு வலி பொறுக்காது ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்துக்குத் திரும்பியது திமிங்கிலம். அந்தச் சந்தர்ப் பத்தைத்தான் வீராங்கன் வெகு நேரம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

திமிங்கிலத்தின் வாய் திறந்துதான் இருந்தது. மெதுவாக வாயிலிருந்து வெளிப்பட்டுப் பாசிப் புதரிலும் செடியிலும் கொடியிலும் பதுங்கிப் பதுங்கிப் பவளக் குகைக்குள் புகுந்தான்.

அடடா! அந்தப் பவளக் குகைதான் என்ன அழகு! குகை முழுவதும் பவளத் தாலேயே கட்டப்பட்டிருந்தது. தரை, கூரை, சுவர், தூண், படி எல்லாமே பவள மயமாகக் காட்சி அளித்தன. திமிங்கிலத் தால் சிதையுண்ட ஒரு பகுதியில் மட்டும் தான் கடல் நீர் புகுந்திருந்தது. மற்ற இடங்களி லெல்லாம் நீர் இல்லை.




வீராங்கன் குகையைய வேடிக்கை பார்த்துக் கொண்டே நடந்து கொண்டிருந்தான். எதிரே சிறிது தூரத்தில் கண்ணுக்கினிய வெளிச்சம் ஒன்று தெரிந்தது. சுரங்கம் போன்ற இடத்திலிருந்து அவ்வெளிச்சம் வந்து கொண்டிருந்தது. அங்கு செல்லச் சில படிக்கட்டுகள் இருந்தன. அவை யாவும் பெரிய பெரிய பவளங்களாலேயே கட்டப்பட்டிருந்தன. அவற்றை ஒவ்வொன்றாகத் தாண்டி அந்த வெளிச்சம் வந்து கொண்டிருந்த இடத்தை அடைந்தான். அங்கே அவன் கண்ட காட்சி அவன் கண்களை இமைக்காமல் நிற்கச் செய்தது.

அங்கே ஒரு உயரமான பீடம் இருந்தது. அந்தப் பீடம் பவளத்தாலேயே கட்டப்பட்டிருந்தது. அந்தப் பீடத்தின் மேல் அகலமான செக்கச் செவேல் என்ற ஒரு பெரிய கிளிஞ்சல் இருந்தது. அந்தக் கிளிஞ்சலில் கண்ணைக் கூசும்படியான ஒளி படைத்த ஒரு பெரிய பவளம் இருந்தது. அதுதான் குமரிப் பவளம். அதைச் சிறிது நேரம் பார்த்துவிட்டுத் தன் கையினால் பக்தியோடு எடுத்தான். அப்பொழுது—

"அஹ்ஹஹ்ஹா..." என்ற கோரமான ஒரு சிரிப்பு கிளம்பி அவனை நிலைகுலைய வைத்தது. திடுக்கிட்டுத் திரும்பினான்.

அப்படி விகாரமாகச் சிரித்துக் கொண்டு வந்தது. வேறு யாருமல்ல. கடல் சிலந்திதான். வீராங்கனுக்குச் சப்த நாடியும் ஒடுங்கி விட்டது. இது வரையில் அவன் எத்தனையோ அபாயங்களில் சிக்கி உயிர் தப்பி இருக்கிறான். ஆனால் இப்பொழுது வந்திருக்கும் ஆபத்திலிருந்து தப்ப முடியும் என்ற நம்பிக்கை அவனுக்கு இல்லை. ஏனெனில் தப்பிஓடுவதற்கும் வழி இல்லை. போராடி வெற்றி பெறுவதற்கும் சக்தி இல்லை.

விநாடிக்கு விநாடி அவனுடைய உயிர் அவனை விட்டுப் பிரிந்து கொண்டிருப்பதாகத் தோன்றியது. கடல் சிலந்திக்கும் அவனுக்கும் இருந்த தூரம் குறைந்து, கெஜம் அடியாகவும் அடி அங்குலமாகவும் ஆகிவிட்டன. இதோ, அது அவனை ஒரே பிடியாகப் பிடிக்கப் போகிறது. அடுத்த நொடி அவன் உயிர் போகப் போகிறது. வீராங்கன் தன் கண்கள் இரண்டையும் மூடிக் கொண்டான். அந்த மகா கோரமான உருவத்தைப் பார்ப்பதற்கு அவனுக்குச் சகிக்கவில்லை.

அவனுடைய கண்கள் வெகு நேரம் வரையில் மூடியபடியே இருந்தன. அவனைக் கடல் சிலந்தி தாக்கியதாகவே தெரியவில்லை. அவனுக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது. மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தான். எதிரே கடல் சிலந்தியைக் காணவில்லை.

திடீரென்று அவனுக்கு ஒரு சந்தேகம் முளைத்தது. கடல் சிலந்தியால் கொல்லப்பட்டுப் பரலோகத்துக்குத் தான் வந்து விட்டோமோ என்பதுதான் அது. நல்ல வேளையாக அப்படி ஒன்றும் நேரவில்லை. ஆனால்

அதற்குப் பதிலாக வேறொன்று நேர்ந்திருந்தது.

வீராங்கனைச் சுற்றி நாலா புறத்திலும் பவளச் சுவர்கள் எழும்பி நின்றன. மேல் பாகத்திலும் மூடி போல் அடைக்கப்பட்டிருந்தது. சுருங்கச் சொல்லின் அவனைச் சமாதி வைத்தாகி விட்டது எனலாம்.

அதே சமயத்தில் அவன் இருந்த சமாதிக்கு வெளிப் புறம் வெற்றிச் சிரிப்பு சிரித்துக் கொண்டு நின்றிருந்தது கடல் சிலந்தி.


அந்தச் சிரிப்பு 'எவ்வளவு சக்தி வாய்ந்த பவளக் கொடியைக் கட்டிக் கொண்டு வந்தாலும், உன்னைத் தொடத்தான் முடியாதே தவிர, உயிரோடேயே என்றால் சமாதி வைக்க முடியும்' என்று கூறுவது போல் இருந்தது. அது உண்மைதான். இராட்சத நண்டுகள் கொடுத்த பவளக் கொடிக்கு அவ்வளவு சக்தி உண்டு. அதைக் கட்டிக் கொண்டு வருபவனைக் கடல் சிலந்தியால் ஒன்றுமே செய்ய முடியாது. இதை வீராங்கன் அறிந்தால் அந்தப் பெரிய நண்டுகளைப் பாராட்டி இருப்பான்.

மூன்று நாட்கள் ஓடி மறைந்துவிட்டன. இதற்குள் அவனுக்குச் சமாதியை விட்டு வெளியேற ஒரு வழியும் புலப்படவில்லை. திடு திடுவென்று வானமே இடிந்து விழுவதைப் போன்ற ஓசை கேட்டது. வீராங்கன் இருந்த சமாதியும் ஆட்டங் கண்டது. அடுத்த நொடி அதுவும் இடிந்து மூலைக்கு மூலை சிதறியது.

இப்பொழுது வீராங்கன் கூண்டிலிருந்து விடுபட்ட பறவையைப் போல் இருந்தான். அவன் பார்வை நாலா திசைகளிலும் பாய்ந்தது. எதிரே தெரிந்த ஒரு காட்சி அவனைத் திகைக்க வைத்தது. கடலில் உள்ள அத்தனை திமிங்கிலங்களும் ஒன்று கூடி விட்டன.

அத்தனை திமிங்கிலங்களுக்கு நடுவில் ஏதோ ஒரு பெரிய உருவம் அகப்பட்டுக் கொண்டு சொல்ல முடியாத அவதிப்பட்டுக் கொண்டிருந்தது. அது கடல் சிலந்திதான்.

வீராங்கனுக்கு ஒருவாறாக விஷயம் விளங்கியது. ஆம்! மூன்று தினங்களுக்கு முன் கடல் சிலந்தியால் தாக்கப்பட்ட திமிங்கிலம் தன் சகாக்களை அழைத்துக் கொண்டு வந்து பவளக் குகையை நிர்மூலமாக்கிக் கடல் சிலந்தியைப் பழிக்குப் பழி வாங்கிக் கொண்டிருந்தது. (தொடரும்)



அத்தியாயம் 19

## இதயமற்ற அரக்கன்!



'மனிதன் எப்படி இந்த உலகில் முதன் முதலாகத் தோன்றி ஞன்?' என்ற கேள்விக்குப் பல ரும் பலவிதமாகப் பதிலைச் சொல்வார்கள்.

கோடிக் கணக்கான வருஷங்க ளுக்கு முன் னல் இந்த உலகத்தில் உயிர் என் பதே கிடை யாது. நீரும் நிலமும் காற்றும் மட்டுமே இருந்தன. இவற்றின் மீது சூரியக் கிரணங்கள் ஒளி வீசி விளையாடிய போது ஒரு விநோதமான ரசாயனச் சேர்க்கை ஏற்பட்டது. அதன் காரணமாக கண்களுக்குத் தென்படாத சின்னஞ் சிறிய உயிர் ஒன்று உண்டாயிற்று.

இப்போது இந்த உலகத்தில் இருக்கும் எல்லா ஜீவராசிகளும் — தாவரங்களும் மிருகங்களும், நீர் வாழ்வன, பரப்பன வும்—இயற்கையின் விளையாட்டில் முத லில் தோன்றிய அந்த நுண்ணிய உயி ரினத்தின் சந்ததிகள்தாம்! அதுதான் கால வெள்ளத்தில், பல்லாயிரக்கணக் கான வருஷங்களில் வளர்ந்து வளர்ந்து உருமாறி மாறி இப்போது மனிதனாக வும் இன்னும் பல்வேறுபட்ட உயிரினங் களாகவும் தோற்றமளிக்கின்றன. இது விஞ்ஞானிகளின் கூற்று.

இறைவன் இருள் சூழ்ந்த உலகத்தில் ஒளியை உண்டாக்கினன். மரங்களை உண்டாக்கினன். மிருகங்களை உண்டாக் கினன். பின்னர் உலகத்தில் வாழத் தன் னைப் போலவே உருவம் கொண்ட மனிதனையும் படைத்தான். அவனுக்கு ஜோடியாகப் பெண்ணையும் உருவாக்கி னன் என்று கிறிஸ்துவ மத நூல் விவ ரித்துச் சொல்கிறது.

இன்னும் பல மதங்களும் பலவித மாகச் சொல்கின்றன. இவையெல்லாம் எப்படி யிருந்தபோதிலும் தன் எதிரே நின்று கொண்டு தனது கன்னங் கரிய விழிகளால் விழுங்கி விடுவது போலப் பார்த்த அந்தப் பெண் எப்படி இந்த உலகுக்கு வந்தாள் என்பது நடராஜனுக்குத் தெரிந்து போயிற்று.

தேவலோகத்துச் சிற்பி ஒருவன் த ன் சிற்பக் கலையின் சிகரமாக விளங்கும்படி ஒரு பதுமையைப் படைக்க விரும்பி ஞன். அந்தப் பதுமை ஒரு பெண்ணாகத் தானே இருக்க வேண்டும்? கலையின் எல்லையை எட்டிப் பிடிக்கும் முயற்சியில் அசுர வேகத்தோடு இறங்கினன். உண வில்லாமல், உறக்கம் இல்லாமல் பைத்தி யம் பிடித்தவன் போல் அழகுக்கு ஒரு எடுத்துக்காட்டாகப் படைத்தான். தந் தத்தினல் ஆன அந்தப் பதுமை காதல் தெய்வமான ரதியின் ரூப லாவண்யத் தைத் தோற்கடிக்குமாறு அமைந்தது.

இந்தத் தந்தப் பதுமையைப் பார்த்த பிரும்மா பிரமித்து நின்ருர். பதுமை யாகவே அதனை இருக்கவிட அவருக்கு மனம் வரவில்லை. அந்தச் சிற்பத்துக்கு உதிரத்தை அளித்தார். பால் போன்ற வெண்மையான உடலில் சிவப்பு நிறம் இலேசாகப் படர்ந்து மெருகு கொடுத் தது. உயிர்த் துடிப்பு தோன்றியது. தசைக ளைக் கொடுத்தார் சிருஷ்டிகர்த்தா. பதுமை மென்மையைப் பெற்றது. தீண்டிய இடமெல்லாம் மேகக் கூட்டங்களின் மிருதுத் தன்மையுடன் கூடி உடலைச்

கி. ராஜேந்திரன்



# வெகுளி

சிலிர்க்கச் செய்த அந்த இணையற்ற எழில் உருவத்துக்கு நரம்புகளையும் தந்தார் பிரும்மா. உணர்ச்சியையும் அடைந்தது அந்தப் பெண்ணுருவம்!

நூபுரங்கள் ஒலிக்க மெள்ளத் தனது வெண் பட்டுப் போன்ற பாதங்களை நகர்த்தினாள். தாங்க மாட்டாத பாரத்தை அந்தச் சிற்றிடை தாமரைத் தண்டைப் போல் வளைந்து கொடுத்து, லாகவமாகத் தாங்கியது. கங்கணம் ஒளி வீச, செங்காந்தள் மலரை ஒத்த தனது கைகளை அசைத்தாள். செந்தாமரையைப் போன்ற அவளுடைய மலர்ந்த முகத்தில் வண்டுகளைப் போன்ற அவளது விழிகள் நாலாபுறம் சுழன்றன. கோவைப் பழம் போன்ற சிவந்த மிருதுவான இதழ்களினூடே முல்லை அரும்புகள் போன்று வெண்மையான பற்கள் வரிசையாகத் தெரியச் சிரித்தாள்.

பயந்தே போனார் பிரும்மதேவன். இந்தப் பெண்ணுக்கு உயிரளித்தது ஆபத்து. இவளால் தேவலோகத்தில் பெரிய போட்டியும் சண்டையும் உண்டாகும் என்று அறிந்தார். என்ன செய்வது என்று யோசித்து ஒரு முடிவுக்கு வந்தார். அடுத்த கணமே அவளைப் பூலோகத்துக்கு அனுப்பி விட்டார்!

அங்கே என்ன வேண்டுமானாலும் நிகழ்ந்து விட்டுப் போகட்டும். தேவலோகம் தப்பினால் சரிதான்!

'படைக்கும் கடவுளான பிரும்மாவால் பூவுலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட அந்தப் பெண்தான் தன் எதிரே இப்போது நர்ஸ் உடை அணிந்து நிற்கிறாள்' என்று எண்ணினான் நடராஜன்.

"இந்த நர்ஸிங்ஹோமுக்கு நீ புதிதாக வந்திருக்கிறாயா?" என்றான்.

"இல்லை, இல்லை. நான் சென்ற ஒரு வருஷமாகவே இங்குதான் இருந்து வருகிறேன். நீங்கள்தான் நர்ஸிங் ஹோமுக்குப் புதியவராகக் காணப்படுகிறீர்கள்" என்றாள் அந்தப் பெண்.

சிரித்தான் நடராஜன். அந்தச் சிரிப்பு மறுபடியும் அந்தப் பெண்ணை வியப்படையச் செய்தது. மீண்டும் அவள் கண்கள் அகல விரிந்தன. கவர்ந்து இழுக்கும் அந்தக் கருவிழிகளை ஆர்வத்

தோடு பார்த்துக் கொண்டே, "நான் புதியவன் அல்ல, பழம் பெருச்சாளி!" என்றான் நடராஜன்.

அவனைப் பற்றிய விவரத்தை அவளிடமிருந்தே தெரிந்து கொண்ட பிறகு, "உங்களை இதற்கு முன் பார்த்ததில்லை அல்லவா? கோபித்துக் கொள்ளாதீர்கள்" என்றாள். அவள் குரலில் பயத்தின் சாயல் இருந்தது.

"கோபப்படுவதற்கு ஒன்றுமே இல்லை. போகட்டும், உன்னுடைய பெயர் என்ன?" என்று கேட்டான்.

"நிர்மலா."

நிர்மலமான நீல வானத்தில் தோன்றும் முழுமதி நடராஜனுக்கு நினைவு வந்தது. அந்த எண்ணத்தோடேயே அவன் மெதுவாக நடந்து சென்றான்.

விசாலமான அந்தத் தோட்டத்தின் ஒரு மூலையில் தனியே சந்தித்தார்கள் இளம் காதலர்கள்.

"விமலா! ஏன் என்னோடு பேசவே மாட்டேன் என்கிறாய்? என் மீது உனக்கு ஏதாவது கோபமா என்ன?" என்று கேட்டான் நடராஜன்.

"கோபமா! இரும்புத் துகள் தன்னைக் கவர்ந்து இழுக்கும் காந்தத்தின் மீது கோபப்பட்டு என்ன செய்வது? மணமுள்ள ரோஜாமலர் தன்னை முகர்பவனைப் பார்த்துக் கோபப்பட்டால் என்ன பிரயோசனம்? சங்கமம் அடையும் ஆற்று வெள்ளம் அலைக்கரங்களை நீட்டித் தன்னைத் தழுவிக் கொள்ளும் கடல் மீது கோபம் கொள்ள முடியுமா? பின் எதற்காக நான் உங்கள் மீது கோபப்படவேண்டும்?" என்றெல்லாம் நினைத்தாள் விமலா. ஆனால் வாயிலிருந்து ஒரு வார்த்தைகூட வரவில்லை. நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது. வாய் வறண்டு போயிற்று. கண்கள் வெட்கத்தினால் பூமியை நோக்கின.

'என்னிடம் கோபமா?' என்று கேட்டான் நடராஜன். ஆனால் அவனுக்குத் தன் மீதுதான் கோபம் வந்தது. அத்தானுக்குப் பிடித்தமான என்னுடைய துடுக்குப் பேச்சு எங்கே? அந்தக் கேலிச் சிரிப்பு என்னவாயிற்று? நிஜக் கலப்பில்லாத அழுகை எங்கே போய் விட்டது? ஏன் ஒன்றுமே செய்யத் தோன்றாமல் விழிக்கிறேன்?

"நீ பேச மாட்டாயானால் நான் திரும்பப் போகிறேன், விமலா! முகம் கொடுத்துப் பேசாதவர்களை எனக்குப் பிடிக்காது" என்று சொல்லி விட்டுத் திரும்பினான் நடராஜன்.

"அத்தான்!" என்று அழைத்தாள் அவள். அந்த ஒரு சொல்லிலே, ஒரே ஒரு வார்த்தையிலே ஒன்றரை வருஷத்து ஏக்கம், பதினெட்டு மாதங்களின் பிரிவுத் துயர் கலந்திருந்தன. மீண்டும் அவளை நோக்கித் திரும்பினான்.

"அத்தான்! இந்த அசட்டுப் பெண்ணை மன்னித்து விடுங்கள். தயவுசெய்து என்னிடம் பேசாமல் போய் விடாதீர்கள்!" எப்படியோ தட்டுத் தடுமாறி இந்த வார்த்தைகளைச் சொல்லி விட்டாள்.

"நீயா அசட்டுப் பெண்! அத்தானை ஆட்டி வைக்கும் விதம் உனக்குத் தெரியாதா? இந்த நிமிஷம் கோபித்துக் கொள்வாய், அடுத்த நிமிஷம் குழைந்து பேசுவாய். அதற்கடுத்த நிமிஷம் கண்ணீர் விட்டு அழுவாய்! அத்தானைத் தவிக்க விடுவதிலே உனக்கு ஒரு ஆசை."


"அதெல்லாம் ஒன்றுமில்லை, அத்தான்! நீண்ட நாட்களுக்குப் பிறகு தங்களைச் சந்தித்த அளவுகடந்த ஆனந்தத்தினால் பேச நா எழவில்லை; அவ்வளவுதான்."


"கட்டுக்கடங்காத ஆனந்தத்தை இப்போது கட்டிப் பிடித்து விட்டாயாக்கும்! இத்தனை நேரம் பேசாமல் இருந்து என்னைத் தவிக்க வைத்தாய்; இனி மேல் பேசிப் பேசி என்னைத் திணற அடிக்கப் போகிறாய்!"

"உங்களைப் பிரிந்திருந்த ஒவ்வொரு நாளும் எனக்கு ஒவ்வொரு யுகமாகக் கழிந்தது, அத்தான்!"

"இனி ஒவ்வொரு நாளும் ஒரு நிமிஷமாகப் போய் விடுமோ?"

"திருமணம் முடிந்து விட்டால் ஒரு நிமிஷம் என்ன? ஒரு விநாடியாகக் கூட





மாறி விடும்! அப்போது சுதந்திரம் அதிகம் அல்லவா?''

'விவரமறியாப் பெண் என்று நினைத்திருந்தேனே, எவ்வளவு பெரிய தவறு?' என்று நினைத்தான் நடராஜன்.

''இன்று கூட விருந்தின்போது ஒருவர் கல்யாணப் பேச்சைத் துவக்கி விட்டாரே, அத்தான்! அதைக் கவனித்தீர்களா?'' என்றாள் விமலா.

''கவனித்தேன். அப்போது ஏக்கமும் துயரமும் நிறைந்த மணிசேகரனுடைய கண்கள் உன்னையே உற்றுப் பார்ப்பதையும் நன்றாகக் கவனித்தேன்.''

இப்படிச் சொல்ல வேண்டும் என்று எண்ணவேயில்லை நடராஜன். அப்போது தான் பார்த்த காட்சி தன் உள் மனத்தினுள்ளே புதைத்து வைக்கப்பட வேண்டிய விஷயம் என்றே அவன் எண்ணியிருந்தான். பேச்சு வாக்கில் தவறிச் சொல்லிப் பிறகு உதட்டைக் கடித்துக் கொண்டான்.

அதற்குள் அவன் சற்றும் எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்து விட்டது. விமலா



நடராஜனின் காலடியில் விழுந்து கிடந்தாள். அவளுடைய மென்மையான விரல்கள் அவன் பாதங்களைப் பற்றியிருந்தன. அவள் கண்களிலிருந்து பெருக்கெடுத்த கண்ணீர் அவன் கால் விரல்களை நனைத்தது. ''அத்தான்! என்னை மன்னித்து விடுங்கள்'' என்று விம்மினாள்.

கள்ளங் கபடமற்ற விமலா அன்று மணிசேகரனின் காதலை ஏற்றுக் கொள்வதா வேண்டாமா என்று புரியாமல் சில மணி நேரங்கள் தாமதித்தாள்; அவ்வளவுதான். அதில் தவறு ஒன்றுமே இல்லை. ஆனால் அவளுடைய வெகுளித் தன்மை தான் ஏதோ மன்னிக்கமுடியாத குற்றத்தைச் செய்து விட்டதாக எண்ணச் செய்தது. அனாவசியமாக மணியை ஏசி அனுப்பினாள். பின்னர் அவன் வருந்துவானே என்று மன்னிப்பு கேட்டாள். இப்போதும் களங்கமற்ற அதே வெகுளிக் குணத்தினால்தான் அத்தானுக்கு ஏதோ பெரிய துரோகம் செய்து விட்டதாக நினைத்து மன்னிப்பும் கேட்டாள். அந்தச் செய்கையால் பெரிய தீமையல்லவா நேர்ந்து விட்டது!

அவளுடைய தோள்களைப் பற்றித் தூக்கி நிறுத்தினான் நடராஜன். ''விமலா! நான் வெளிநாடு சென்ற பிறகு இங்கு என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. ஆனால் திருமணம் என்ற வார்த்தையைக் கேட்டதுமே, மணிசேகரன் உன்னைப் பார்த்த பார்வை என்னுடைய உள்ளத்தில் சந்தேகத்தைப் படர விட்டது. ஒன்றுமிராது என்று என்னை நானே ஏமாற்றிக் கொண்டேன். ஆனால் இனி ஏமாற மாட்டேன். என்ன நடந்தது சொல்லு! உண்மையைச் சொல்லு! உடனே சொல்லிவிடு! இல்லையானால் ஒரே குத்தாகக் குத்தி உன்னைக் கொன்று விட்டு, நானும் லண்டனிலிருந்து வாங்கி வந்திருக்கும் துப்பாக்கியால் இப்போதே சுட்டுக் கொண்டு இறந்து போவேன்!''

''சொல்லி விடுகிறேன். சந்தேகம் உங்கள் உள்ளத்தில் இருக்க வேண்டாம். நடந்ததை நடந்தபடி சொல்லி விடுகிறேன். அதன் பிறகு எனக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடுங்கள். கொன்றே போடுங்கள், பரவாயில்லை. ஆனால்...ஆனால் அத்தான்! நான் செய்த பிழைக்காக உங்களை நீங்களே தண்டித்துக் கொள்ளாதீர்கள். வேண்டாம்! தயவுசெய்து வேண்டாம்!'' என்று கெஞ்சினாள் அவள்.

வெறி பிடித்தவனாக மாறினான் நடராஜன். அவள் தோள்களை மேலும் இறுகப் பற்றி உலுக்கினான். அந்தப் பேதையின் உடல் சுழற்காற்றில் சிக்கிய நாணலைப் போல் துவண்டு துவண்டு விழுந்தது. இடி ஓசை கேட்ட நாகம் போல் நடுநடுங்கியது. அந்தச் சண்டமாருதத்துக்கிடையே கதறிக்கொண்டே நடந்ததைச் சொன்னாள் விமலா. மணிசேகரன் தன்னிடம் காதல் வார்த்தை பேசியதைச் சொன்னாள். அதைப் பற்றித் தான் பெருமைப் பட்டதை ஒளிவு மறைவு இல்லாமல் அத்தானிடம் சொல்லி விட்டாள். பின்னர் அத்தானின் கடிதத்தைப் படித்ததும், தன் மீதே வெறுப்பு கொண்டதையும், மணிசேகரனை 'வெளியே போ!' என்று இட்டியதையும் கூறினாள். பின்னர் அவன் அறைக்குச் சென்று மன்னிப்பு கேட்டதையும் அவன் தன்னுடைய நல்வாழ்வுக்குப் பாடுபடுவதாக வாக்குறுதி அளித்திருப்பதையும் விமலா விம்மிக் கொண்டே சொல்லி முடித்தாள்.



PLAYER'S
10 Cigarettes 10
PLAYER'S "MEDIUM" NAVY CUT
Player's Please
NAVY CUT MEDIUM
CIGARETTES
Rs. 3.80 nP. per tin of 50,
75 nP. per packet of 10
Issued by The Imperial Tobacco Company of India Limited
PL1301

ஒரு கையால் அவள் தோளையும் மற்றொரு கையினால் அவள் கூந்தலையும் பற்றிக் கொண்டான் நடராஜன்.

"இது உண்மைதானா? நடந்தது இவ்வளவுதானா? அல்லது என்னிடம் ஏதாவது மறைக்கிறாயா?" என்று கேட்டுக் கொண்டே தன் பிடியை இறுக்கினான். தாள முடியாத மன வேதனையையும் சகிக்க முடியாத உடல் வலியையும் பொறுத்துக் கொண்டு, "இல்லை, அத்தான் இல்லை! உங்களிடம் எதையும் மறைக்கவில்லை. அதற்கு எனக்கு உரிமை ஏது?" என்றாள் விமலா.

தன் பிடியைத் தளர்த்தினான் நடராஜன். அவன் மார்பில் சாய்ந்தாள் விமலா. தன்னைத் துன்புறுத்தியவனானாலும் தன் இன்னுயிர்க் காதலன் அவனே அல்லவா? கொடி கொழுகொம்பைத் தழுவியது. நகர்ந்து கொண்டு திரும்பி நடந்து விட்டான் அவன். சரிந்து விழுந்தாள் அவள். விமலாவின் விம்மல் ஓய்வதற்கு நீண்ட நேரம் ஆயிற்று.

* * *

அவள் மெள்ளத் தன் தலையை நிமிர்த்தியபோது எதிரே மணிசேகரன் தாபத்துடன் நின்று கொண்டிருந்தான்.

"அத்தானும் அத்தான்! பட்டு ரோஜாவின் இதழ்களைப் பிய்த்து எடுத்து அவற்றைக் காலின் கீழே போட்டு மிதித்து நசுக்குபவன் மனிதனா? உல்லாசமாகப் பாடிப் பறந்த குயிலைப் பிடித்து அதன் கழுத்தைத் திருகி எறிபவன் மனிதனா? வண்ணப் பட்டுப் பூச்சியின் இறகுகளைப் பிடித்து இழுத்துத் துன்புறுத்துபவன் மனிதனா? அரக்கன், விமலா, அரக்கன்! பயங்கர குணம் படைத்த ராட்சதன்! அவன் உன்னுடைய காதலன்! அத்தான், அருமை அத்தான்!"



"வேண்டாம்! அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். புண்பட்டுப் போன என் மனத்தில் வேலைப் பாய்ச்சாதீர்கள். என்னிடம் தவறு இருக்கிறது. தண்டனை அடைந்தேன். அவரை ஏசாதீர்கள்."

"நீ இப்படிச் சொல்வாய் என்று எனக்குத் தெரியும், விமலா! இப்படிச் சொல்வாய் என்று எதிர்பார்த்துத்தான் அந்த முரடனைச் சும்மா விட்டேன். இல்லையானால், இல்லையானால்......" நறநற வென்று பற்களைக் கடித்தான் மணி.

"எப்பேர்ப்பட்ட ஆபத்திலிருந்து அத்தான் தப்பினார். அவரும் நானும் தனித்துப் பேசும் இடத்தில் உங்களுக்கு என்ன வேலை? நீங்கள் ஏன் இங்கு வந்தீர்கள்? யாரைக் கேட்டுக் கொண்டு இங்கே வந்தீர்கள்?" என்றாள்.

"என் மனச்சாட்சியைக் கேட்டுக் கொண்டு வந்தேன், விமலா! உன்னைக் காண்பதற்காகத்தான் வந்தேன். நடராஜனையும் உன்னையும் சேர்த்துப் பார்க்கவே என்னால் முடியவில்லை. உங்கள் கண்கள் ஒரு கணம் சந்தித்தால் என் உடல் கோபத்தால் நடுங்குகிறது. உங்கள் திருமணத்தைப் பற்றி யாராவது பேசினால் அவர்களுடைய நாக்கையே அறுத்தெறிந்து விடவேண்டும் என்று தோன்றுகிறது. பொறாமைத் தீ என் மனத்தில் கொழுந்து விட்டு எரிகிறது. விமலா! அந்தத் தீயில் என்னுடைய உடலும் உள்ளமும் வதங்குகின்றன. இன்னும் சில நாட்கள் இந்த நிலைமை நீடித்தால் அவை சுட்டெரிக்கப்பட்டுச் சாம்பலாகி விடும். என்னால் அதைத் தாங்கவே முடியாது விமலா! தாங்கவே முடியாது!"

"நீங்கள் எனக்கு அளித்த வாக்குறுதி என்ன ஆவது?"

"வாக்குறுதியை நான் மீறவில்லை, விமலா! யோசித்துப் பார்! உனக்கு நான் என்ன வாக்குறுதி கொடுத்தேன்?"

"என்னுடைய நல்வாழ்வுக்காகப் பாடுபடுவேன் என்று வாக்குறுதி அளித்தீர்களே, அதன் கதி என்ன? என் நல்வாழ்வே உங்கள் லட்சியம் என்று மார் தட்டினீர்களே, அந்த லட்சியம் தவிடுபொடியாகி விட்டதா?"

"இல்லவே இல்லை! லட்சியம் முன்னைக் காட்டிலும் உறுதியாகவே இருக்கிறது. உன் நல்வாழ்வுக்காகவே பாடுபடுவேன். சந்தேகம் வேண்டாம்! ஆனால் நீ நினைத்திருக்கும் போலி நல்வாழ்வு அல்ல. உண்மையான நிலையான நல்வாழ்வை நான் உனக்கு அளிப்பேன்!"

"என்னுடைய நல்வாழ்வைப் பற்றி நீங்கள் எப்படி அறிய முடியும்?"

"எல்லாம் நன்றாகத் தெரியும். குழந்தைப் பிராயத்தில் ஏற்பட்ட ஒரு

தொடர்பை, பெரியோர்கள் வேடிக்கையாக நிச்சயித்துவைத்த ஒருகாரியத்தை, உன்னுடைய வாழ்க்கை என்று நினைத்து உன்னை நீயே ஏமாற்றிக் கொள்கிறாய். அசட்டுப் பிடிவாதம்; வீண் வீம்பு! சிறிது யோசித்துப் பார், இந்த அரக்கனுடன் நீ இன்பமாக வாழ முடியுமா? இன்று உன்னைச் சித்திரவதை செய்த இந்தக் கயவனுடன் நீ சந்தோஷமாகக் காலம் கடத்த முடியுமா?''

''உங்களைக் கெஞ்சுகிறேன். மேலே பேசாதீர்கள். ஒரு முறை கண்டபடி பேசி என் மனத்தைக் கெடுத்து விட்டீர்கள். அதற்கு நான் தண்டனை அடைந்து விட்டேன். மறுபடியும் என் உள்ளத்தை மாற்ற முயற்சி செய்யாதீர்கள்! என்னிடமே எனக்கு நம்பிக்கை இல்லை! வேண்டாம்!''

''முடியாது விமலா! சொல்லித்தான் திருவேன்! இந்த நீசனுடன் உனக்கு வாழ்க்கை வேண்டாம். என்னுடன் வந்துவிடு. இந்த ஊரை விட்டே நாம் போய் விடலாம். பம்பாய்க்கும், தில்லிக்கும், ஹரித்வாருக்கும், சிம்லாவுக்கும், காஷ்மீரத்துக்கும் போவோம். உனக்கு எந்தவிதமான குறையுமின்றிச் சந்தோஷ சாகரத்தில் இன்பத் தோணியில் ஏற்றிச் செல்கிறேன்.''

விமலா அவன் சொல்வதையெல்லாம் கேட்க விரும்பாமல் காதுகளைப் பொத்திக் கொண்டு தன் தலையைப் பலமாக அசைத்தாள். சற்றுமுன் அத்தானின் காலில் விழுந்த அவள் இப்போது மணியின் கால்களில் விழுந்து நமஸ்கரித்தாள். நடராஜனைப் போலவே மணியும் அவள் தோள்களைப் பற்றக் குனிந்தான். அவன் கரங்கள் எக் காரணத்தாலோ நடுங்கின. அவள் மென்மையான தோள்களில் அவன் நகம் பட்டதுமே அடிபட்ட மானைப் போல் துள்ளி அகலச் சென்று விழுந்தாள் விமலா.

கண்களில் கண்ணீர் ஆறாகப் பெருக நெஞ்சு விம்மத் தரையில் மண்டியிட்டுத் தன் கரங்களைக் குவித்து மணியை ஏறிட்டுப் பார்த்தாள். ''உங்களை நமஸ்கரிக்கிறேன். உண்மையிலேயே என்னுடைய நல்வாழ்வில் உங்களுக்கு அக்கறை இருக்குமானால் அத்தானுக்கும் எனக்கும் இடையே வராதீர்கள்! என்னை அடியோடு மறந்து விடுங்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, சற்று முன்னால் பயமுறுத்தியது போல் அத்தானுக்குத் தீங்கு இழைத்து விடாதீர்கள்.''

''உன்னைத் 'துன்புறுத்தாத வரையில் நடராஜனை நான் ஒன்றும் செய்ய மாட்டேன், விமலா! ஆனால் உன்னுடைய நல்வாழ்வுக்கு மயிரிழை அளவு பங்கம் ஏற்படும்படி அவன் நடந்து கொண்டால் அவனைக் கொன்று போடுவதற்கும் தயங்க மாட்டேன்!'' என்று சபதம் செய்தான்.

ஒரு மரத்தின் மறைவில் நின்று அவர்கள் பேசுவதை யெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த நடராஜன் ஓசைப்படாமல் நகர்ந்து சென்றான்.

## அத்தியாயம் 20

# கலை உலகின் முதல் படியிலே....!!

சேகர் தன்னைப் பார்த்ததுமே, இன்முகம் காட்டி வரவேற்பார்; அன்புடன் வீட்டினுள்ளே அழைத்துச் செல்வார்; தம்முடைய பெற்றோர்களுக்குத் தன்னை அறிமுகம் செய்து வைப்பார்; அவர்களும் மலர்ந்த முகத்துடன் தன்னை வரவேற்பார்கள்; சீக்கிரத்திலேயே விவாகத்துக்கும் ஏற்பாடு செய்வார்கள் என்று எண்ணியிருந்தாள் மல்லிகா. அத்தகைய குதூகல வரவேற்பின்போது தான் எப்படி யெல்லாம் நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பல முறை மனத்துக்குள்ளேயே அவள் நடித்துப் பார்த்துக் கொண்டாள்.

ஒருவேளை இத்தகைய வரவேற்பு தனக்குக் கிட்டாமலும் போகலாம். சேகர் வீரப்பனிடம் கொண்டிருந்த கோபம் இன்னும் ஆறாமல் இருக்கலாம். அன்று தன்னைக் கீழே தள்ளிய கோபம் இன்னும தனக்கு நல்வரவு கூற முடியாதபடி அவரைத் தடுக்கலாம். 'உனக்கும் எனக்கும் இடையே எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. போய் விடு' என்றுகூட அவர் கோபத்தில் சொல்லலாம். இந்த ஒரு நிலைக்கும் தயாராக இருந்தாள் மல்லிகா. கெஞ்சும் விழிகளால் அவர் முகத்தை ஏறிட்டுப் பார்த்து, 'நடந்ததை யெல்லாம் மறந்து விடுங்கள். இன்றிலிருந்து நாம் புது வாழ்வு தொடங்குவோம்' என்று சொன்னால் அவர் மனம் இளகி விடும் என்று யோசித்து முடிவு செய்திருந்தாள்.

ஆனால் அங்கு நடந்தது இந்த இரண்டு முறையிலும் இல்லாமல் முற்றிலும் புதிய, அவள் எதிர்பாராத விதத்தில் அமைந்தது. சேகர் இன்முகம் காட்டி

வரவேற்கவில்லை. 'நமக்கிடையே ஒரு சம்பந்தமும் இல்லை. இங்கிருந்து போய் விடு' என்று விரட்டவும் இல்லை.

இதனை எண்ணி வியந்து கொண்டே தெரு முனையில் மல்லிகா மறுபடியும் வண்டியைவிட்டு இறங்கினாள். அதற்குள் சேகர் அங்கு ஒரு மோட்டாரில் வந்து விட்டான். வண்டிக்காரனுக்குக் கூலி கொடுத்து அனுப்பினான். அவர்களுடைய பெட்டிகளையெல்லாம் மோட்டாரில் வைத்து விட்டு அவர்களை ஏறிக் கொள்ளச் செய்தான்.

மோட்டார் குபீரென்று முன்னோக்கி நகர்ந்தது. சென்னை நகரத்தின் வழுவழுப்பான சாலைகளிலே விரைந்தது. குண்டும் குழியுமான வீதிகளில் விழுந்து எழுந்து சென்றது. வளைவுகளில் நெளிந்தும் திருப்பங்களில் திரும்பியும் ஜனக்கூட்டத்தை விரட்டிக் கொண்டும் வேகமாகச் சென்றது.



"நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்?" என்று கேட்டாள் மல்லிகா.

"ஒரு ஹோட்டலில் நீ தங்குவதற்கு ஏற்பாடு செய்கிறேன். ஒரு தனி அறையில் நீயும் சரஸ்வதியும் இருக்கலாம்."

"உங்களுடைய தாய் தந்தையரைப் பார்க்க வேண்டாமா?"

"அவர்களிடம் உன்னைப் பற்றி நான் இன்னும் சொல்லவில்லை. சொல்லி விட்டுப் பின்னர் அழைத்துச் செல்கிறேன். அதுவரையில் நீங்கள் இருவரும் இங்கு தங்கி இருக்கலாம்."

தன் வாழ்நாளிலேயே முதன் முதலாகப் பயம் என்றால் என்ன என்பதை உணர்ந்தாள் மல்லிகா. "தனியாகவா?" என்று கேட்டாள். அந்த ஒரு வார்த்தையில்தான் எத்தனை நடுக்கம்!

"துணைக்குத் தங்கை சரஸ்வதி இருக்கிறாள். நானும் அடிக்கடி வந்து பார்த்துக் கொள்கிறேன். சென்னைக்கு வரும்போது பயந்து கொண்டா வந்தாய்? வேண்டுமானால் உன்னுடைய கிராமத்துக்குத் திரும்பிப் போய் விடு!"

"இல்லை, இல்லை! எனக்குக் கொஞ்சம் கூடப் பயமாக இல்லை. தனியாக இருக்க வேண்டுமே என்று நினைத்தேன், அவ்வளவுதான். நீங்கள் இருக்கும்போது எனக்கு என்ன பயம்?" என்றாள்.

தனிமையில் இருக்கக் கூடிய பயத்தை விடச் செண்பகபுரத்துக்குத் திரும்பி விடச் சொல்வாரோ என்ற அச்சமே அதிகமாக இருந்தது மல்லிகாவுக்கு. திரும்பிப் போய் என்ன செய்வது? யார் இருக்கிறார்கள் அங்கே? திரும்பத் திரும்ப ஆற்று வெள்ளத்தையும் செண்பக மரங்களையும் பார்த்துப் பார்த்து ஏங்கிப் பெருமூச்சுவிட வேண்டியதுதான்.

ஹோட்டல் புத்தகத்தில் கையெழுத்துப் போட்டு விட்டு உள்ளே அழைத்துச் சென்றான் சேகர். "ஏன் என்னுடைய கடிதங்களுக்கு நீங்கள் பதில் போடவில்லை?" என்று கேட்டாள் மல்லிகா.

"முக்கியமான காரணம் என் பெற்றோர்களிடம் உன்னைப் பற்றிச் சொல்லப் பயப்பட்டேன். பரம்பரை வழக்கப்படி அவர்கள் பார்த்து வைக்கும் பெண்ணைத்தான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று பிடிவாதமாக இருப்பார்கள். சமயம் பார்த்துத்தான் அவர்களைச் சரிக்கட்ட வேண்டும்."

"என் கடிதங்களை என்ன செய்தீர்கள்?"

"பத்திரமாக வைத்திருக்கிறேன், மல்லிகா! குழந்தைபோல் நிறுத்தி நிதானமாக, குண்டு குண்டாக நீ எழுதியிருக்கும் எழுத்துக்களை நூறு முறை படித்திருப்பேன். ஒவ்வொரு கடிதத்திலும் ஒவ்வொரு வார்த்தையிலும் எழுத்திலும் உன் எழிலுருவத்தைப் பார்த்து ரசித்தேன். இரவும் பகலும் என் மனோராஜ்யத்தில் சிங்காதனத்தில் உட்கார்ந்து கொண்டு என்னை உன் இஷ்டப்பட்டபடியெல்லாம் ஆட்டி வைத்தாய். நான் ஆடினேன். ஒரு சமயம் கண்ணீர் விட்டு அழுவாய். நான் அருகே வந்து உன் கண்களைத் துடைக்க முயற்சி செய்வேன். ரோஜா இதழ் போன்ற உன் கன்னத்தை என் விரல் தீண்டி விடும். உடனே உனக்குப் பொல்லாத கோபம் வந்துவிடும். கண்களை உருட்டி விழிப்பாய். உன் நயனங்களில் இருந்த கோபத்தைப் பார்த்து விட்டு நான் பயந்து ஓடியே போய் விடுவேன்.

அதைக் கண்டு நீ கல கல வென்று உடல் குலுங்கக் கைகொட்டிச் சிரிப்பாய். தைரியமடைந்து நான் அருகே வருவேன். உன் விரல்களைப் பற்றிப் பக்கத்தில் இழுப்பேன். நாணத்தினால் நீ தலையை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டு குனிந்து கொள்வாய்......''

''போதும் போதும்'' என்றாள் மல்லிகா. ''இதற்கு மேல் சொல்லிக் கொண்டே போனால் என் உள்ளம் தாங்காது; சந்தோஷத்தினால் மூச்சு முட்டிச் செத்தே போய் விடுவேன்.''

''கடைசியாக நீ எழுதிய கடிதம் என்னை உலுக்கி விட்டது, மல்லிகா! அம்மா ஏன் இறந்துபோனாள்? வைத்தியர் யாரையும் அழைத்து வந்து காட்டவில்லையா? ஒரு வேளை பணம் இல்லாத காரணமா? இத்தனை கடிதங்கள் எழுதியவள் பணம் தேவை என்று குறிப்பிட்டிருந்தால் அனுப்பியிருப்பேனே?''

கதறி அழ வேண்டும் என்று தோன்றியது மல்லிகாவுக்கு. ''எல்லாம் உங்களால் வந்த வினைதான்'' என்று சொல்லிக் காட்ட வேண்டும். கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள். மறுபடியும் மனக்கசப்பை வளர்க்க வேண்டாம்.

''போனது போகட்டும், நடக்க வேண்டியதைப் பற்றிப் பேசுங்கள்.''

''இனி மேல் நடப்பதற்கு என்ன இருக்கிறது?''

''நம்முடைய திருமணம்.''

சேகர் யோசித்தான். ''அது அவ்வளவு சீக்கிரமாக நடந்துவிடக் கூடிய காரியம் அல்ல. என் தகப்பனார் உடல் நிலை மோசமாக இருக்கிறது. இப்போது இந்த விஷயத்தைச் சொன்னால் பழைய சம்பிரதாயங்களில் ஊறிப் போன அவர் மனமுடைந்து இறந்தே போய் விடுவார். சற்றுக் குணமாகட்டும். அது வரையில் பொறுத்திருப்போம்.''

ஏமாற்றம் அடைந்தாள் மல்லிகா. பூரண சந்திரனைக் கார்காலத்து மேகங்கள் மூடி மறைப்பது போல் அவள் முகத்தில் ஏக்கத்தின் சாயல் படர்ந்தது.

அதைக் கவனித்தான் சேகர். ''கவலைப் படாதே, மல்லிகா! நம் திருமணத்துக்கு முன்னால் உன் கனவுகளை நனவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறேன்.''

''நிஜமாகவா?''

''நிச்சயமாகத்தான். திரைப் பட நட்சத்திரமாகி ஜொலிக்க வேண்டும் என்பதுதானே உன் கனவு? அது விரைவில் உண்மையாகிவிடும். இன்று மாலை நாதன் என்பவரை இங்கு அழைத்து வருகிறேன். அவரிடம் எல்லாவற்றையும் சொல்லி யிருக்கிறேன். உன்னை நேரில் பார்த்துவிட்டு முடிவாகச் சொல்வதாக வாக்களித்திருக்கிறார்.''

''நீங்களே படம் எடுக்கப் போவதாகச் சொன்னீர்களே?''

''படம் எடுக்கப் பணம் வேண்டும், மல்லிகா! ஒரு படம் எடுக்க எவ்வளவு செலவாகும், தெரியுமா? குறைந்தது ஐந்து லட்சம் ரூபாய்கள் வேண்டும்!''

ஐம்பது ரூபாயைச் சேர்த்துப் பார்த்திராத மல்லிகா ஐந்து லட்சம் என்றதும் வாயடைத்துப் போனாள்.

''இன்று மாலை நீங்கள் அழைத்து வரப் போகிறீர்களே, அவரிடம் அவ்வளவு பணம் இருக்குமா?''


''நாடகத்துக்கு அவ்வளவு பணம் தேவையில்லை. சில ஆயிரம் ரூபாய்கள் இருந்தால் போதும்.''

''நாடகமா?'' என்றாள் மல்லிகா.


''ஆமாம். எடுத்த எடுப்பிலேயே திரைப்படத்தில் புக முடியுமா? நட்சத்திரப் பதவியை எட்டிப் பிடிப்பதற்கான ஏணியில் இது முதல் படி.''

முதல் படி நாடக நடிகையானால் கடைசிப்படி நட்சத்திரப் பதவியானால் இடையே உள்ள படிகள் என்ன என்பது மல்லிகாவுக்குப் புரியவில்லை. அவசரப் படாதே, மல்லிகா! போகப் போகத் தெரிந்து கொள்வாய். இடையே இருக்கும் அந்தப் படிகளில் சிலவற்றில் சிலாம்புகள் இருந்து காலில் குத்தும். வேறு சில படிகளில் அடிக்கப்பட்டிருக்கும் கூரிய ஆணி காலில் பொத்துச் சதையைக் கிழிக்கும். இன்னும் சில படிகள் திடீரென்று உடைந்து போய் உன்னைக் கீழே தள்ளும். சிற்சில சமயங்களில் ஏணியே சரிந்து கொடுத்து மண்ணைக் கவ்வும்படி செய்து விடும். எல்லாவற்றையும் நாட்கள் செல்லச் செல்ல நீயாகவே தெரிந்து கொள்வாய்!

மல்லிகா! உலகம் நீ நினைப்பதுபோல அவ்வளவு நல்ல உலகம் இல்லை. அதிலும் நீ ஆசையோடு வந்திருக்கிறாயே அந்தக் கலை உலகம் வெளிக்கண்களுக்குத் தெரிவதுபோல அவ்வளவு சொகுசான உலகம் இல்லை. அதில் இருக்கும் ஏமாற்றுகள், பொய் புனைசுருட்டுகள், கொடுமைகள், மோசடிகள் எல்லாம் உன்னை என்ன பாடுபடுத்தும் என்பதை இப்போது உணரமாட்டாய்! இதிலெல்லாம் அடிபட்டு மிதிபட்டு பிறகல்லவா உலகத்தின் கண் முன்னால் நீ நட்சத்திரமாக ஒளிவீசிப் பிரகாசிக்க வேண்டும். இப்பொழுதுதானே கலை உலகின் முதல் படியில் அடி வைத்திருக்கிறாய்! அடி அசட்டுப் பெண்ணே! அபாயம் நிறைந்த அந்த முதல் படியில் நிதானமாகக் காலை வை! (தொடரும்)



ஏன் நம்பிக்கையை விடுகிறீர்கள்!
அது இயற்கை, நரை மயிர் உங்களுடைய தோற்றத்தைக்கெடுக்கிறது. ஆனால் நீங்கள் நம்பிக்கையை விட வேண்டாம். ஆயிரக்கணக்கான ஜனங்களைப் போல் நீங்களும் லோமா உபயோகித்து, அமைதியுடனும் தகுதிவாய்ந்த தோற்றத்துடனும் இருங்கள்.
லோமா
கருமையையும்
வனப்பையும் தருபவை
லோகல் ஏஜெண்டுகள் :
எம். எம். கம்பாட்வாலா, அஹமதாபாத் 1
ஏஜெண்டுகள் :
ஸி. நரோத்தம் அண்டு கோ பம்பாய் 2 Tel : 30575
MPS-TAM.


பூச்சிகளுக்கு அறிக்கை:
இனி இந்த வீட்டில் நம்ம
இனத்திற்கு இடம்கிடையாது.
இங்கே ப்ளிட்
உபயோகிக்கிறார்கள்!


FLIT
KILLS



# அன்பின் வழி

ஜ. சாமிநாத

அன்றைக்கு வீடு முழுவதும் ஆனந்த மயம். எங்கும் மகிழ்ச்சியின் துள்ளல். சரஸ்வதி அம்மாள் முதல் சின்னப் பையன் சீனு வரையில் அன்று கும்மாளம் அடித்துக் கொண்டிருந்தார்கள்.

சங்கரன் பி. ஏ. பாஸ் செய்துவிட்டான். கல்லூரியிலே அவன்தான் முதல் என்ற செய்தி கேட்டுப் பூரித்துப் போனாள் சரஸ்வதி. 'ஈன்ற பொழுதினும் பெரிதுவக்கும் தன் மகன் சான்றோன் எனக் கேட்ட தாய்' அல்லவா? உள்ளம் நிறைந்து பொங்கியது. லல்லி கூட எஸ். எஸ். எல். சியில் தேறி விட்ட செய்தி அன்றுதான் தெரிந்தது. அவள் வீடு முழுவதும் ஆனந்தத்தினால் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தாள். கோபு நான்காவது படிவத்தை விட்டு வெளியேறிய மகிழ்ச்சியில் தலைகால் புரியாமல் ரேடியோவை அலற விட்டிருந்தான். கமலியும் ஐந்தாவது பாஸ் செய்து விட்டாள் என்று கேட்ட போது சரஸ்வதியின் தாயுள்ளம் பெருமையால் வழிந்தது. எல்லோரும் தாயாரைச் சுற்றிக் கொண்டனர்.

அப்போது 'அம்மா!' என்ற குரல் கேட்டது. சட்டை நிறையப் புழுதியுடன் அங்கே ஓடோடி வந்தான் சீனு, கடைக்குட்டி.

"அம்மா! நான் இனிமேல் பள்ளிக்கூடத்துலே வேற ரூமிலே உட்காரணுமாம். டீச்சர் சொன்னா. நான் பாஸ் ஆயிட்டேனாம்!"

சங்கரன் குண்டுக்கட்டாக அவனைத் தூக்கிக் கொண்டு கூத்தாடினான். சரஸ்வதி பெருமையில் என்ன செய்வதென்றே தோன்றாமல் உட்கார்ந்திருந்தாள்.

"அவர் இருந்தால் ...?"

அவர் இருப்பதாவது? அவளுடைய கணவர் ராமசாமி இறந்துதான் இரண்டு வருஷங்கள் ஆகிவிட்டனவே! நல்ல வேளையாக இத்தனை பெரிய குடும்பம் அவருக்குப் பின்னர் நொடித்துப் போய் விடாதபடி சம்பாதித்துச் சேர்த்து வைத்திருந்தார் மனுஷர்.

எல்லோருக்கும் மூத்தவளான பட்டு பிரசவத்துக்கு வந்திருந்தாள். அவளிடம் போய் எல்லோரும் விஷமம் செய்தனர். எல்லோருக்கும் சந்தோஷ வெறி!

"அம்மா, இன்னிக்கு 'ஸ்வீட்' பண்ணு அம்மா!" என்றான் சங்கரன்.

"சரி, செய்கிறேன்..." என்று சொன்னாள் சரஸ்வதி.

சட்டையைக் கலைத்துக் கொண்டே சின்னப் பையன் சீனு மாடிக்கு ஏறப் போனான். மாடிப்படியில் யாரோ உட்கார்ந்துகொண்டிருந்தார்கள்.

வேறு யாருமில்லை, அவன் நடேசன்தான்!

"அண்ணா! நீ மாத்திரம் ஏனண்ணா இங்கே உட்கார்ந்திருக்கிறே?"

குழந்தை கேட்ட கேள்விக்குப் பதில் இல்லை. நடேசன் கண்களிலிருந்து நீர் பெருகி வழிந்தது.

"சீனு, நான் எஸ். எஸ். எல். சி. பாஸ் ஆகவில்லையடா!"

"போன தடவை கூடப் பாஸ் ஆகலியே!"

"இந்த மரக்கட்டை மூளையில் ஏறினால் தானே!" என்று அழுத்துக் கொண்டான்.

நடேசன் விசும்பினான். அவனுக்குச் சின்ன வயசிலேயிருந்தே படிப்பு கம்மிதான். ஒவ்வொரு வகுப்பிலும் குறைந்தது இரண்டு வருஷங்களாவது தங்குவான். இப்போது எஸ். எஸ். எல். சி. யிலே மூன்றாவது முறை 'கோட்!'

"ஏதோ மண்டையில் ஏறவிட்டால் இப்படியா சொல்வது? நீ எல்லாக் குழந்தைகளிலும் ஜடம் என்றல்லவோ அம்மா சொல்லி விட்டாள்!" என்று நினைத்தபோது அவன் மனம் விண்டு போயிற்று.

"எனக்கு அந்த வருத்தம் இருக்காதா? அதையும் மறைத்துக் கொண்டு சங்கரனிடம் நாணிக் கோணிக் கொண்டு 'நீ காலேஜிலே முதலாமே' என்று கேட்டபோது 'உன்னைப் போல என்று நினைத்தாயோ!' என்று பட்டென்று முகத்தில் அடித்தாற் போலக் கூறி விட்டானே சங்கரன்?"

"நான் பாஸ் ஆகவில்லையடி" என்று ஊரிலிருந்து வந்த பட்டுவிடம் சொன்னபோது, 'வயசு இருபதுதான் ஆச்சு. இன்னும் நிறைய வருஷம் இருக்கு. மெதுவாகத் தேறிக்கலாம்' என்றல்லவோ வெறுப்பை உமிழ்ந்து விட்டாள் பட்டு? லல்லி என் ஓடி வந்து 'நீ பாஸ் ஆகி விடுவாயோ என்று பயந்தேன்' என்று சொல்லி வெந்த புண்ணிலே வேலைச் செருக வேண்டும்? போதாக்குறைக்குக் கோபுவும் 'ஒன்றுக்கும் உதவாக்கரை' என்று சொல்லி விட்டுப் போய் விட்டானே!"

நெஞ்சில் நினைவு சேர்த்த துக்கம் நீராகக் கன்னத்தைக் கரைத்தது.

"அண்ணா! அழாதே!" என்று எந்து வயதுச் சீனு அவன் கண்களைத் துடைத்தான்.

"சீனு! நான் ஒன்றுக்குமே பிரயோசனம் இல்லையே?"

"யார் சொன்னா அண்ணா. நீதான் காய்கறி வாங்கி வர்றே; வண்ணானுக்குத் துணி எடுத்துப் போடறே, என்னைக் குளிப்பாட்டறே!"

சீனுவை முகத்தோடு முகம் இழைத்துக் கொண்டான் நடேசன்.

"நீதான் நல்லவன் அண்ணா!" என்று கூறி விட்டு ஓடி விட்டான் சீனு.

டாக்டர் (தன் அருமைப் பெண்ணிடம்):— லலிதா! சீக்கிரம் என் மருந்துப் பெட்டியை எடு......



லலிதா:— எதற்கு அப்பா?

டாக்டர்:—டெலிபோன்லே ஒருத்தன், 'நான் உயிரோடிருக்கணும்னு நீ உடனே வரணும்!' என்று கூறினான். உடனே போகணும்!

லலிதா:—அது உனக்கு வந்த டெலிபோன் இல்லே அப்பா! எனக்கு வந்தது!

மற்றவர்கள் கூறியது மறுபடியும் மனத்துள் படம்போல ஓடியது. கிழிந்த சொக்காய் காடா வேஷ்டி—இவற்றுள் எலும்பும் தோலுமாய் மறைந்திருந்த தேகம் அவமானத்தால் சிலிர்த்தது. அந்தத் தேகத்துள் புதைந்திருந்த இதயம் குறுகி ஆலை அரைச் சாறுக ஆக்கி விட்டது. "அந்த மகிழ்ச்சிக் கும்பலிலே நான் ஒரு அவலப் புள்ளி. சங்கரனோ அலட்சியமாகப் பேசுகிறான். கோபுவின் பேச்சிலே கர்வம் இருக்கும். பட்டுவோ என்னை முழுவதும் வெறுப்பவள். லல்லி பெரிய அகம்பாவக்காரி. காரணம், அவர்களுக்குத் திறமை இருக்கிறது. ஆண்டவனே! என்னை ஒன்றுமே தெரியாத மட்டியாக ஏன் படைத்து விட்டாய்? ஆகையால் வாயில்லாப் பூச்சியாகவே இருக்க வேண்டியிருக்கிறதே!"

மனம் தன்னுடைய திறமைக்குப் பழங்கணக்கு போட்டது.

உள்ளே எல்லோரும் உரக்கப் பேசிக் கொண்டு சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

"நடேச அண்ணு எங்கே?" என்று கேட்டாள் லல்லி.

"எங்கே போயிருந்தால் என்ன? சாப்பாட்டு வேளைக்குச் சரியாக வந்து விடுகிறான்" என்றான் சங்கரன்.

"மறுபடியும் புஸ்தகத்தையெல்லாம் அலமாரியிலிருந்து மேஜைமீது எடுத்து வைக்கப் போயிருப்பான்" என்றான் கோபு. அதைத் தொடர்ந்து எல்லோரும் சரஸ்வதி உள்படச் சிரித்தது நடேசன் காதில் விழுந்தது.

"இந்த வேளையில் அவனைப் பற்றிப் பேச்சு எதற்கு? அவன் எப்போது வேண்டுமானாலும் வரட்டும், அல்லது வராமலே போகட்டும்" என்ற அம்மாவுடைய குரல் கேட்டு, இடிந்தே போய் விட்டான் நடேசன்.

"சீ, தண்டச் சோறு சாப்பிடுபவன் என்று நினைத்து, நம்மைப் பற்றியே கவலைப் படாத வீட்டிலே......"

நடேசன் கதவைத் திறந்து கொண்டு வெளியே கிளம்பி விட்டான். உலகத்திலே அன்புடன் இருக்க வேண்டிய உடன் பிறந்தவர்கள் ஏசித் தீர்த்த பின்னர், மகனுக்குக் கையும் காலும் போய் ஒன்றுக்குமே உதவாத மாதிரி ஆகிவிட்டாலும் கூட அவனுக்கு ஆதரவு மொழி தரவேண்டிய தாய் கூடக் குத்திக் காட்டித் தன்னைக் கடு மொழிகளால் துரத்திய பின்னர், அங்கே இருப்பதா என்று விட்டு வாசற்படியை விட்டு வெளியேறினான் நடேசன்.

"அண்ணு, எங்கே கிளம்பி விட்டாய்?" என்றான் சீனு. உடனே ஓடிச் சென்று அவனை அணைத்துக் கொண்டான் நடேசன்.

"கண்ணே, நான் திரும்பி வராமல் ஒரேயடியாகப் போய்விட்டேன் என்று சொல்லடா."

அவன் சொன்னதன் பொருள் விளங்குவதற்குள் நடேசன் தெருக்கோடியில் மறைந்து போய் விட்டான்.

• • •

"அம்மா! நடேச அண்ணு எங்கேயோ வெளியே போகிறானம்மா......"

"எங்கே போனுலென்ன? டிபனைச் சாப்பிட்டு விட்டுத் தொலையக் கூடாதோ?"

இது சரஸ்வதியின் சலிப்பு.

"அம்மா, அண்ணு வந்து...வந்து நான் ஒரேயடியாப் போயிடறேன்னு சொல்லிவிட்டு வேகமாப் போயிட்டான்!"

"என்ன?"

எல்லோரும் அவன் சொன்னதைக் கேட்டுத் திகைத்துப் போய் விட்டார்கள்.

"என்னடா உளறுகிறாய்?"

"இல்லேம்மா......நான் கூப்பிடறத்துக்குள்ளே வேகமாகப் போய்விட்டான் அம்மா, நடேசண்ணு!"

சீனுவின் கண்களில் நீர் தேங்கியிருந்தது.

சங்கரன் விழுந்து விழுந்து சிரித்தான்.

"நன்றாகச் செய்தான் போ. இப்போது சாப்பிட்டால் கொஞ்சமாகத்தான் தருவான் அம்மா, அதனுல் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்று போயிருப்பான்......"

"உனக்குத் தெரியாது. அதுமாதிரி அண்ணு இருந்ததில்லே! முகமெல்லாம் வீங்கி..."

சரஸ்வதிக்கு வாயில் போட்ட ஜாங்கிரி கசந்தது. அடிவயிற்றில் சங்கடம் செய்தது. அதைப் போலச் சொல்லக் கூடியவன் அல்லவே நடேசன்.

ஒவ்வொருவரும் வெளியிலே 'அவன் திரும்பி வந்துவிடுவான்' என்று சொல்லிக் கொண்டாலும் அவர்கள் உள்ளத்திலே பயம் தோன்ற ஆரம்பித்து விட்டது. சங்கரன் கலகலப்பாகப் பேச முயன்றான்; முடியவில்லை.

இருட்டி விட்டது; மணி ஏழு.

எங்கு வெளியே போனாலும் சரி, இருட்டுவதற்குள் வீடு வந்து சேர்ந்து விடுவான் நடேசன். சரஸ்வதிக்கு உள்ளூறப் பீதி. வாசலில் பக்கத்தில் சீனுவை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டாள். கண்களை வீதி முனைவரை ஓட்டினாள். உள்ளேயும் ஒருவருக்கும் இருப்புக் கொள்ளவில்லை. "நான் ஒரேயடியாப் போயிடறேன்..." என்ற குரல் தான் எல்லோர் மனத்திலும் பேரொலி செய்தது. சங்கரன் வாசலுக்கும் உள்ளுக்குமாய் நடந்தான். லல்லியோ மாடியில் நின்று பார்த்துக் கொண்டிருந்தாள். கோபுவும் அடிக்கடி வாசலுக்கு வந்து பார்த்தான்.

ஊனும், நடேசனைக் காணவே காணோம். மணி எட்டு.

பட்டுவால் நடேசனைப்பற்றிய எண்ணத்தை எவ்வளவு முயன்றும் தடுத்து நிறுத்த முடிய



வில்லை. தன்னலம் கருதாது உழைக்கும் அவனை அவள் அன்புடன் நினைக்கும் நேரம் — மணி எட்டு. அதை நினைக்கும்போதே அவளுக்குப் புல்லரித்தது. தினந்தினம் பக்கத்துத் தெருவிலுள்ள பிள்ளையார் கோயிலுக்குப் போய் விபூதி வாங்கி வருவான். வந்தவுடன் அம்மாவிடமா முதலில் அதைக் கொடுப்பான்? இல்லை இல்லை. பின்னே சங்கரனிடமா? அதுவுமில்லை. நேரே ''பட்டு!'' என்று அழைத்துக் கொண்டே அவள் கையிலே விபூதி, குங்குமத்தைப் போட்டு விடுவான். ''அடுத்த வருஷம்......உன் மகனுக்கும் சேர்த்துக் கொண்டு வருவேன்......'' என்று நேற்றுக் கூடச் சொன்னபோது பட்டுவின் முகம் வெட்கத்தால் சிவந்து போயிற்று. ''போடா, போ அசடே!'' என்றுள் மனத்துக்குள் சிரித்துக் களித்துக் கொண்டே. நகர்ந்து விட்டான் நடேசன். அவனை அந்த நேரத்தில் நினைத்த போது மடங்கியிருந்த கரம் நீண்டது. ஆனால் குங்குமம் கொடுப்பதற்கு அவன்...இன்னும் திரும்பி வரவில்லை.

நடேசன் ஒருவருக்கும் தெரியாமல் பட்டுவுக்கு மசக்கை என்று நல்ல மாங்காய் ஒன்று வாங்கி மறைத்துக் கொண்டு வந்து கொடுப்பான். இவற்றை யெல்லாம் நினைத்துப் பார்த்தாள் பட்டு.

''அப்படித் தன்மீது அன்பைச் சொரிந்தவன்......வராமலே இருந்து விடுவானோ?''

தலை சுழன்றது. ''அம்மா!'' என்று கூப்பிட்டுக் கொண்டே அவளும் வாசலுக்குப் போய் உட்கார்ந்து கொண்டாள். இரண்டுடன் இரண்டாக நான்கு விழிகள் தெருவைக் கூர்ந்து நோக்கின.

மணி எட்டரை!

நடேசனை இன்னமும் காணோம்.

சரியாக எட்டரை மணிக்குத்தான் கோபுவுக்குச் சித்திரம் போட்டுத் தருவான் நடேசன். அந்தக் கால் மணியில் கோபுவின் கர்வமெல்லாம் அந்த அன்புத் தெய்வத்திடம் ஒடுங்கி விடும்

அந்த எட்டரை மணி—இதோ வந்து விட்டது. சித்திர நோட்டுப் புஸ்தகத்தைக் கூடத்தில் வைத்துக் கொண்டு 'அண்ணா!' என்று கூப்பிட்ட கோபு நாக்கைக் கடித்துக் கொண்டான். அண்ணா அங்கே இல்லாதது நெஞ்சில் உறைத்தது. ''நடேச அண்ணா ஒன்றுக்கும் உதவாதவனா? யார் சொன்னது? அவன் கை வண்ணம்......''

துக்கம் நெஞ்சை அடைத்தது. கண்ணாடியை உருக்கி ஊற்றினமாதிரி கண்கள் கண்ணீரால் நிரம்பி விட்டன. சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டான் கோபு. உடனே விடுவிடென்று அவனைத் தேடுவதற்கு வெளியே கிளம்பி விட்டான்.

* * *

அபாய அறிவிப்புப்போல ஒன்பது முறை ஒலித்தது சுவர்க் கடிகாரம். ஒன்பது முறையும் லக்ஷ்மிக்கு நெஞ்சமே தகர்ந்து போய் விட்டது. ''லக்ஷ்மி! ஊசியை எடுத்துக் கொண்டு வா......எம்ப்ராய்டரி சொல்லித் தருகிறேன்'' என்று நடேசன் கூப்பிடுவது போலப் பிரமை. ''அவன்தான் எவ்வளவு அழகாகப் பலவித பூக்கள் போடுவான்...... 'லக்ஷ்மி' என்று அன்புடன் கூப்பிடும் அழகுக்கு ஈடு ஏதும் இல்லையே......!''

இவ்வளவு நேரமாகக் கஷ்டப்பட்டு அவள் அடக்கி வைத்திருந்த உணர்ச்சி பெருவெள்ளமாகப் புரண்டது. 'சுண்காட்சிக்குப் போய் வா' என்று நடேசனுக்குக் கொடுத்த ரூபாயில் நடேசன் போகாமலேயே ஒரு மாலை வாங்கி அதை லக்ஷ்மிக்குக் கொடுத்தான் ஒரு மாதம் முன்பு. அதை அவளிடம் கொடுத்து விட்டு அவள் சந்தோஷமாக இரண்டு வார்த்தைகள் சொல்லித் தன்னைப் புகழ்வதைக் கேட்க வேண்டும் என்று கூட இல்லாமல் அவன் அகன்று விட்டான்.

''அந்த மாலை இன்னமும் என் கழுத்தில் இருக்கிறது......அதைப் போட்டவன்...நடேச அண்ணாவை இனி நான் பார்ப்பேனா?''

அவளுக்கு அதற்கு மேல் உள்ளே இருப்புக் கொள்ளவில்லை. ஓடோடி வாசலுக்கு விரைந்து வந்துவிட்டாள்.

* * *

மணி ஒன்பதரை ஆயிற்று.

புஸ்தகத்தை யெல்லாம் ஒழுங்கு செய்து கொண்டிருந்த சங்கரனின் நெஞ்சில் மணி ஒன்பதரை அடித்தவுடன் நடேசனின் நினைவு புகுந்து கொண்டது. 'கரெக்டா'க ஒன்பதரை மணி அடிக்கும்போது, சங்கரன் அறைக்கு வந்து அவனுக்குப் பால் கொண்டு வந்து கொடுப்பான் நடேசன்.

''நானே கொண்டு போய்த் தந்து விடுகிறேன் அம்மா. பாவம், அவன் படித்துக் கொண்டிருப்பான்...'' என்று அவன் அம்மாவிடம் சொல்வது சங்கரன் காதிலே விழும். அப்போது அவனது அன்பிலே ஒரு நிமிஷம் அப்படியே ஒன்றி விடுவான். அந்த ஒரு நிமிஷத்திலே அவனுடைய அலட்சிய மனோபாவம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய் விடும்.

''சங்கரன் படிக்கிறான். இரையாதீர்கள்'' என்று எல்லோரையும் கெஞ்சாத குறையாக வேண்டிக் கொள்வான் நடேசன்.

சங்கரன் நடேசனை விட இரண்டு வயது சின்னவன்.

ஒன்பதரை மணி நினைப்பூட்டிய நினைவு ஐந்து நிமிஷத்திலே விச்வரூபம் எடுத்து விட்டது. சங்கரன் சைக்கிளை எடுத்துக் கொண்டு அவனைத் தேட வெளியே கிளம்பி விட்டான்.

வீடு முழுவதும் அமைதி - பயங்கர அமைதி!

* * *

நீங்காத நெஞ்சச் சுமையைத் தாங்கி நீள நடந்தான் நடேசன். கருத்து ஓடஓடக் காலும் ஓடியது. திருவல்லிக்கேணியில் ஆரம்பித்த பிரயாணம் திருவான்மியூர் மட்டும் போய்க் கொண்டிருந்தது. முழங்கால் மட்டும்


அழகு மிகுந்த நீண்ட
அடர்ந்த கூந்தலுக்கு
பாமாலிவ்
பெர்ப்யூம்ட் கோகோனட் ஹேர் ஆயில்
PALMOLIVE
குடும்ப முழுவதிற்கும் மிக்க உகந்தது !
பெரிய எகானமி அளவு புட்டி
யினால் பணம் மிச்சமாகிறது!
மூன்று வித விருப்பான
வாசனைகளில் கிடைக்கும்.
லவண்டர்
மல்லிகை
ரோஜா


புலி
மார்க்கு
தேயிலை
TIGER
TEA
LIPTONS
வலிமைக்கு புலி
மார்க்கு தேயிலை
LIPTON (INDIA) LIMITED (Incorporated in England)
LTC-2 TM

புழுதி ஏறி விட்டது. வழிந்து வழிந்து வற்றி விட்டது விழி நீர். வாய் நீருக்கு ஏங்கியது, வயிறு உணவுக்கு ஏங்கியது. அடித்துத் தூரத்தி விட்டிருந்தாலும் கூட அவனுக்கு அவ்வளவு துக்கம் ஏற்பட்டிருக்காது. ஆனால் சொல்லடி பட்டது, நெஞ்சத்தைப் புண்ணாக்கித் தாங்கொணாத வேதனை தந்து கொண்டிருந்தது. உடல் அயர ஆரம்பித்தது. பசி வீறால் காதுகள் அடைத்துப் போயின; கண்கள் மயங்கிப் புரண்டன.

தூரத்தில் ஒரு பையன். சீனுவைப் போலவே சிரிப்பு! ஓடிப் போய்ப் பார்த்தான் நடேசன். சீனு இல்லை; வேறு எந்தக் குழந்தையோ?

"பாவம், சீனு...நான் இல்லாமல் தவித்து விடுவான்... என்னடா கண்ணு செய்வது, வீட்டிலே நான் இனிமேல் திருஷ்டிபைப்போல இருக்கலாமோ? அவர்களெல்லாம் படித்துப் பட்டம் பெற்று விடுவார்கள்; பெரிய உத்தியோகம் பார்ப்பார்கள். லல்லிக்கும் பெரிய இடத்திலே கல்யாணம் ஆகிவிடும். நான்... நான்...படிப்பும் ஏறுமல் அவர்களெல்லாம் அவமானச் சின்னம் என்று கருதும்படி உலவிக் கொண்டிருப்பேன். அதற்கு இப்படிச் செய்தது எவ்வளவோ மேல்!"

"கோபு மாத்திரம் என்ன, அவனைக் கவனித்துக் கேட்க யார் இருக்கிறார்கள்? 'புஸ்தகத்தை எடுத்துப் படிடா...' என்று நான் சொன்னேனானால் உடனே படிப்பானே, இனிமேல் யார் சொல்லப் போகிறார்களோ?"

இதை யெல்லாம் நினைத்துப் பார்த்தபோது அவனுக்குத் திரும்பி விடலாமா என்றே தோன்றியது. மணியோ இரவு ஒன்பது ஆகிவிட்டது.

"சீ! வீட்டுக்குத் திரும்புவதாவது...அம்மா சொன்ன வார்த்தைகள்......பட்டு கூறிய சொல்லம்புகள்..."

"பட்டு பாவம், பின்னைத்தாய்ச்சி. நான் மாங்காய் வாங்கிக் கொண்டுபோய்க் கொடுத்தால் ஆசையோடு சாப்பிடுவாள். அவளுக்குப் பத்திய மருந்துகளெல்லாம் தேடி வாங்கித் தர வேண்டுமே......இவர்களை யெல்லாம் யார்தான் பார்த்துக் கொள்ளப் போகிறார்களோ......சங்கரன் சரியாகவே சாப்பிட மாட்டான்... அம்மாவைத் தூண்டி அவனுக்கு நிறையப் பரிமாறச் சொல்ல வேண்டும்.... ஐயோ! இவர்களை யெல்லாம் பிரிவதற்கு வழி செய்து விட்டாயே, ஆண்டவனே......"

நடேசன் அவனுடைய அன்பு உள்ளத்தை வீட்டிலேயே விட்டு வந்துவிட்டான். ஆணவத்தையும், அகங்காரத்தையும், வெறுப்பையும் வென்று அவற்றை உடையவர்களிடம் பற்றுக் கொண்டிருந்தது அவன் உள்ளம்.

"இவர்களையெல்லாம் அம்மாவால் ஒண்டியாகப் பார்த்துக் கொள்ள முடியுமோ...?"

அம்மா!

அவளை நினைத்தபோது நடேசனுக்கு உடல் சிலிர்த்தது. அவள் உழைத்து உழைத்து ஓடாகப் போனவள். குழந்தைகள் கேட்டு இல்லை என்றும் வைக்க மாட்டாள்.

"ஐயோ! நான் இல்லாவிட்டால் அம்மா வல்லவோ காய்கறியெல்லாம் வாங்கி வர வேண்டும். ஏற்கெனவே பூஞ்சை உடம்பு. கால்வலி கால்வலி என்று சொல்லிக் கொண்டிருப்பாள். அவளைத் தனியாகத் தவிக்க விட்டு விட்டு...."



பத்திரிகை படிப்பவர் :— நம்ம பையன் 'சோம்பப் புத்தேரி' மனுஷனை வந்தவுடன் நிமிஷத்தில் அனந்துவிடுவான்!

'அம்மா அம்மா' என்று அவன் வாய் முணுமுணுத்தது.

"அவளை விட்டு விட்டு நான் எப்படி வந்தேன்......? காலிலே சேற்றுப் புண்ணுக்குக் கூட நான்தான் மருந்து போட வேண்டும்... நான் இல்லாவிட்டால் ஏங்கி இடிந்து செத்துப் போய் விடுவாளே அம்மா!"

"அம்மா, இன்றைக்கு, இன்று முதல் எனக்கு உன் கையால் சாப்பாடு இல்லை. எல்லோரும் சாப்பிட்ட பிறகு எனக்குப் பிசைந்து கையில் போடும் சாப்பாடு......அது எனக்கு இனி இல்லை......முடியாது. அதை என்னால் விட்டுவிட முடியாது. அந்த அமுதுதான் என்னை வாழ்விக்கும்."

கால்கள் வந்த வழியே திரும்பின.

தலை கிறு கிறுத்தது. கால்கள் பின்னிக் கொண்டன.

"அம்மா......" என்று ஓலமிட்டுச் சாய்ந்து கீழே விழுந்தான் நடேசன்.

*　　*　　*

மணி பத்து ஆகிவிட்டது.

சரஸ்வதியால் வேதனை தாளமுடியவில்லை.

சங்கரனும், கோபுவும் ஊரெல்லாம் சுற்றி அலைந்தார்கள். சங்கரன் தொங்கிய முகத்துடன் வீடு நுழைந்தது கண்ட சரஸ்வதிக்குப் பொறி கலங்கிப் போய்விட்டது.

"நடேசன் அகப்பட வில்லையா? நான் போகிறேன். எப்பாடு பட்டாவது கண்டு பிடித்து என் கையால் அவனுக்குச் சோறு ஊட்டுகிறேன்" என்று வெறி பிடித்தவள் போலக் கிளம்பி விட்டாள் சரஸ்வதி. அவள் இரண்டு அடி எடுத்து வைப்பதற்குள் வாசலில் கார் ஒன்று வந்து நின்றது. காரிலிருந்து இருவர் மெதுவாக நடேசனைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு வந்தனர்.

"நடேச அண்ணா!" என்று ஏககாலத்தில் சகோதர பாசம் பல வித குரல்களில் கூவியது.

"என் கண்ணே! வயிற்றில் பாலை வார்த்தாயே..." என்று மகிழ்ச்சி நீர் பெருகக் கூவினாள் பெற்றவள்.

"அடையாற்றுக்கருகில் மயங்கி விழுந்து விட்டார். மயக்கம் தெளிந்தவுடன் விலாசத்தைச் சொன்னார்" என்றார் வந்தவர்.

நினைவு வந்த நடேசன் அம்மாவைப் பார்த்துத் தள்ளாடித் தள்ளாடி ஓடினான்.

"அம்மா!"

"என் கண்ணே!"

பெற்ற தாயும் மகனும் ஒருவரையொருவர் ஆதரவுடனக் கட்டிக் கொண்டனர். அன்பும் பாசமும் கூடிநின்ற அந்தப் பிரும்மாண்டமான ஒளியிலே வல்லியினுடைய அகம்பாவமும், சங்கரனுடைய அலட்சியமும் பட்டுவினுடைய வெறுப்பும்; மழுங்கிச் சக்தியற்றுப் போய் விட்டன.

"அம்மா! ஒரேயடியாகப் போகத்தான் நினைத்தேன் அம்மா. மனசாகவில்லை. உன் கையால் சாப்பிட வேண்டுமென்று திரும்பி விட்டேனம்மா. சங்கரா, வல்லி, பட்டு! நீங்கள் என்ன சொன்னாலும் சரி, அடித்தால் கூடச் சரி. உங்களை விட்டு என்னால் பிரிந்திருக்க முடியாது........" என்று அழுது கொண்டே சொன்னான் நடேசன்.

கூடப் பிறந்தவர்கள் "அப்படிச் சொல்லாதீர்கள், அண்ணா!" என்று நெஞ்சில் துக்கம் அடைக்கக் கூறினார்கள்.

உலகத்திலே சூதும் வாதும், போட்டியும் பொறாமையும், வஞ்சகமும் வெறுப்பும் பெரும் அளவுக்கு மலிந்துபோயுங்கூட, மனித இதயத்திலே சிறிதளவேனும் இடம் பெற்று மனித வர்க்கத்தையே வாழ வைக்கின்ற அன்பு என்ற ஒரே தத்துவம் அப்போது அந்த இடத்திலே எல்லோரையும் ஆட்கொண்டிருந்தது. 'அன்பின் வழியது உயிர்நிலை அன்றோ!' என்பது எவ்வளவு உண்மை?

# படித்துப் பாருங்கள்

## ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரம்

மானஸோல்லாஸம்

ஆதி சங்கரர் ஸ்தாபித்த அத்வைத சித்தாந்தத்தின் தத்துவங்களை அவருடைய பாஷ்யங்களிலிருந்தும், அவர் இயற்றிய பிரகரண கிரந்தங்களிலிருந்தும் கற்றுப் பயனடையப் போதிய அவகாசம் இல்லாத ஆன்மிகர்களுக்கு, ஸ்தோத்திர வாயிலாக இயற்றப்பட்ட ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம் இன்றியமையாததாகும்.

அத்வைத முதல் நூல்களில் தத்துவங்கள் எவ்வாறு விளக்கப்பட்டிருக்கின்றனவோ அவ்வாறே சுருக்கமாக இப் பத்து சுலோகங்களிலும் கூறப்பட்டுள்ளன. இதற்கு உரை செய்த பெரியார் ஆதிசங்கரரின் முக்கிய சீடர் மண்டனமிச்ரர் என்ற சுரேச்வராசாரியார். அவர் எழுதியுள்ள உரை அத்வைத சித்தாந்தத்தையே பிழிந்து தருகிறது. உண்மையிலேயே, இவை மானஸ "உல்லாச"ந்தான்.

இவ்வரிய கிரந்தம் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளின் ஆக்ஞைப்படித் துவக்கப்பட்ட காமகோடி கோச ஸ்தானத்தின் 37-வது வெளியீடாக முதல் பதிப்பு வெளி வந்தது. அதன் மறு பதிப்பு இப்போது வெளியிடப்பட்டுள்ளது. ஆசாரிய சுவாமிகளின் ஸ்ரீமுகத்துடன், ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சொரூபத்தைப் பற்றி ஒரு குறிப்பும், அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. ஸ்ரீ ஆச்சார்ய சுவாமிகளின் உபதேச மொழியும் வாக்கியவிருத்தி என்ற குரு—சிஷ்ய ஸம்வாத ரூபமாக அமைந்துள்ள குறிப்பும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

ஸ்தோத்திரம் ஞானமூர்த்தியைப் பற்றியது. அருளியவர் லோக குரு. விளக்கவுரை செய்திருப்பவர் அவரது சீடர். உலகுக்குப் பயன்படும் முறையில் அளிக்க ஆக்ஞாபித்தவர் நடமாடும் தெய்வம். இப்புத்தகத்தின் சிறப்புக்கு வேறு என்ன வேண்டும்?

கிடைக்குமிடம்: ஸ்ரீ காமகோடி கோச ஸ்தானம், 4, பிரான்சிஸ் ஜோசப்புத் தெரு, சென்னை—1. விலை: ரூ.1-75.

## ஆத்மஜோதி விசேட மலர்

விஞ்ஞான வித்தைகளும் யந்திர வகைகளும் ஆதிக்கம் செலுத்திவரும் நவீன உலகில், இலங்கை நாவலப் பிட்டியிலிருந்து வெளியாகும் "ஆத்ம ஜோதி" என்ற பத்திரிகை ஆத்மீகக் கொள்கைகளைப் பரப்பும் கைங்கர்யத்தில் ஈடுபட்டிருப்பது மிகவும் பாராட்டத் தக்கதாகும். அத் துறையில் சென்ற பத்து ஆண்டுகளாகத் தொண்டு புரிந்து வரும் "ஆத்ம ஜோதி"யின் விசேட மலர் இந்த ஆண்டில் வெளியாகியிருக்கிறது. இந்த மலரில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் அருள்வாக்குகள் இடம் பெற்றிருக்கின்றன. மற்றும் சுத்தானந்த பாரதி, ஸ்ரீ கிருபானந்தவாரி, ஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள், பண்டித மணி சி. கணபதிப் பிள்ளை, கலாநிதி வி. பொன்னையா, ஸ்ரீ முருகதாசர் முதலிய ஏராளமான பக்த சிகாமணிகளின் ஆத்மார்த்த விளக்கக் கட்டுரைகள் மலருக்குத் தனிச் சிறப்பை அளிப்பதாக இருக்கின்றன. இவற்றைத் தவிர மேற்படி மலரில் அடங்கியுள்ள விவேகானந்தரின் பொன்மொழிகள், ஜோதி இராமலிங்க சுவாமிகளின் அருள் விளக்கமாலை இவை போன்ற மகான்களின் உபதேசங்கள் ஆத்மீகத் துறையை நாடி இன்பம் பெற விரும்புவோருக்கு வழிகாட்டும் அருந்தீபமாக விளங்குகின்றன.

கிடைக்குமிடம்: 'ஆத்ம ஜோதி' நிலையம், நாவலப்பிட்டி, இலங்கை.

## பாரதி (மகாநாட்டு மலர்)

தமிழ் எழுத்தாளர் சங்கத்தார் ஆறாவது ஆண்டு மகாநாடு கொண்டாடும் தருணத்தில் இத்தனிசேஷ மலரை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த மலரில் பல அறிஞர்களும், பேராசிரியர்களும், எழுத்தாளர்களும் எழுதிய கட்டுரைகள் இடம் பெற்றிருக்கின்றன.

பிரசுரம்: தமிழ் எழுத்தாளர் சங்கம், சென்னை—2

என் மனைவி மிகுந்த
சுவையுள்ள

தித்திப்புகளைத்
தயாரிக்கிறாள் !



# துஷார்

வைடமின் நிறைந்த வனஸ்பதி



துஷார் வனஸ்பதி சமையலுக்கு ஏற்ற சாதனம் மட்டுமல்ல. இதில் ஏ, டி. வைடமின் சத்துக்கள் நிறைந்து, சமையலின் ருசியையும் வாசனையை ஊட்டமளிக்கும் சக்தியையும் அதிகரிக்கச் செய்கின்றன.

துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிட், கர்நூல்

TI-2/54



LICHENSA
படை சிரங்கு
முதலிய சர்ம வியாதிகளுக்கு
லிச்சென்ஸா
உபயோகியுங்கள்
ஜெர்மனியில் தயாரிக்கப்பட்டது
எங்கும் கிடைக்கும்
ஸிலோன் டிஸ்ட்ரிபியூட்டர்கள் :
மகாராஜா டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் லிமிடெட்
54, பேங்க்ஷல் தெரு, கொழும்பு




ஸுலேகா
பிரீப்மென்
இன்றைய
மிகவும்
நம்பகமான
பேனாக்கள்
Sole Distributors :
PENMEN'S INDUSTRIAL SERVICES
Kandivli, Bombay (S. D.)




HEWLETT'S MIXTURE
ஹியூலெட் மிக்சர்
அபினி சேர்த்தும் அல்லாமலும் நான்கு அவுன்ஸ், பத்து அவுன்ஸ் அளவு கொண்ட பாட்டில்களில் கிடைக்கும்.
சாப்பாட்டிற்குப் பிறகு, ஒரு டீஸ்பூன் அளவு ஹியூலெட் மிக்சரை கொஞ்சம் தண்ணீருடன் கலந்து உட்கொண்டால் இலகுவில் ஜீரணமாக உதவி செய்கிறது.
ஸி.ஜே.ஹியூலெட் & சன் (இந்தியா) பிரைவேட்,லிட்., சென்னை-3

# கஞ்சனாக் காளை

வல்லம் கிருஷ்ணமூர்த்தி



"ராதாபுரம் சந்தை இன்றைக்குத்தானே அண்ணே?"

"ஆமாம்...."

"நீ போவணும்னு சொல்லிக்கிட்டு இருந்தியே!"

"ஹூம் .....!"

"பின்னே போவலியா?"

"............!"

"பொழுது ஏறுதே!"

"ஏறட்டும்."

"என்ன அண்ணே இது? நீ இப்படித் திண்ணையிலே வந்து குந்திக்கிட்டு இருந்தால் கபிலைக்கு மாடு தானாகவே வருமா?"

"சந்தையிலே என் மச்சானு மாடு வைச்சுக்கிட்டு இருக்கான், போனதும் ஒண்ணு இழுத்து வர...!"

"கழனியிலே பயிரெல்லாம் சருகாக் காயுது. நீ என்னடான்னு இப்படி இடக்குத்தனமா பேசிக்கிட்டு இருக்கே...!"

"என்னை இப்ப என்ன செய்யச் சொல்லுறே, அஞ்சலை?"

"ஒரு மாடு செத்துடுச்சுன்னு, அதோடு குடிகா முழுகிப் போயிடுச்சா?"

"இப்படியே இன்னும் பத்து நாளைக்கு வானம் காய்ந்தால் பிறகு குடிமுழுகாமே என்ன செய்யும்?"

"உனக்கு மட்டும்தானா வானம் காயுது? ஊரே மழையில்லாமே கருகிக்கிட்டுத்தானேயிருக்கு. சமுத்திரம்மாதிரி கேணியை வைச்சுக்கிட்டு எதுக்குத்தான் இப்படி அழுவுறியோ?"

"கிணறு இருந்துட்டா மட்டும் போதாது. அதிருஷ்டமும் வேணும்."

"குந்திக்கிட்டு இருந்தால் அதிர்ஷ்டம் வந்து குதிக்குமாக்கும்? கூழைக் குடித்துவிட்டுக் கிளம்பு, அண்ணே?"

"என்ன தங்கச்சி கேலி பண்ணுறே! வெறும் ஆளு சந்தைக்குப் போய் என்ன செய்வது?"

"வெறும் ஆளாகவா போகச் சொல்லுறேன்! வையத்தோடுதான்...!"

"அது இருந்தால் இவ்வளவு நேரம் இங்கேயா இருப்பேன்!"

"ஒரு மாடு தானே வாங்கணும்?"

"ஆமாம்! ஒத்தைக்கு ஒத்தைதான் வேணும்!"

"எவ்வளவு ரூபாய் ஆகும்?"

"முந்நூறுக்கு மேலே ஆகுமே!"

"ஒரு மாட்டுக்கா முந்நூறு...!"

"அதுக்குக் குறைந்தால் சப்பை மாடுதான் கிடைக்கும். உழவுக்கு மட்டுமென்றால் சப்பையே போதும். நான் முழுவதும் கபிலையில் கட்டி ஓட்ட வேண்டுமே!"

"எவ்வளவானாலும் இப்ப வாங்கித்தானே ஆகணும்!"

"ஆமா! சந்தையிலே மாட்டைக் கடனுக்குக் கொடுக்க மாட்டாங்களே...!"

"உன்னை யாரு இப்போது கடனுக்கு வாங்கி வரச் சொன்னாங்க? வீட்டிலே இருக்கிறதை எடுத்துக்கிட்டுப் போயேன்!"

"வீட்டிலேயா! ஏது பணம்?"

"அந்த ரூவா முந்நூறைத் தான் சொல்லுறேன்!"

"என்ன சொன்னே? அதிலேயா கையை வைக்கச் சொல்லுறே?"

"வைத்தால் என்ன, அண்ணே?"

"நல்லாச் சொன்னே, போ! அஞ்சு வருஷமா உன் கல்யாணத்துக்காகச் சேர்த்துக்கிட்டு வருகிற பணத்தை எடுத்து மாடு வாங்கவா சொல்லுறே?"

"வாங்கினால் என்னவாம்? இப்போது கல்யாணம் முக்கியமா? காயும் பயிரைக் காப்பது முக்கியமா?"

"ஒவ்வொரு ஆண்டும் இப்படித்தான் ஏதாவது தண்டச் செலவு வந்துக்கிட்டேயிருக்கு. அதுக்காக..."

"கபிலைக்கு மாடு வாங்குவது தண்டச் செலவா, அண்ணே!"

"போன வருஷமும் இப்படித்தான் சொன்னே, முதல்லே கிணறு வெட்டு. கல்யாணத்தை அப்புறம் பார்த்துக்கலாம்னு. அதற்கு முன் ஆண்டிலேயும், 'அமோனியாவும், பிண்ணாக்கும் வாங்கிப் பயிருக்குத் தீனி வை'ன்னு சொல்லிப் பணத்தை எடுத்துக் கொடுத்துட்டே. இப்படியே போனால் உன்னைக் கட்டிக் கொடுக்கிறது எப்போ?"

தங்கைக்கு இந்த வருடம் திருமணம் செய்வதாயிருந்தால் மாடு வாங்க முடியாது. மாடு வாங்கினால் கல்யாணம் நின்று போகும். இரண்டில் எது முக்கியம்? இரண்டுமே முக்கியமானவைதான்.

அஞ்சலை சின்னக் குழந்தையல்ல, கல்யாணத்தைத் தள்ளிப் போட.

தை பிறக்கட்டும், சித்திரையில் பார்க்கலாம், வருகிற ஆனியில் ஆவணிக் கடைசியில் என்று எத்தனையோ தை, சித்திரை, ஆனி, ஆவணி மாதங்கள் நழுவி விட்டன.

இனிமேல் அவளை வீட்டில் வைத்துக் கொண்டிருப்பது நியாயமல்ல.

எது எப்படியானாலும் இந்த ஆண்டில் அவளை யார் கழுத்திலாவது கட்டிவிட வேண்டும் என்றுதான் பணத்தைச் சேர்த்து வைத்திருந்தான் முத்துசாமி.

அவனுடைய போதாத காலமோ அல்லது அஞ்சலைக்குத்தான் அதிருஷ்டமில்லையோ, கபிலை மாடுகளில் ஒன்று திடீரென்று நோய் கண்டு செத்து விட்டது.

அறுவடைக்குத் தயாராகிக் கொண்டிருக்கும் இரண்டுகாணி நெல்லும், அரைக் காணிக் கரும்பும் பாசனமின்றிக் கருக ஆரம்பித்து விட்டன. இன்னும் இரண்டு நாட்களில் தண்ணீர் இறைக்கா விட்டால் நெற்பயிர் வைக்கோலாகிவிடும்; கரும்பு விறகாகிவிடும். அந்த மாசூலை நம்பியிருக்கும் முத்துசாமியும், அவன் குடும்பமும் என்ன ஆவது?

மாடு வாங்க வேண்டியது மிக மிக அவசியம் என்பதை அவன் உணராமலில்லை. இருந்தாலும் அருமைத் தங்கையின் கல்யாணச் செலவுக்காக வென்றே சேர்த்து வைத்திருக்கும் பணத்தை — பவித்திர நிதியை — எப்படித் தீண்டுவது?

சிறுவயதிலேயே தாயையும், தந்தையையும் இழந்து நின்ற முத்துசாமியின் தோள்களில் குடும்ப பாரத்தோடு தந்தை பட்ட கடனும் ஏறி அழுத்தத் தொடங்கி விட்டது.



மனைவி : நம்ம பையன் சினிமாப் புஸ்தகத்தைப் படிக்காமல் இருப்பதற்கு ஏதாவது ஒரு வழி சொல்லுங்களேன்!
கணவன் — சினிமாப் புஸ்தகத்தை எல்லாம், பாடப் புஸ்தகமாக வைத்து விட்டால் அப்புறம் அவன் அதைத் தொடவே மாட்டான்!

தங்கையும் அண்ணனும் தங்களைத் தாங்களே தேற்றிக் கொண்டு பாடுபட்டார்கள். இரவென்றும் பகலென்றும் பாராமல் முத்துசாமி உழைத்தான். நிலங்களில் பயிர் ஏற்றினான். அதைப் பணமாக்கித் தன் தந்தை பட்ட கடனைச் சிறுகச் சிறுக அடைக்கத் தொடங்கினான்.

கடன் சுமையை மெதுவாக இறக்கி விட்டு, தலை நிமிருவதற்குள் பல ஆண்டுகள் கடந்து விட்டன. அஞ்சலையும் வளர்ந்து விட்டாள்.

இனிமேல் கடன் தொல்லை கிடையாது. வீட்டுச் செலவு போக மீதமாகும் பணத்தைக் கொண்டு அவளுக்குக் கல்யாணம் செய்து விடலாம் என்று நினைத்தபொழுது பாசனக் கிணறு படுத்துக் கொண்டு விட்டது. அதைச் சரி செய்ய மறுபடியும் கடன் வாங்க வேண்டியதாயிற்று. அடுத்த ஆண்டில் பருவ மழையில்லாமல் பயிர்கள் காய்ந்துவிட்டன. என்னதான் கிணற்றிலிருந்து நீர் இறைத்தாலும் மழை யில்லாவிட்டால் முடியுமா? பயிர்களுக்கு மழைதானே தாய்ப் பாலைப் போன்றது!

எப்படியோ பத்தும் இருபதுமாக ஒதுக்கி அஞ்சலையின் கல்யாணத்துக்காக முந்நூறு ரூபாய்களைச் சேர்த்து விட்டான். ஆனால், இப்பொழுது?......திடீரென்று கபிலை மாடுகளில் ஒன்று செத்துப் போய்விட்டது. பெய்ய வேண்டிய மழையும் ஒரேயடியாகச் சதி செய்து கொண்டிருக்கிறது.

மாடு வாங்கிக் கபிலையில் பூட்டித் தண்ணீர் இறைக்கா விட்டால், இந்த வருடம் நிலத்திலிருந்து எந்தவித மாசூலையும் எதிர்பார்க்க முடியாது! என்ன செய்வது?

* * *

தும்பூரிலிருந்து ராதாபுரம் சந்தை கூடும் மைதானத்துக்கு வரும் வரையில் முத்துசாமியின் மனம் குழம்பிக்கொண்டே தானிருந்தது.

'மாடு வாங்கலாமா? அல்லது பணத்தோடு அப்படியே திரும்பிவிடலாமா?' என்று தன்னைத் தானே அவன் ஆயிரம் தடவைகள் கேட்டுக் கொண்டான்.

ஆனால்! கஞ்சனூர்க் காளையைக் கண்டதும் அவன் மனம் ஒரு நிலைப்பட்டுவிட்டது. காளையின் வாளிப்பான உடல் அமைப்பும் கொம்புகளும், சுழி சுத்தமும் அவனைக் கவர்ந்து விட்டன.

முத்துசாமி முந்நூறு ரூபாய் கொடுத்து, மாட்டைப் பிடித்துக் கொண்டு தும்பூர் வருவதற்குள் பொழுது நன்றாக இருட்டிக் கொண்டு விட்டது.

புதுக்காளையைக் கண்டதும் அஞ்சலை மட்டற்ற மகிழ்ச்சி கொண்டாள். ''நம்ம ஒத்தைக்கு ஏற்ற ஜோடிதான், அண்ணே!'' என்று குதூகலத்தோடு அதை வரவேற்றாள்.

பிறகு அதற்கு நிறையத் தீனி வைத்து, தண்ணீர் காட்டிக் கொட்டிலில் கட்டி வைத்தாள் அஞ்சலை.

மறுநாள் காலை தொழுவத்துக்குச் சென்ற அஞ்சலை திடுக்கிட்டாள்.

கட்டியிருந்த கஞ்சனூர்க் காளையைக் காணவில்லை. கொட்டிலில் பழைய மாடு மட்டும்தான் அசை போட்டுக் கொண்டிருந்தது.

முதல் நாளிரவு படுக்கப் போகுமுன்கூட ஒரு தரம் முத்துசாமியும், அஞ்சலையும் வந்து அதைப் பார்த்துவிட்டுத்தான் போனார்கள். விடிவதற்குள் அதைக் காணவில்லை. மாட்டைக் கட்டியிருந்த தும்பு அறுந்து கிடந்தது.

அஞ்சலை கத்தினாள்! அவள் அலறலைக் கேட்டு முத்துசாமி வேகமாக ஓடி வந்தான். ஊரும் கூடியது.

"மாட்டைக் காணவில்லை!"

"நேற்றுத்தானே வாங்கியது...... அதற்குள்?"

"மூந்நூறு ரூபாய்களைக் கொட்டிப் பிடித்து வந்தானே!"

"யாராவது அவிழ்த்துக் கொண்டு போயிருப்பார்களா?"

"இருக்காது! ஒருவேளை தானே கயிற்றை அறுத்துக் கொண்டு போய் இருக்கும்!"

"இங்கேதான் எங்கேயாவது மேய்ந்து கொண்டிருக்கும்."

"தேடினால் கிடைத்து விடும்!"

பலர் பலவிதமாகப் பேசினார்கள். சற்று நேரத்தில் மூலைக்கொருவராய் மாட்டைத் தேடிக் கொண்டு போனார்கள். முத்துசாமியும் பரபரப்புடன் அதைத் தேட ஓடினான்!

அஞ்சலைக்கு ஒன்றுமே ஓடவில்லை. கல்லாய்ச் சமைந்து நின்றாள். அவளுடைய கண்களில் நீர் கசிந்து கொண்டிருந்தது

பொழுது பறந்தது!

அன்று மாலை வரையில் காளையைப் பற்றிய தகவலே தெரியவில்லை. அதைத் தேடிப் போனவர்கள் எல்லோரும் வெறுங் கையோடு திரும்பி விட்டார்கள் ஆனால் முத்துசாமி மட்டும் இன்னும் வீடு திரும்பவில்லை. அதைத் தேடித் தேடி எங்கெல்லாம் அலைந்து கொண்டிருக்கிறானோ!

விளக்கு வைக்கும் நேரம் கடந்தது கூடத் தெரியாமல் இருளோடு இருளாக அசைவற்றுப் பதுமையாக உட்கார்ந்து கொண்டிருந்தாள் அஞ்சலை.

"அம்மா...!"

குரல் மாட்டினுடையதுதான்!

அஞ்சலையின் உடல் ஒரு குலுங்கு குலுங்கியது. வாரிச் சுருட்டிக் கொண்டு வாசலுக்கு ஓடி வந்தாள்.

வீதியில் முன்னிருட்டு கண்களைக் கரித்தது. இருந்தாலும் சற்றுத் தொலைவில் ஒரு மாடு நிற்பது மங்கலாகத் தெரிந்தது.

கண்களை நன்றாகக் கசக்கிக் கொண்டு உற்றுப் பார்த்தாள் அஞ்சலை. 'சந்தேகமில்லை. கஞ்சனூர்க் காளைதான் நிற்கிறது. எப்படி வந்தது? யார் கொண்டு வந்தார்கள்?

அஞ்சலையின் நெஞ்சில் ஆனந்தம் கல்லாய் அடைத்துக் கொண்டது. ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து காளையின் கழுத்தைக் கட்டிக் கொண்டு குழந்தையைப்போல் தொங்கினாள்.

"மாடு உங்களுடையதுதானே?"

இதுகாறும் மாட்டின் தும்பைப் பிடித்துக் கொண்டு அஞ்சலையின் குழந்தைத்தனமான குதிப்புக்களைப் பார்த்து ரசித்தவண்ணம் நின்றிருந்த மனிதன் கேட்டான்.



அஞ்சலைக்குத் தூக்கிவாரிப் போட்டது. இது வரையில் தன்னருகே ஒரு அன்னியன் நின்று கொண்டிருக்கிறான் என்பதை அவள் கவனிக்கவேயில்லை. காணாமற் போன மாடு கிடைத்து விட்டதே என்ற மகிழ்ச்சியும், முன்னிருட்டும் அவள் கண்களை மறைத்துவிட்டிருந்தன.

இருளில் நின்று கொண்டிருக்கும் மனிதனின் முகம் சரியாகத் தெரியாவிட்டாலும் அவன் உள்ளூர்வாசியல்ல என்பதை உணர்ந்து கொண்டாள் அஞ்சலை.

"நீங்க யாரு?"

"வீட்டிலே ஆண்-பிள்ளைகள் யாரும் இல்லையா?" என்று கேட்டான்.

"இல்லே!"

"எங்கே போயிருக்காங்க?"

"இந்த மாட்டைத் தேடிக் கொண்டுதான் அண்ணன் வெளியே போயிருக்கிறாரு! நீங்க எந்த ஊரு?"

"கஞ்சனூர்!"

"கஞ்சனூரா? இந்த மாடுகூட அந்த ஊர் மாடுதான்னு அண்ணன் சொல்லிச்சே!"

"ஆமாம்! எங்க மாடுதான்! நேற்று சந்தையிலே எங்க ஐயாதான் இதை உங்க அண்ணனுக்கு வித்தாரு!"

"இப்போ எங்கே வந்தீங்க?"

"இதைப் பிடித்துக் கொண்டு வந்தேன்!"

"என்ன கஞ்சனூரிலிருந்தா வர்றீங்க? அவ்வளவு தூரமா இது வந்திடுச்சு?"

"ஆமாம். மாட்டை எங்கே கட்ட?"

வந்தவன் அவசரப்பட்டான்.

அஞ்சலைக்கு என்னவோ போலிருந்தது.

விற்ற மாடு வீட்டுக்குத் திரும்பி விட்டது. வாங்கினவன் தேடிக் கொண்டு வந்தால் பார்த்துக் கொள்ளலாம் என்று சும்மா இருக்காமல், எத்தனை பொறுப்போடும், நாணயத்தோடும்தான் பிரியமாக வளர்த்த மாட்டைத் திருப்பியோட்டிக்கொண்டுவந்திருக்கிறான்! அந்த

நல்ல மனிதனை அப்படியே விடை கொடுத்து அனுப்புவது நியாயமில்லை என்று தீர்மானித்துக் கொண்ட அஞ்சலை, "சரி! மாட்டை அந்தக் கம்பத்திலே கட்டிவிட்டு இப்படித் திண்ணையிலே வந்து சற்றுக் குந்துங்க. அண்ணன் வந்ததும் பார்த்து விட்டுப் போகலாம்...!" என்று கூறிக்கொண்டே உள்ளே நுழைந்தாள்.

சிறிது நேரத்தில் முத்துசாமி வந்தான். கஞ்சனூர்த் தம்பியைக் கட்டிக் கொண்டு குதித்தான். களையிழந்திருந்த வீடு கலகலக்கத் தொடங்கியது.

"நான் போய் வரேன், அண்ணே!" என்று கிளம்பினான் கஞ்சனூர்த் தம்பி.

"நல்லாயிருக்குது !" என்ற குரல் கொடுத்துக்கொண்டே அஞ்சலை ஓடிவந்தாள்.

"அதுதான் இங்கே நடக்காது தம்பி! சாப்பிட்டு விட்டுத்தான் போகணும்!" என்று வழியை மறித்துக்கொண்டான் முத்துசாமி.

கஞ்சனூர்த் தம்பிக்கு வயிறு புடைக்க விருந்து வைத்தாள் அஞ்சலை. கஞ்சனூர்த் தம்பியின் கண்கள் அஞ்சலையைச் சுற்றி சுற்றி வட்டமிட்டன. என்றைக்குமே நிமிர்ந்து நிற்கும் அஞ்சலையின் தலை இன்றைக்கு ஏன் இப்படிக் கவிழ்ந்து கொண்டிருக்கிறது என்று தெரியாமல் திண்டாடினான் முத்துசாமி.

கஞ்சனூர்த் தம்பி மெதுவாகப் பேச்சைத் தொடங்கினான்.

"எனக்கு இந்தக் காளையை விற்கவே மனமில்லீங்க! எங்க ஆயாவும், ஐயாவும் சேர்ந்துக்கிட்டு நான் ஊரில் இல்லாத நேரமாகப் பார்த்து விற்றுவிட்டாங்க!"

"ஏன்?"

"நான் இருந்தால் விடமாட்டேன்னு தெரிஞ்சுக்கிட்டு...!"

"எதற்காக விற்றாங்க?"

"போனவாரம் கருங்காலிப்பட்டுக்குப் போய் வந்தாங்க. அதிலேயிருந்து ஒரேயடியா என்னைத் துளைக்க எடுத்துட்டாங்க!" என்றான் கஞ்சனூர்த் தம்பி.

"என்ன தம்பி! நீ சொல்வது ஒன்றும் புரியல்லியே?"

"வீட்டுக்கு ஒரு லட்சுமி வரணுமாம்! அதுக்காக இதை விற்பதற்குத் துணிந்து விட்டாங்க!"

"ஓஹோ! உனக்குக் கருங்காலிப்பட்டில் பெண் பார்த்திருக்காங்களா? அதற்காக மாட்டை விற்பானேன்?"

"கல்யாணச் செலவுக்குக் காசு வேணுங்களா?" என்றான் அவன்.

"சரிதான்! நான் கல்யாணத்துக்காகச் சேர்த்து வைத்திருந்த காசைக் கொடுத்துத் தான் உங்க ஐயா மாட்டை வாங்கினேன். உங்க ஐயா மாட்டை விற்று விட்டு உனக்குக் கல்யாணம் செய்யப் போறாரு! நல்ல பொருத்தம்தான் !"

"எனக்கு இதிலே இஷ்டமே யில்லீங்க. எங்க ஆயாதான் ஒரே பிடிவாதமா இந்த ஆண்டு கல்யாணம் கட்டிக்கிட்டாத்தான் ஆச்சுன்னு ஆகாத்தியம் பண்ணிப்பிட்டாங்க !"

''நானும்தான் மாடு இப்ப வாங்கவேண்டாம், கல்யாணத்தை முடித்துவிட ணும்னு பார்த்தேன், முடியல்லே!''

''சன்னுக்குக்கன்னுய் வளர்த்த காளையை விற்று, கல்யாணம் எதற்குங்க? அதனாலே இல்லேக்குக் காலையிலே நான் ஊரிலிருந்து வந்ததும் எங்க ஐயாகிட்டே சண்டை பிடித்தேன். எந்த ஊர் ஆளு மாட்டை வாங்கினான்னு விசாரிக்கவிட்டு இருக்கிறப்போதான், மாப்ட வீடுதேடி வந்திடுச்சு. வந்ததை அப்படியே கட்டிப்போட்டு விடலாம்னுதான் நினைத்தேன். இருந்தாலும் அது நியாயம் ஆகுங்களா?''

''அப்போ மாட்டைத் திருப்பி ஓட்டிக் கொள்ளப் போகிறாயா, தம்பி?''

''அந்த யோசனையோடுதான், பணத்தோடு வந்தேன். ஆனால்...!''

''ஆனால் என்ன?''

''அது இங்கேயே இருக்கட்டும்னு நீர் மானிச்சு விட்டேன்.''

''ஏன் அப்படி?''

''எங்கேயிருந்தால் என்னங்க? எல்லாம் ஒண்ணுதான்!''

''என்ன தம்பி சொல்றே...?''

''ஒண்ணும் இல்லீங்க!''

முத்துசாமி ஆச்சரியத்தோடு கஞ்சனூர்த் தம்பியின் முகத்தை நோக்கினான். அவன் அஞ்சலையை வைத்த கண் வாங்காது ஆவலோடு நோக்கிக்கொண்டிருந்தான். அஞ்சலையின் பேரழகு அவனை அவ்வளவு தூரம் கவர்ந்து விட்டது.

அந்தத் தம்பியின் முகத்தையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கும் தன் தங்கை அஞ்சலையையும் பார்த்தான்.

விவரம் விளங்கி விட்டது.

கஞ்சனூர்த்தம்பி வீட்டுக்குள் நுழையும் பொழுதே அஞ்சலையின் உள்ளத்திலும் நுழைந்து கொண்டு விட்டான் என்பதை அறிந்து கொண்ட முத்துசாமி, ''அப்போ நாளைக்கு என்னைக் கஞ்சனூர் வந்து உன் ஆயாளையும், ஐயாளையும் பார்த்துப் பேசச் சொல்றியா, தம்பி?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டான்.

''எதற்கு அண்ணே?''


''காளை விஷயமாகத்தான்...!''

''எந்தக் காளை விஷயமாக...?'' வாய் தவறிக்கேட்டு விட்டுப் பரபரவென்று விழித்தான் கஞ்சனூர்த் தம்பி.

''அதை அஞ்சலைதான் சொல்லணும்!'' என்று கூறிக்கொண்டே அர்த்த புஷ்டியுடன் தன் தங்கையைப் பார்த்தான் முத்துசாமி.

''போங்க, அண்ணே!'' என்றும் பாவனையில் முகத்தை அழகாகத் திருப்பிக்கொண்டு உள்ளே ஓடினாள் அஞ்சலை.

சொல்லி வைத்தாற்போல் வானம் இடி இடித்து நல்ல மழையைப் பொழிந்தது! ஊரே குளிர்ந்தது. கஞ்சனூர்க் காளை வந்த அதிர்ஷ்டம் மழை பெய்தது என்று ஊரார் பேசிக் கொண்டார்கள். அதை வாயார வாழ்த்தினார்கள். அஞ்சலைக்கு அதை எப்படி வாழ்த்துவது என்று தெரியவில்லை. அதன் கழுத்தைக் கட்டிக் கொண்டு குதித்துக் கும்மாளமிட்டாள் அஞ்சலை.


ஆரோக்கியத்தை விரும்புவோர்
எப்பொழுதும் லைப்பாய்
உபயோகித்தே நீராடுவார்
விளையாடும்போதும் சரி, வேலை
செய்யும்போதும் சரி, அழுக்கி
லிருந்து நாம் தப்ப முடியாது.
நம் ஆரோக்கியத்திற்கு நிரந்
தரமாக ஆபத்து விளைவிக்கும்
நோய்க் கிருமிகள் அழுக்கில்
இருக்கின்றன. அக் கிருமி
களைக் கழுவிக் களைந்து உங்கள்
ஆரோக்கியத்தைப் பாதுகாப்
பது லைப்பாய் சோப்.
அன்றாடம் லைப்பாய் சோப்
தேய்த்துக் குளித்து உங்
கள் ஆரோக்கியத்தைக்
காத்துக்கொள்ளுங்கள்.
லைப்பாய் ஸ்நானம் புது
மலர்ச்சியூட்டுவது
LIFEBUOY
SOAP
L 278-50 TM




'கூ......' என்று அடித் தொண்டையிலிருந்து குரல் எழுப்பியது இஞ்சின். பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்தவர்களிடமும், வண்டியினுள்ளே அமர்ந்திருந்தவர்களிடமும் திடீரென்று பரபரப்பு அதிகமாயிற்று. இரண்டாவது மணி அடித்து, 'உஸ் . ஸ்... உஸ்.. ஸ்' என்ற பெருமூச்சுடன் வண்டி நகரத் தொடங்கியதும், பிரயாணிகளின் மனத்தில் ஒரு வித அமைதியும் மகிழ்ச்சியும் நிலவத் தொடங்கின.

வண்டி, நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. அநேகமாகத் தொடர்ந்தாற்போல், நான்கைந்து கல்யாண நாட்கள். எல்லா வண்டிகளிலுமே பிரயாணிகளின் கூட்டம் கட்டுக்கடங்காததாக இருந்தது. எழும்பூரிலிருந்து புறப்படும் அன்றைய எக்ஸ்பிரஸ்களில் முதல் வண்டியான திருநெல்வேலி எக்ஸ்பிரஸ், அந்த வண்டி. கூட்டத்துக்குக் கேட்பானேன்? கால் வைத்து ஏறும் படிகளில் கூட, பிரயாணிகள் தொத்திக் கொண்டு நின்றார்கள். உறவினர்கள் வீட்டுக் கல்யாணத்துக்காகப் போய்க் கொண்டிருந்த அவர்கள் யாரும் இத்தகைய இன்னல்களை அனுபவிக்க நேர்ந்ததற்காக வருந்தவில்லை! 'கல்யாண ஸீஸன் அல்லவா, இப்படித்தான் கூட்டமாக இருக்கும்; பொறுத்துக் கொண்டு போக வேண்டியதுதான்!' என்று சமாதானமாகப் பேசினார்கள்! காரணம், அவர்கள் உள்ளத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த மகிழ்ச்சிதான்.

ஆனால், எவ்விதப் பாகுபாடு மில்லாமல் ஏறக்குறைய அயிரம் பிரயாணிகளை இழுத்துச் சென்ற இஞ்சினை இயக்கிக் கொண்டிருந்த டிரைவர் தங்கமுத்துவின் மனத்தில் மட்டும் அந்தகாரம் சூழ்ந்திருந்தது. நெடிய இருப்புப் பாதையின் மேல் கவிந்திருந்த இருளைக் கிழித்துச் சென்று கொண்டிருந்தது இஞ்சினின் முன்புறத்தில் இருந்த 'தலை விளக்கு'. அவர் மன இருளை இழுத்துச் செல்லும் சக்தி, அந்தத் தலைவிளக்குக்கு இல்லையே!

வண்டி சைதாப்பேட்டை தாண்டிக் 'கூ'க் குரலிட்டவாறே ஓடியது.

'முதல் பயர்மென்' அப்துல் ரஸாக், டிரைவர் தங்கமுத்துவின் மனநிலையை, ஷெட்டிலிருந்து இஞ்சினை எடுக்கும்போதே புரிந்து கொண்டு விட்டான். எப்போதும் குதூகலமாக இருக்கும் அவர், அன்றைய தினம் சுரத்தில்லாமல் இருந்தார். ஏறத்தாழ முப்பது வருஷ சர்வீஸ் ஆகிவிட்டது, அவருக்கு. ஆனால், வேலைக்கு வரும் போதோ, வந்த பின்போ அவர் முகத்தில் சோர்வு ஏற்பட்டு யாரும் பார்த்ததில்லை.

அந்தக் காலத்தில், 'அ. ஆ.' கூடப் படிக்காமல் ரயில்வே இலாகாவில் நுழைந்தவர் தங்கமுத்து. சாதாரணக் கூலியாளாகச் சேர்ந்தார். இஞ்சினுக்கு நிலக்கரி தூக்கிக் கொட்டுவது தான் அவர் முதன் முதலாகப் பார்த்த உத்தியோகம். அதற்குப் பின் எப்படியோ 'ஸ்கில்டு' தொழிலாளியானார்; அவருடைய அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும்; இரண்டாவது பயர்மென், முதல் பயர்மென் என்றெல்லாம் உயர்ந்து, இந்தே ஆண்டுகளில் டிரைவராக ஆனார்.

நம்பர் நூற்றுப் பத்தொன்பது 'திருநெல்வேலி எக்ஸ்பிரஸ்' தாம்பரத்தில் மூன்று நிமிஷம் இளைப்பாறி விட்டுப் புறப்பட்டது.

இஞ்சினின் இடதுபுறத்தில் நின்று கொண்டு சாரைப் பாம்புபோல் நீண்டு கிடந்த இருப்புப் பாதையில் கண்களைச் செலுத்தியிருந்தான் ரஸாக். கண்கள் பாதையில் பதிந்திருந்தனவே தவிர, கருத்தெல்லாம் தங்கமுத்துவிடம் இருந்தது. சுமார் ஐம்பது வயதாகிறது, அவருக்கு. அதாவது, அவனைப் போல் இரு மடங்கு வயது! அவருடைய அனுபவங்களும் எண்ணிக்கடங்காதவை. கதை சொல்லுகிற பாணியில் சுவையாகச் சம்பவங்களை எடுத்துச் சொல்லவும் அவரால் முடிந்தது. தன்னுடைய குறைகளையும் தவறுகளையும் எடுத்துச் சொல்லும் போது வியக்கத்தக்க ஒரு அலட்சியமும் நிதானமும் இருக்கும், அவர் பேச்சில். பரமானந்த சிஷ்யனாக இருந்து, திறந்த வாய் மூடாது ரஸாக் கேட்டுக் கொண்டு நிற்பான்.

'அப்படிப்பட்டவர் இன்று ஏன் வாய் மூடி மௌனியாக இருக்கிறார்?'

அவருடைய மௌனத்தைக் கலைக்க வேண்டும் போல் தோன்றியது, அவனுக்கு. மெல்லத் திரும்பி எதிரே நின்று கொண்டிருந்த டிரைவரைப் பார்த்தான். அவர் சர்மயோகியாக மாறியிருந்தார். கண்கள், இருப்புப் பாதையோடு ஐக்கியமாகி இருந்தன.

ரஸாக் ஒரு முறை கனைத்துத் தொண்டையைச் சரிப்படுத்துகிற முறையில் தங்கமுத்துவின் கருத்தைக் கவரப் பார்த்தான். இஞ்சினின் பேய் இரைச்சலிலும், உள்ளே அவர்கள் நின்று கொண்டிருந்த இடத்தில் உண்டான 'உஸ்ஸ்......' என்ற நீராவியின் ஒலியிலும் அவன் கனைப்பு மறைந்து போய்விட்டது! இவ்வளவுக்கும் மேலாக, இரண்டாவது பயர்மென் பொன்னம்பலம், 'பாய்லர்'ரைத் திறந்து நிலக்கரியைக் கொட்டிக் கொண்டிருந்தான். அவன் பண்ணுகிற சத்தத்தில் அதிர்வேட்டின் ஒலிகூடக் காதில் விழாது!

"என்ன ஸார், ஒரு மாதிரியா இருக்கீங்க? உடம்பு சரியில்லீங்களா?" என்றான் ரஸாக்.

சரிவான இடத்தில் வண்டி ஓடிக் கொண்டிருந்தது. எனவே, இஞ்சினின் ஓட்டத்தை நிதானப்படுத்திக் கொண்டே வந்த தங்கமுத்து, மெல்லத் திரும்பி ரஸாக்கைப் பார்த்தார். பின், உயிரற்ற ஒரு சிரிப்பை வெளிக் கொணர்ந்தார்.

'' ஒன்றுமில்லையே !''

'' அப்படிச் சொன்னால் ஆயிடிச்சுங்களா, ஸார்? ..உங்க முகமே காட்டுதே !''

வண்டி சமவெளிப் பாதையை அடைந்ததும் தங்கமுத்து சகஜ நிலைக்கு வந்தார்.

'' என் உடம்புக்கு என்ன கேடு?—நல்லாத்தான் இருக்கு !''

'' அப்போ மனசு சரியில்லேங்கிறீங்களா?''

''ஆம்!'' என்று அசுவாரசியமாகக் தர விழுத்த அவர், வெளியுலகில் ஆட்சி செலுத்தினார். பின், ஏதோ நினைத்துக் கொண்டாற் போல, உட்புறம் திரும்பி ரஸாக்கைப் பார்த்தார். '' ரஸாக்! வெல்லிங்டனைப் பத்தி உன்கிட்டே சொல்லியிருக்கிறேனில்லே ?''

''போத்தனூரிலே, மெக்கானிக்கல் இன்ஜினியராக இருந்தாரே, அவரைத்தானே சொல்றீங்க ?'' என்று கேட்டான்.

'' ஆமாம். அவன் சொல்லுவான், வெறுமனே தொழில் ஞானம் மட்டும் இருந்தால் போதாது. நல்லாப் படிச்சும் இருக்கணுமின்னு...''

'' ஆமாங்க !''

'' அந்த வெல்லிங்டன் இருக்கானே, அவனுக்குத் தங்கமான குணம். இப்போ இருக்கிற அதிகாரிகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால், அவனைக் கையெடுத்துக் கும்பிடணும் ! இந்தியன், சட்டைக்காரன் என்கிற வித்தியாசமில்லாமல் பழகுவான். அதுவும் என்கிட்டே ரொம்பப் பிரியம் அவனுக்கு...''

'' சொல்லியிருக்கீங்களே !''

'' அவன் கிடையராகிச் சீமைக்குப் புறப்பட்டுப் போனான், தொள்ளாயிரத்து நாற்பத்து ஆறிலே. தேநீர் விருந்து, போட்டோ, அது இது எல்லாம் அமர்க்களம். கடைசியா வண்டி புறப்படுகிறபோது நானும் பிளாட்பாரத்திலே இருந்தேன், கையிலே குழந்தையை வச்சுக்கிட்டு !''

'' எந்தக் குழந்தைங்க? பட்டாளத்திலே சேர்ந்திருந்தானே, அவனா ?''

'' இல்லே, இல்லே. அவன் மூத்த பையன். நான் சொல்லுகிறது. மூணாவது—துரைக்கண்ணு அப்போ அவனுக்கு அஞ்சு வயசு. வேடிக்கை காட்டுவதற்காகப் பிளாட்பாரத்துக்கு அழைச்சிட்டுப் போயிருந்தேன். அந்த வெல்லிங்டன் இருக்கானே,—மன்னன் !—எல்லார்கிட்டேயும் கைகுலுக்கிட்டு என்கிட்டே வந்தான். 'என்ன, தங்கமுத்து! உன் கொழந்தையையாச்சும் ரொம்பப் படிக்க வை. செய்வியா, மேன்?'—அப்படீன்னான். அதைக் கேட்டு நான் அப்படியே அசந்து போய்விட்டேன் !''

'' பின்னே, இருக்காதுங்களா ?''

'' ஏதடா அந்தத் துரை சொல்லிட்டுப் போனானே என்று இந்தத் துரையைப் படிக்க வச்சா, இவரு கழிச்சுகட்டு வுட்டது நிற்கிறாரு !''

'' அடேடே, அது என்னுங்க விஷயம் ?'' ரஸாக் கவலையோடு கேட்டான். அவர் சொன்ன பின்புதான், அவருடைய அருமை மகன் துரைக்கண்ணு அந்த வருடம் ஆறாவது பாரம் இறுதிப்பரீட்சை எழுதியிருப்பது அவன் ஞாபகத்துக்கு வந்தது. அன்று மாலையில் தான் பரீட்சை முடிவுகள் வெளியாகியிருந்தன. ஆனால் காலை பத்து மணிக்கே ஒரு தினசரிப் பத்திரிகை காரியாலயத்துக்குப் போன் செய்து, தன் மகன் 'பிளாங்கி' என்பதைத் தங்கமுத்து தெரிந்து கொண்டு விட்டார். அவர் முக வாட்டத்துக்குக் காரணம் அதுதான் என்பதை ரஸாக் புரிந்து கொண்டதும், அவனுக்குச் சற்று ஆதங்கம் ஏற்பட்டது.

'' விஷயமாவது, மண்ணாவது ! பணத்தைத் தண்ணி மாதிரி செலவழிச்சுப் படிக்க வைச்சேன். 'நல்லாப் படி, நல்லாப் படி'ன்னு ஆயிரம் தடவைகள் முட்டிக் கொண்டேன். பலன் பூஜ்யம்தான் !''

'' பெயில் ஆயிட்டானா ஸார், துரைக்கண்ணு ?''

'' பின்னே இவன் படிச்ச லட்சணத்துக்கு 'பர்ஸ்ட் கிளா'ஸிலேயா பாஸ் பண்ணுவான்? சுத்த சோமாரிப் பயல் ! சிகரெட்டு ஊதுகிறதும், சினிமாவுக்குப் போகிறதும், வீட்டிலே தங்காமல் அலைகிறதும் ! ஹூம் !''

'' விவரம் தெரியாத பையன்தானே ஸார்? நாளாவது திருந்தி விடுகிறான்.''

அவர் உதட்டைப் பிதுக்கினார், அவநம்பிக்கையுடன்.

'சிங்கப் பெருமாள் கோவில் 'அவுட்டர்' வந்திருக்க வேண்டுமே ?' என்ற நினைவில் வெளியே நோக்கிய ரஸாக், சட்டென்று தலையை உள்ளுக்கு இழுத்துக் கொண்டான்.

'' ஸார்! ஸார்! கூட்ஸ் வண்டி கிராஸிங் போலேயிருக்கு. 'காஷன் ஸிக்னல்' இறங்கல்லே. மெள்ளமாய்ப் போங்க....''

நிமிஷ நேரத்தில் வண்டியின் வேகத்தைக் குறைத்தார், தங்கமுத்து. கவனத்தோடு இருந்து ஸ்டேஷனைத் தாண்டியதும் தங்கமுத்து மீண்டும் ஆரம்பித்தார்.

'' அட, நாம்தான் படிக்கல்லே. நம்ப குழந்தை குட்டிகளாவது நிறையப் படிச்சு, பெரிய கௌரவமான உத்தியோகம் பார்க்க வேணுமென்று ஆசை. மூத்தவன் மகா முரடு. யாருக்கும் தெரியாமல் சொல்லாமல் பட்டாளத்தில் போய்ச் சேர்ந்துட்டான். தொலைந்து போகிறது என்று விட்டுத் தொலைத்தேன். அடுத்தது தான், பெண். அது நன்றாகப் படிச்சது. மூன்றும் பாரத்துக்கு மேலே படிக்க வைக்க வீட்டில் சம்மதிக்கல்லே !...இப்போது இந்தப் பயலும் இப்படி மோசம் பண்ணி விட்டான் ! அவனைக் கட்டி வைத்துத் தோலை உரிக்க வேணும். அப்பத்தான் புத்தி வரும்.''

கடுமையான உணர்ச்சிப் பெருக்கில், கையில் பிடித்திருந்த 'ரெகுலேட்ட'ரை ஒரு அழுத்து அழுத்தினார். வண்டி, காற்றினும் கடிய வேகத்தில் பறக்கத் தொடங்கியது.

'' படிப்பு வேறே, சம்பாத்தியம் வேறே, ஸார் ? ..படித்தால் மட்டும் வேலை கிடைத்து விடுகிறதா ? ..''


'' ஹூம்! நீ சின்னப் பிள்ளை. உனக்கென்ன தெரியும் ? நான் பட்ட கஷ்டங்களெல்லாம் என் மகனும் படவேண்டுமா ? அவனாவது, அழகாகச் சட்டை, நிஜார் போட்டுக்கொண்டு ஆபீஸ் போய்வரக் கூடாதா ?...''



# உயர்தரத்திற்கும் சிறப்பான த்வனிக்கும் இணையற்ற இரு


## அற்புதமான நேஷனல்–எக்கோ ரேடியோ மாடல்கள்!

இதோ செவிக்கினிய விருந்தளிக்கும் இருநேர்த்தியான நேஷனல்-எக்கோ ரேடியோ மாடல்கள். உயர்தரம் வாய்ந்த இந்த ரேடியோக்களின் ஒலிபரப்புகளை அற்புதமாகக் கேட்கலாம்! இவைகள் 'மான்ஸூனைஸ்' செய்யப்பட்டவை. மற்றும் ஒரு வருஷத்திற்கு உத்திரவாதம் கொண்டவை. உங்களுக்கு அருகாமையிலுள்ள நேஷனல்-எக்கோ ரேடியோ வியாபாரியிடம் இவைகளை இயக்கிக் காண்பிக்கச் சொல்லுங்கள்!



மாடல் 717: தங்கவர்ண வேலைப்பாட்டுடன்கூடிய, மரூன் நிற பிளாஸ்டிக் காபினெட். மாடல் U-717: 5 வால்வுகள்; 3 பாண்டுகள்; 250 வோல்ட் ஏஸி/டிஸி செட். மாடல் B-717: 4 வால்வுகள்; 3 பாண்டுகள்; டிரை பாட்டரிசெட். ரூ. 250/-

விலைகள் நெட்.
உள்ளூர் வரிகள் தனி



மாடல் 187: 6 வால்வுகள், 8 பாண்டுகள். அழகிய மர காபினெட். மாடல் A-187 ஏஸிசெட்; மாடல் U-187 ஏஸி/டிஸி செட். ரூ. 475/-

நேஷனல்–எக்கோ
ரேடியோக்கள் சிறந்தவை —
அவைகள்
மான்ஸூனைஸ்
செய்யப்பட்டவை

**ஜெனரல் ரேடியோ அண்ட் அப்ளையென்ஸெஸ் பிரைவேட் லிமிடெட்**

ஆபேரா ஹவுஸ், பம்பாய் 4 • 3, மதன் ஸ்ட்ரீட், கல்கத்தா 13 • 1/18 மௌண்ட் ரோடு, மதராஸ் • 36/79 சில்வர் ஜுபிலி பார்க் ரோடு, பங்களூர் • ஜோக்கிஹவுஸ் காலனி, சாந்தினி சௌக், டில்லி

# 'அனஸின்'



உங்களுடைய

**தலைவலி,**
**ஜலதோஷம்,**
**ஜுரம் மற்றும்**
**தசைவலிகளுக்கு** நிவாரணமளிப்பதில்

**சிறந்தது** எனெனில் அதில் நான்கு மருந்துகள்

சேர்ந்துள்ளன

'அனஸின்' ஒரே ஒரு மருந்துமட்டுமல்ல, அது தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி மற்றும் தசைவலிகளிலிருந்து முற்றிலும் துரித நிவாரணம் அளிக்கும். ஒரு டாக்டரின் குறிப்பிற்கு ஒப்பான, விஞ்ஞான முறையில் தயாரித்துள்ள நான்கு மருந்துகளின் கலவையாகும். ஒரே மருந்து சேர்த்துள்ள எந்த வலி நிவாரண மருந்தும் அனஸினைப் போல, துரிதமாயும்... அபாயமின்றியும், நிச்சயமாயும் நிவாரணம் அளிக்க இயலாது. எப்பொழுதும் வீட்டில் 'அனஸின்' வைத்திருங்கள்.




GEOFFREY MANNERS & CO. PRIVATE LTD REGISTERED USER

K. 66(R) TAM

தங்கமுத்து பேசவில்லை. மகனிடம் பாசம் மிகுந்த தந்தையின் இதயம் பேசியது.

பல வருஷங்களாக, அணு அணுவாக அபிலாஷையை இதயத்தில் பக்குவமாக வளர்த்து வந்திருக்கிறார், அவர். அதன் ஆணி வேர் இப்போது ஆட்டம் கொடுக்கத் தொடங்கியதும் அவரால் தாங்க முடியவில்லை.

எத்தனை கனவுகள்! தம்முடைய குமாரர்கள் கோட்டும் சராயுமாக அலுவலகத்துக்குப் போவதைப் போலவும், வேலை பார்ப்பதைப் போலவும் எத்தனை கனவுகள்! அவர்கள், சம்மட்டியும் கையுமாக இரவு பகல் பாராமல் வேலை செய்ய வேண்டியதில்லை; முதுகு எலும்பு வளைந்து போகும்படியாகக் குனிந்து நின்றவாறே கரி எடுத்துத் தள்ள வேண்டியதில்லை; நடுக் கோடையில், 'பாய்லர்'ருக்கு அருகே நின்று வேக வேண்டியதில்லை.

ஆனால், துரைக்கண்ணு பரீட்சையில் தோல்வி அடைந்து விட்டானே! உயர்நிலைப் பள்ளிப் பரீட்சையையே தாண்ட முடியாதவன், கல்லூரியில் எப்படிக் கால் எடுத்து வைப்பான்?... ஹூம்!



பாய்லரில் காய்ந்த நீரைப் போல், தங்கமுத்துவின் இதயம் கொதித்தது. இஞ்சினின் சீறலைப் போல, வெம்மையோடுவந்தன மூச்சுக்காற்று.

"விழுப்புரம் வரட்டும். இஞ்சினை லோகோ ஷெட்டில் கொண்டு போய்த் தள்ளி விட்டு, அந்தப் பயலை உண்டு, இல்லை என்று ஆக்கி விடுகிறேன்." நெருப்பைக் கக்கினார் டிரைவர்.

"அடிச்சு, மிடிச்சுத் துன்புறுத்தாதீங்க, ஸார். சின்னப் பையன்."

"இம்" என்று உறுமினார், அவர்.

செங்கற்பட்டில் வண்டி நின்றது. எண்ணெய்த் தகரத்துடன் ரஸாக் கீழே இறங்கினான். முன்புறத்துச் சக்கரங்களுக்கு எண்ணெய் போடுகையில் அவன் சிந்தனை சுழன்றது. நெடு நாளையப் பழக்கத்தினால் தங்கமுத்துவின் குணம் அவனுக்குத் தெரியும். எந்த விஷயத்திலும் தீர்மானமும் தீவிரமும் உடையவர், அவர். பின்விளைவுகளைப் பற்றி யோசிக்கவே மாட்டார். ஆகவே, இப்போது இருக்கும் வேகத்தில் துரைக்கண்ணுவைக் கண், மூக்கு தெரியாமல் அடித்து நொறுக்கி விடுவார். விழுப்புரம் போய்ச் சேர்வதற்குள் அவரை எப்படியேனும் சமாதானம் செய்தால் தான், துரைக்கண்ணு பிழைப்பான்.

ரஸாக் இஞ்சினில் ஏறிக் கொண்டான். கார்டு, பச்சை விளக்கைக் காட்டினார்.

வண்டிக்குள் இருந்த பிரயாணிகள் சந்தோஷமாகப் பேசிச் சிரித்துக் கும்மாளமிட்டுக் கொண்டிருந்தனர். தங்கள் உயிர்களைப் பற்றிய சிந்தனையே அவர்களுக்கு இல்லை. ஆனால், அவர்கள் உயிர்களைத் தம் கைக்குள் தாங்கி நின்ற ஒரே மனிதர் சிந்தனையே உருவாய், சிலையே கோலமாய்த் தவித்துக் கொண்டிருந்தார்.

அச்சரப்பாக்கத்தில் நின்று தண்ணீர் பிடித்துக் கொண்டார் தங்கமுத்து. சாதாரணமாக அவர் அப்படிச் செய்வதில்லை. சிக்கனமாகத் தண்ணீரைச் செலவழித்து, விழுப்புரம் செல்லும் வரை தாக்குப் பிடித்துக் கொள்வார். இன்று மட்டும் ஏனோ தண்ணீரை ஒரேயடியாக நீராவியாக்கிப் பாழடித்துக் கொண்டிருந்தார். அல்லது அவர் நெஞ்சின் கனலில் நீர் ஆவியாகிக் கொண்டிருந்ததோ?

"ஒரு வேளை நம்பர் விட்டுப் போயிருக்கலாம், ஸார்!" என்றான் ரஸாக் செயற்கையான துடிப்புடன். சொல்லி விட்டு, "நாளை பேப்பரையும் பார்த்து விட்டு, முடிவாகக் கொள்ளலாம். இல்லீங்களா?" என்றவாறே அவரைக் கூர்ந்து கவனித்தான்.

"நான் பேப்பரைப் பார்ப்பதற்கு முன்பே போனில் கேட்டுத் தெரிந்து கொண்டேன்."

"அவன் மட்டும் தவறுதலாகக் கூறியிருக்க மாட்டான் என்று என்ன நிச்சயம்?"

"ரஸாக்! என் மனநிலை உனக்குத் தெரியாது. என் ஆசையின் அளவை நீ உணர மாட்டாய். என் நம்பிக்கையின் ஆழத்தை நீ அறிய மாட்டாய். எனக்கு வாழ்வில் வேறு எந்த லட்சியமும் இல்லை, என் மகன் நிறையப் படித்துப் பெரிய உத்தியோகம் பார்க்க வேண்டும் என்பதைத் தவிர..."

"...... .."

திருநெல்வேலி எக்ஸ்பிரஸ், திண்டிவனத்தைத் தாண்டி, மைலம் ஸ்டேஷனுக்கு அருகேயிருந்த மேடான பாதையில் முக்கி முனகியவாறே ஓடிக் கொண்டிருந்தது.

"அவனை விட்டால் எனக்கு வேறு யார் இருக்கிறார்கள்? அவனுக்கு அடுத்தாற் போல் இரண்டும் பெண் குழந்தைகள்! எவ்வளவு தான் ஆசையாகப் படிக்க வைத்தாலும், பிறர் வீட்டுப் பொருளாக ஆகவேண்டியவர்கள் தானே, அவர்கள்..."

"இந்தத் தடவை இல்லாவிட்டால் அடுத்த தடவையில் துரைக்கண்ணு பாஸ் செய்துவிடுவான், ஸார்...!"

"சொன்னதையே திரும்பச் சொல்கிறாய்! அவனுக்குப் படிக்க வேண்டும் என்ற எண்ணமே கிடையாது. அதைத்தான் என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை. என் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற உணர்வே அவனுக்கு உண்டாக வில்லை, ரஸாக்...!"

வண்டி, பேரணி ஸ்டேஷனைக் கடந்து செல்லும்போது 'கூ' என்று ஓலமிட்டது. தங்கமுத்துவின் இதயத்தின் பிரலாபமும் அந்த ஓலத்துடன் சேர்ந்து அலறியது.

"இப்படிப்பட்ட ஒரு மகன் இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன? இவன்

தொலைந்து போனால், ஒரு வழியாகத் தலை முழுகி விட்டுப் பிள்ளையே பிறக்கவில்லை என்று நினைத்துக் கொள்கிறேன்.'' தங்கமுத்துவின் முகம் தணலாகப் பிரகாசித்தது.

ரஸாக் திடுக்கிட்டான்.

தங்கத்தையும் முத்தையும் ஒத்த குணமுடைய 'ஸார்', இப்படி மாறியதை அவனால் நம்பக்கூட முடியவில்லை. ஆயிரம் உயிர்களுக்குக் காவலனாக இருக்கும் அவர், ஒரு உயிருக்கு மட்டும் காலனாக மாறி விடுவாரோ என்ற அச்சம் ஏற்பட்டது. 'ஆண்டவனே, எவ்விதச் சம்பவமும் நேராமல் வண்டி விழுப்புரம் போய்ச் சேர வேண்டுமே?'

முண்டியம்பாக்கம் ஸ்டேஷனில் எல்லாக் கைகாட்டிகளும் பச்சை ஒளி காட்டி, எக்ஸ்பிரஸை வழியனுப்பி வைத்தன.

பொன்னம்பலம் ரஸாக்கை விழித்துப் பார்த்தான். வண்டி, இருப்புப் பாதையின் மேல் சக்கரங்களோடு உருண்டு செல்கிறதா, அல்லது காற்றில் பறந்து செல்கிறதா என்று தீர்மானிக்க முடியாத வேகத்தில் சென்று கொண்டிருந்தது. பையிலிருந்து கடிகாரத்தை எடுத்துக் காட்டினான், ரஸாக். சரியான நேரத்தில் திண்டிவனத்தை விட்டுப் பதினைந்து நிமிஷம் முன்னதாக ரயில் ஓடிக் கொண்டிருந்தது!

தங்கமுத்துவின் மனமோ, வெகு நேரத்துக்கு முன்னதாகவே விழுப்புரத்தை அடைந்து விட்டிருந்தது. அடைந்து, ரயில்வே காலனியில் அவரை வீட்டில் கொண்டுபோய்ச் சேர்த்திருந்தது. துரைக்கண்ணுவைக் கயிற்றால் கட்டி, தூணில் பிணைத்து, 'பளார், பளார்' என்று கன்னத்தில் அறைந்துகொண்டிருந்தார், அவர். 'ஐயோ, அப்பா!... இல்லை, இல்லை ...' என்று அவன் கதறி அழுகிறான். இவர் அப்படியும் விடவில்லை. அவன் மயங்கிக் கீழே தள்ளாடிச் சாயும் வரை அடித்து, நொறுக்கி, இட்டி, குட்டி...

தங்கமுத்துவின் உடல் வெடவெடவென்று நடுங்க ஆரம்பித்தது. துரைக்கண்ணுவுக்குத் தெரிந்திருக்கும், தான் பாஸாகவில்லை என்ற செய்தி. அவரைக் காண அஞ்சி, எங்கேனும் ஒளிந்து கொள்ள முயற்சி செய்வான். அதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்பதற்காகத் தானே, முதல் வண்டியிலேயே வருகிறார்? முறைப்படி பார்த்தால், அவர் தூத்துக்குடி எக்ஸ்பிரஸில் வரவேண்டும். அவ்வளவு நேரம் வரை அவரால் பொறுத்திருக்க முடியவில்லை. முதல் வண்டியின் டிரைவருடன் வேலை மாற்றம் செய்துகொண்டு விட்டார்!

வண்டி, 'லெவல் கிராஸிங்'கைக் கடந்தது.

துரைக்கண்ணுவைத் தப்ப வைப்பதற்கு என்ன வழி என்று ரஸாக் சிந்தித்துக் கொண்டிருந்தான். ஸ்டேஷன் வந்துவிட்டதா என்று அறிந்து கொள்ளும் நோக்கத்துடன் தலையை நீட்டிப் பார்த்தான் ரஸாக். பார்த்தவன் திடுக்கிட்டான். 'அவுட்டர்' கைகாட்டியில் சிவப்பு விளக்கு தெரிந்தது! தங்கமுத்துவின் கண்கள் எதிரே நோக்கிக் கொண்டிருந்தாலும், கைகாட்டியின் குறிப்பை உணர்ந்ததாகவே தெரியவில்லை.

'ஸார், ஸார்... அவுட்டர் இறங்கலை...'' முழு வேகத்துடன் ரஸாக் அலறினான்.

''என்னது?''

''அவுட்டர் இறங்கலை...''

வெடவெடத்துக் கொண்டிருந்த தங்கமுத்துவின் கைகள் திடீரென்று பலமிழந்து, வசமிழந்து நின்றன. உணர்ச்சிப் புயலில் சிக்கியிருந்த அவருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. தடுமாறினார். தத்தளித்தார். முழு பலத்தையும் பிரயோகித்து 'பிரேக்' போட முயற்சி செய்தார். கைகள் அசையவில்லை. சட்டென்று நிலைமையைப் புரிந்து கொண்டான் ரஸாக். தங்கமுத்துவைத் தள்ளி எதிலைதப் போல் நகர்த்திவிட்டு, 'பிரேக்' போடும் சக்கரத்தை இயக்கினான், மிகுந்த முயற்சியுடன். 'அவுட்டர்' நெருங்கிக்கொண்டிருந்தது. வாயு வேகத்தில் சென்று கொண்டிருந்த ரயிலை நிறுத்துவது எளிதாக இல்லை. இஞ்சின் கைகாட்டியைத் தாண்டாமல் நிற்க வேண்டுமே என்ற கவலையே அவன் மனத்தில் மேலோங்கி நின்றது. 'அவுட்டரி'லிருந்து சுமார் முந்நூறு கஜ தூரத்துக்கப் பால் வண்டியின் வேகம் சற்றுக் கட்டுக்கடங்கி வருவதை ரஸாக் உணர்ந்தான். உடல் சக்தியை எல்லாம் திரட்டித் தன் கைகள் மூலம் பிரயோகித்துக் கொண்டிருந்தான். கைகாட்டிக்கும் இஞ்சினுக்கும் இடையே உள்ள தூரத்தைக் கண்கள் அளவெடுக்கையில்...

'யார், அது' இருப்புப் பாதை நடுவே வந்து விழுகிறானே!'

'அட, ஆண்டவனே! இது என்ன புதுத் தொல்லை? . இஞ்சின் அவன் மேல் ஏறிவிடத் தான் போகிறது. அவன் சாகத்தான் போகிறான்...நாகூர் ஆண்டவனே! என்னை ஏன் இந்தப் பாபத்துக்கு ஆளாக்குகிறாய்...?'

இஞ்சினுக்குக் கூட இரக்கம் உண்டுபோல் இருக்கிறது. உயிரை மாய்த்துக் கொள்ளும் எண்ணத்துடன் விழுந்து கிடந்த மனிதனைத் தொடக் கூசி ஒரு அடி அப்பால் நின்றது.

ரஸாக் கீழே குதித்து ஓடி வந்தான். பயம் காரணமாக அரை உயிரோடு கிடந்த அந்த மனிதனைத் தூக்கினான்...துரைக்கண்ணு!

''துரைக்கண்ணு ...!''

அவன் கண்களைத் திறக்கவில்லை.

''ஐயய்யோ!...எங்கப்பா அடிப்பாரு...''

''அதற்காக இப்படிச் செய்யலாமா?''

''நான் பெயிலாயிட்டேன்......எங்கப்பா அடிப்பார்...''

நிதானமாக இறங்கி வந்த தங்கமுத்து, நான்கு அடிக்கு அப்பாலிருந்து இதைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

''அடிக்காமல் நான் பார்த்துக்கிறேன்!''

''ஐயய்யோ! வேண்டாம்......எங்கப்பா அடிப்பார். நான் பெயிலாயிட்டேன்...''

ரஸாக் தங்கமுத்துவைப் பார்த்தான். ஆண்டவன் அவர் சினத்துக்குச் சிவப்பு விளக்கைக் காட்டி, அபாய அறிவிப்பு கொடுத்துவிட்டான். அவர் கண்கள் கலங்கின.

''கைகாட்டி இறங்கிடுச்சுங்க...'' என்று குரல் கொடுத்தான், பொன்னம்பலம்.

இஞ்சினையடுத்த பெட்டியில் துரைக்கண்ணுவை ஏற்றி விட்டு, வண்டியைக் கிளப்புகையில், அடுத்த பரீட்சையில் அவன் வெற்றி பெறுவான் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை தங்கமுத்துவின் நெஞ்சில் மூண்டு விட்டிருந்தது!

அதன் மதிப்பே அலாதி ✳




தி நியூ ஷோராக் மில்ஸ் அண்ட் மானுபாக்சரிங் கம்பெனி லிமிடெட், நடியாட்.

# தமிழ் கூறும் நல்லுலகம்

பம்பாய் மாநகரை அடுத்துள்ள தாரு தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு விழா மே மாதம் 17, 18 தேதிகளில் காஞ்சி பச்சையப்பர் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் புலவர் ந. சஞ்சீவி எம். ஏ. அவர்கள் தலைமையில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

திரு செ. மு. ர. கண்ணன் அவர்கள் எல்லோரையும் வரவேற்று வரவேற்புரை நிகழ்த்தினார். பம்பாய் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் உயர்திரு எம். ஆர். ஜம்புநாதன் அவர்கள் விழாவைத் துவக்கி வைத்தார்.

இரு தினங்களிலும், திரு ந. சஞ்சீவி அவர்கள் இயல், இசை, நாடகம் என்ற தலைப் பின்கீழ் முத்தமிழ் இலக்கியச் சொற்பொழி வாற்றி மக்களை இலக்கிய வெள்ளத்தில் மூழ்கச் செய்தார்.

முதல் நாள் ஏ. எஸ். ராஜலட்சுமி குழுவினர்கள் இன்னிசை விருந்தும், இரண்டாம் நாள் கவிமணிதாசன் - ஆறுமுகம் குழுவினர்கள் கவிமணி - தேசிக விநாயகம் பிள்ளை இயற்றிய "ஆசிய ஜோதி" இன்னிசைக் கதை விருந்தும் அளித்தனர்.

★

தமிழகத்தில் பிறந்து ஆந்திரப் பிரதேசத்தில் உத்தியோகத்திலும் மற்றும் தொழில்களிலுமுள்ள தமிழர்கள், குழந்தைகள் கல்விபயிலவும் கலை வளர்க்கவும் பெஜவாடாவில் தென்னிந்தியக் கலைமன்றம் என்ற சங்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தச் சங்கத்தின் ஆதரவுடன் திருவள்ளுவர் தமிழ்ப் பாடசாலை நடக்கிறது. அதில் ஐந்தாம் வகுப்புகள் வரையில் கடந்த மூன்று ஆண்டுகளாய் நன்கு நடத்தி வருகிறார்கள்.

திருவள்ளுவர் தமிழ்ப் பாடசாலையின் மூன்றாம் ஆண்டு விழாவும் பெற்றோர் தினமும் சமீபத்தில் வெகு சிறப்பாக நடந்தேறின. பள்ளிச் சிறுவர்களால் கடவுள் வாழ்த்துடன் விழா ஆரம்பமாகியது. வந்திருந்த பெற்றோர்களை வரவேற்றுத் திரு சி. எல். ரங்கசாமி அவர்கள் பேசினார். விழாவுக்குத் தென் பிராந்திய ரயில்வே டிவிஷனல் சூப்பரின்டென்டண்ட் திரு எஸ். ராமகிருஷ்ணன் அவர்கள் தலைமை வகித்துச் சிறப்பித்தார்.

பள்ளிச் சிறுவர்களின் சங்கீதம், நாட்டியம், நாடகம் முதலிய கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருந்தன. ஸ்ரீமதி ராமகிருஷ்ணன் அவர்களால் தேர்வு பெற்ற சிறுவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

★

சிவகங்கைக்குச் சிருங்கேரி சங்கராச்சாரியார் சமீபத்தில் விஜயம் செய்திருந்தார். சிவகங்கை மடத்துக்குப் பக்கத் திலுள்ள ஆலயம் இல்லாக் குறையை ஸ்ரீ ஜகத்குரு சிருங்கேரி சங்கராச்சாரியார் சுவாமிகள் ஒரு நூதன ரத்ன கர்ப கணபதி ஆலயப் பிரதிஷ்டை செய்து நிவர்த்தி செய்தார்.

அன்று மாலை ஸ்ரீ சிருங்கேரி ஆசார்யாள் ஆலயத்துக்கு விஜயம் செய்து ஸ்ரீ மகாகணபதிக்குப் பிரத்தியேக இயந்திர ஸ்தாபனம் செய்து, கும்பாபிஷேகத்தை நடத்திவைத்து, கணபதிக்கு நூதனப் பட்டு வஸ்திரம் ஒன்றைச் சாத்தி, முதல் பூஜையை அவர்களே நடத்தி வைத்தார்கள்.

★

திருவொற்றியூர் மாதர் சங்கத்தார் தங்கள் முதலாண்டு நிறைவு விழாவை மே மாதம் 30ந் தேதி வெகு விமரிசையாகக் கொண்டாடினார்கள். திருமதி பார்வதி சீனிவாசன் இவ்விழாவுக்குத் தலைமை வகித்துச் சிறப்பித்தார்கள். இச்சங்கத்தின் ஸ்தாபகரும், காரியதரிசியுமான ஸ்ரீமதி சிவகாமி சபேசன் எல்லோரையும் வரவேற்றுப் பேசினார். பலவித கேளிக்கை நிகழ்ச்சிகள் இவ்விழாவில் நடைபெற்றன. கூடியிருந்த திரளான பெண்மணிகளும், பிரமுகர்களும் அவற்றை மிகவும் ரசித்தனர்.

★

கல்கத்தா தமிழ்ச் சங்கத்தில் மே 24-ந் தேதி சேக்கிழார் தினம் கொண்டாடப்பட்டது. சங்கத் தலைவர் திரு எஸ். பி. வெங்கிடபதி தலைமை வகித்தார். திரு ந. சிங்காரம் சேக்கிழாரின் பெருமைகளை எடுத்துக் கூறினார். சேக்கிழார் மக்கள் உய்ய வழிகாட்டி உலகம் யாவும் நலம் பெற வழி வகுத்தாரென்றும், அடியார்களின் பெருமைகளை அனைவரும் அறிந்து அவர்களின் வழிச் சென்று எல்லாம் வல்ல பரம்பொருளை நாடி இன்புற வழிகாட்டினார் என்றும் தமது சொற்பொழிவில் குறிப்பிட்டார். திரு சாமி அவர்கள் பேசுகையில், சேக்கிழாரின் காலத்தில் அரசாங்கம் எவ்வகையில் சீர்ப்பட்டுச் சிறப்பாக இருந்ததென்றும் விளக்கினார். செயலாளர் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது.

★

ஸ்ரீ நெறையூர் பெருமாள்மலை பிரமோத்ஸவ விழா மே மாதம் 22ந் தேதி முதல் ஜூன் 1-ந் தேதி வரையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. மே 31ந் தேதி வரையில் தினசரி இரவில் வாகனங்களில் சுவாமி புறப்பட்டு வந்தார். ஊரைப் பார்த்தால் தேவலோகம் மாதிரி காட்சி அளித்தது. மின்சார விளக்குகளால், விழாவைச் சிறப்புற நடத்தி வைத்த தேவஸ்தான அதிகாரி திரு எம். பி. சுந்தரேசன், முன்சீப் வி. ஆர். அவதானி அய்யர், ஏ. எம். முத்துகிருஷ்ண குட்டா, எம். கே. துரைசாமி ரெட்டியார் ஆகியவர்களை மக்கள் மிகவும் பாராட்டினார்கள். சுகாதார இலாகா, போலீஸ் நிர்வாகம் இவை மிகவும் திருப்திகரமாக சேவை செய்தன.

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam

# வேர்க்குரு

## தொல்லையை ஒழிக்கும் ஜோடி!

இதமளிப்பதும், கிருமிகளை ஒழிப்பது மான ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் சோப்பு, வேர்க்குரு தொல்லைக்குக் காரணமான அடைபட்ட சரும துவாரங்களை சுத்தம் செய்கிறது.

உடம்பில் தூவிக்கொள்ள சுகமான ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடரை ஸ்நானத்திற்குப்பின் உபயோகித்தால் அது உங்களை நாள் முழுதும் சுகமாயும் புத்துணர்ச்சியுடனும் வைக்கும்.




# ஜான்ஸன்ஸ்

ப்ரிக்லி ஹீட் சோப் மற்றும் பவுடர் — சேர்ந்து வேலை செய்யும் ஜோடி

ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன் ஆப் இந்தியா பிரைவேட் லிமிடெட்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon